26-2

ஸ்ரீ

மஹர்ஷி வாய்மொழி

(இரண்டு பாகங்கள்)

4983
R65 (ரமண)

ஸ்ரீ ரமணாச்ரமம்,
திருவண்ணாமலை.

26-2

ஸ்ரீ

மஹர்ஷி வாய்மொழி

(இரண்டு பாகங்கள்)

கோவிலூர் ஆதீனம்
4983
R85 ரமண
கோவிலூர்-630 302

உ. கோவிலூர்
KOVILOOR
MADALAYAM
மடாலயம்

மூன்றாம் பதிப்பு

இது
திருவண்ணாமலை, ஸ்ரீரமணாச்ரமம், ஸர்வாதிகாரி
நிரஞ்ஜனானந்த சுவாமிகளால்
பிரசுரிக்கப்பெற்றது.
1949

All rights reserved by the Publisher

[விலை ரு 1—0—0

Printed at the Liberty Press, Madras

முகவுரை

பகவான் ஸ்ரீரமண மஹர்ஷிகளிடம் அவ்வப்பொழுது பக்தர்கள் கேட்டடைந்த பல அருண்மொழிகளைத் திரட்டிப் பலர்க்கும் பயன்படுமாறு மஹர்ஷி வாய்மொழி என்னும் இந்நூல் பிரசுரிக்கப் பெறுகின்றது.

இதிற் காணும் ஐயங்கள் நம்மில் அநேகர்க்கும் அடிக்கடி தோன்றி மனத்தைப் பெரிதும் அலைக்கின்றன. பகவான் அருளிய வாய்மொழி மெய்ஞ்ஞானசாரமாய் அவரது சர்வோத்தம அநுபூதியை ஆதாரமாகக் கொண்டிருப்பதாலும், முமுக்ஷு உண்மையை அறிய முயல்வது மனிதனது சாதாரணப் பகுத்தறிவைக்கொண்டேயாதலாலும், யதார்த்தமான ஒரே உண்மை பரமாத்மா அல்லது ப்ரஹ்மமே யென்னும் பரிபூர்ண அத்வைததத்வம் இந்நூலினும் தெளிவுற வேறெங்கும் விளக்கப்படவில்லை.

உண்மை என்றுமெவர்க்கும் ஒன்றேயாதலால், தனது சொந்த அநுபவத்தையே நன்காய்ந்து, தன திருப்பின் மூலமாம் இதயத்தைத் தேடுமாறும், அதுவே சாச்வத சத்ய மென்றும், பிறவனைத்தும் அம்மூலத்தின் வெளித் தோற்றங்களே யென்றும் சிரத்தையுள்ள சாதகனுக்கு ஸ்ரீ பகவான் வழி காட்டுகிறார்.

மஹர்ஷிகளின் வதனாரவிந்தத்தினின்று வெளிப்படும் மொழியெல்லாம் உபநிடத ஞான சாரம். அவ்வுண்மையே அவரது திருமேனி. ஆதலின் சிரத்தையுடன் இந்நூலை ஆய்வோன் சாதனானுகூலமான போதனை பெறுவதோடு, ஸத்தே தன் இயற்கை என்னும் நிச்சயமும் பெறுவான். சாதனையைப் போஷிப்பது இந்தத் திடநிச்சயமே.


மஹர்ஷிகளின் வாய்மொழி ஸத்யத்தின் வாய்மொழியே.

அகவுரை

முதற் பாகம்

இரண்டாம் பாகம்

26-2



பகவான் ஸ்ரீ ரமணமஹர்ஷிகள்

ஸ்ரீ

மஹர்ஷி வாய்மொழி

முதற் பாகம்

I

தொழிலும் துறவும்

சிஷ்யன்:—மனிதன் அறிவா லடைந்தநுபவிக்கத் தக்க உயர் நலன் யாது?

மஹர்ஷி :—ஆத்மஞானமே.

சி:—குடும்பி ஆத்மஞானம் அடையமுடியுமா?

ம :—ஆஹா! குடும்பியோ, மற்றவனோ, யாராயிருந்தாலும் ஆத்மஞானமடைய முடியும்; ஏனெனில் அது இங்கே இப்பொழுதே பிரத்தியக்ஷமா யிருக்கிறது. அப்படியில்லாமல், பிரயத்நத்தால் ஏதோ ஒரு காலத்தில் நூதனமாய் அடைபடுபொருளாயிருந்தால் அதைத் தேடியடைதலிற் பயனென்ன? ஸஹஜமாயில்லாதது ஸ்திரமாயுமிராது. ஆகையால் ஆத்மா இங்கே இப்பொழுதே பிரத்யக்ஷமா யிருக்கிறது எனப்பட்டது.

சி :—ஸமுத்ரத்துள் மூழ்குமோர் உப்புப்பொம்மை நீர் புகாச் சட்டை (waterproof coat) யாற் காப்பாற்றப் படாது. நாள் முழுவதும் நாம் உழைக்கும் இவ்வுலகம் ஒரு ஸமுத்ரம் போன்றது.

ம :—ஆம். மனமே நீர்புகாச் சட்டை!

சி:—அப்படியானல், ஒருவன் தன் வேலையைச் செய்துகொண்டே ஆசையற்றவனய், தன் ஏகாந்தத்தில் இருக்கலாம். ஆனல் வாழ்க்கையின் கடமைகள், தியானம் ஸ்தோத்ரம் செய்யக்கூட இடங்கொடுப்பதில்லை.

ம:—ஆம். ஆசையுடன் செய்யும் வேலையெல்லாம் விலங்கு போற் பந்தமே. ஆனல் பற்றின்றிச் செய்யும் வேலை, செய்வோனைப் பந்தப்படுத்துவதில்லை. அவன் உழைக்கும்போதுகூட ஏகாந்தத்திலேயே இருக்கிறன். தன் கடமையைப் புரிவதே உண்மைவணக்கம். கடவுளிடம் நிற்பதொன்றே ஆசனம்.

சி:—வீட்டைத் துறக்க வேண்டாமா?

ம:—அதுவே உன் விதியாயின் இக்கேள்விக்கு இடமேயில்லை.

சி:—உங்கள் இளமையில் நீங்கள் மாத்திரம் ஏன் வீட்டை விட்டு வந்துவிட்டீர்கள்?

ம:—ஈசுவரஸங்கல்பதியாலன்றி ஒன்றும் நடப்பதில்லை. இவ்வாழ்வில் ஒருவன் நடத்தைமுழுதும் அவன் பிராரப்தத்தால் ஏற்படுகிறது.

சி:—ஆத்மவிசாரத்திலேயே என் பொழுதையெல்லாம் செலவழிப்பது நல்லதல்லவா? அது அஸாத்யமானல் நான் சும்மா விருக்கவேண்டியதுதான?

ம:—வேறெரு வேலையும் செய்யாமல் சும்மா விருக்க முடியுமானல் மிக நல்லதே. அப்படி யிருக்க முடியாதபோது ஆத்ம ஸாக்ஷாத்காரவிஷயத்தில் சும்மா விருப்பதால் என்ன பயன்? ஒருவன் உழைக்கவேண்டி யிருக்கிறவரையில், தன்னை அறியும் முயற்சியைக் கைவிடக் கூடாது.

சி :—ஒருவன் செய்யும் வினை பின்வரும் பிறப்பில் அவனைப் பந்தப்படுத்தாதா ?

ம :—நீ இப்பொழுது பிறந்திருக்கிறாயா? வேறு பிறவிகளைப் பற்றி எதற்காக நினைக்கிறாய்? உண்மையில் பிறப்புமில்லை, இறப்புமில்லை. பிறந்திருக்கிறவன் இறப்பைப்பற்றியும் அதன் நிவிருத்தியைப்பற்றியும் நினைக்கட்டும்.

சி :—இறந்தவர்களை நீங்கள் எங்களுக்குக் காட்ட முடியுமா ?

ம :—உன் பந்துக்களை அவர்கள் பிறப்பதற்குமுன் உனக்குத் தெரியுமா? அவர்கள் இறந்த பிறகுமட்டும் அவர்களைத் தெரிந்துகொள்ள முயல்வானேன் ?

சி :—மோக்ஷவிஷயத்தில் கிருஹஸ்தன் நிலை என்ன? ஆத்மஞானமடைய அவன் அவசியம் ஸந்யஸிக்க வேண்டாமா ?

ம :—நீ கிருஹஸ்தனென்று நினைத்துக்கொள்வானேன்? நீ ஸந்யாஸியானாற்கூட நான் ஸந்யாஸி என்ற எண்ணம் உன்னைத் தொடரும். நீ வீட்டிலிருந்தாலும், அதைத் துறந்து காட்டுக்குப் போனாலும் உன் மனம் உன்னைத்தொடரும். அகந்தையே எண்ணங்களின் மூலம். அது உடலையும் உலகத்தையும் தோற்றிவைத்து உன்னைக் கிருஹஸ்தனென் றெண்ணிக்கொள்ளும்படி செய்கிறது. நீ துறவு பூண்டால், நான் கிருஹஸ்தன் என்னும் நினைவிற்குப் பதிலாக நான் ஸந்யாஸி என்ற நினைவையும், வீட்டு நினைவிற்குப் பதிலாகக் காட்டு நினைவையுமே கூட்டிவைக்கும். இப்படிப்மட்ட மனத்தடைகள் எப்பொழுதுமே உண்டு. இந்த (வன) ஸமூகத்தில் அவை இன்னும் அதிகரிக்கவுஞ்செய்யும். இருக்கும்

ஸ்தலத்தை மட்டும் மாற்றிவிடுவதால் ஒருலாபமுமில்லை. மனமே பெருந்தடை. வீட்டிலிருந்தாலும் காட்டிலிருந்தாலும், இத்தடையை மாற்றவேண்டும். காட்டில் மாற்றக்கூடியதை வீட்டில் என் மாற்றக்கூடாது? ஆகையால் ஸ்தலத்தை என் மாற்றவேண்டும்? இருப்பிடம் எதாகவிருந்தாலும், உள் பிரயத்தனத்தை இப்பொழுதே செய்யலாம்.

சி :—உலக வியாபாரத்தில் இருக்கும்போதே ஸமாதி சுகம் அநுபவிப்பது ஸாத்யமா?

ம :—"நான்வேலைசெய்கிறேன்" என்ற உணர்ச்சியே தடை. "வேலைசெய்வது யார்?" என்று விசாரித்து, உன் உண்மை சொரூபத்தை நினைவிற்கொள்; வேலை தானே நடக்கும்; உன்னைப் பந்தப்படுத்தாது. வேலை செய்யவோ துறக்கவோ முயலவேண்டாம். உன் முயற்சியே பந்தம். விதிக்கப்பட்டது நடந்தே தீரும். வேலையே விதிக்கப்படாதிருந்தால் நீ தேடினாலும் அது உனக்குக் கிட்டாது. வேலையே விதித்திருந்தால் நீ அதை விட்டகலமுடியாது; உன்னைக் கட்டாயமாய் வேலை வாங்கிவிடும். ஆகையால் அதையெல்லாம் பரமேச்வரனிடம் விட்டுவிடு. உன்னிஷ்டப்படி நீ துறக்கவோ வேலைசெய்யவோ முடியாது.

சி :—ஒருவன் உண்முகப்பட்டு உள்ள பொருளை நாடிக்கொண்டிருக்கும்பொழுதே வெளிவேலைகள் தாமே நடந்துகொண்டுபோகுமென்று பகவானால் நேற்று அருளப்பட்டது. ஸ்ரீகிருஷ்ணசைதன்யர் தம் மாணவர்களுக்கு உபந்யஸித்துக்கொண் டிருக்கும்போது, அவர் தம் தேகத்தை மறந்து, ஸ்ரீகிருஷ்ணனைப் பற்றிப் பேசிக்கொண்டே, உண்மையில், ஸ்ரீ கிருஷ்ணனை (தம

தாத்மாவை) நாடியிருப்பாரென, அவர் சரித்திரத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. வெளிக்காரியங்களை நாடாமல் விட்டுவிடலாமாவென்று இதிலிருந்து ஒரு சந்தேகம் பிறக்கிறது. கவனத்தின் ஒரு பகுதியைக் காரியத்திற் செலுத்தவேண்டு மென்பது கருத்தா ?

ம :—ஆத்மாவே எல்லாம். ஆத்மாவிலும் நீ வேறு ? ஆத்மாவையன்றித் தொழில் நிகழுமா ? ஆத்மா எங்குமுளது. நீ வேலையில் ஈடுபட முயன்றாலும் முயலாவிட்டாலும் எல்லாவேலைகளும் நடந்துகொண்டே யிருக்கும். வேலை தானாகவே நடக்கும். ஆதலால்தான், கௌரவர்களைக் கொல்ல அர்ஜ்ஜுனன் தயங்கவேண்டுவதில்லையென்றும், அவர்கள் ஏற்கெனவே பகவானால் கொல்லப்பட்டவர்களென்றும், அவன் கர்மபரமாகத் தன் கவனத்தைச் செலுத்தித் தொல்லைப்பட வேண்டிய அவசியமே இல்லையென்றும், ஈச்வராஜ்ஞைப்படி பிரகிருதி அதன் வேலையைச் செய்யும்படி விட்டுவிடவேண்டுமென்றும் ஸ்ரீ கிருஷ்ண பகவான் சொன்னார்.

சி :—ஆனால் நான் செய்யாவிட்டால் வேலை நடவாமல் நின்று விடுமே ?

ம :—ஆத்மாவைக் கவனிப்பதே வேலையைக் கவனிப்பதாகும். உன்னை நீ தேகமாகப் பாவிப்பதால் வேலை உன்னால் நடக்கிறதென்று நீ கருதுகிறாய். ஆனால் தேகமும், அதனோடு சம்பந்தப்பட்ட வேலைகளும் ஆத்மாவுக்கன்னியமல்ல. வேலையைக் கவனித்தாலென்ன, கவனிக்காவிட்டாலென்ன ? நீ ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குப் போவதாக வைத்துக்கொள் ; எடுத்துவைக்கும் ஒவ்வோரடியையும் நீ கவனிக்கிறாயா ? இல்லையே ! ஆயினும் சிறிது நேரங்கழித்து, போய்ச்சேரவேண்டிய இடத்தில்

நீ இருக்கக் காண்கிருய். இவ்விதமே மற்றவேலைகளும் தாமே நடந்துகொண்டுபோகும்.

சி :—அப்படி யென்ருல் தூக்கத்தில் சிலர் நடப்பது போலவா ?

ம :—தூக்கத்திலிருப்பவர் சிலர் திடீரெனத் தூங்கிக் கொண்டே நடப்பதுபோலத்தான். ஒரு குழந்தை தூங்கிக்கொண் டிருக்கும்போது, அதன் தாய் அதற்கு உணவூட்டுகிருள். முற்றும் விழித்திருக்கும்போதுபோலவே, உறக்கத்திலும் அது உண்கிறது. ஆனல் காலையிலெழுந்திருந்து தாயை நோக்கி, "அம்மா, நேற்றிரவு நான் சாப்பிடவில்லையே" என்கிறது. தாயும் மற்றவர்களும், அது உணவுகொண்டதை யறிவார்கள் ; ஆனல் 'கொள்ளவில்லை' என்கிறது குழந்தை ; குழந்தை அதை யறியவில்லை ; அவ்வளவுதான். காரியம் என்னவோ நடந்திருக்கிறது. ஒரு வண்டிப்பிரயாணிக்குத் தூக்கம் வந்துவிட்டது. மாடுகள் போய்க்கொண்டிருக்கின்றன ; அல்லது சும்மா நிற்கின்றன ; அல்லது அவிழ்த்துவிடப்பட்டிருக்கின்றன. பிரயாணிக்கு இஃதொன்றும் தெரியாது ; விழித்துக்கொள்ளும்போது வேருேரிடத்தில் தானிருக்கக் காண்கிருன். வழியில் நடந்தவை எவையும் அறியாது சுகியா யிருக்கிருன் ; ஆனலும் பிரயாணம் பூர்த்தியாகிவிட்டது. இதேமாதிரிதான் ஒருவன் ஆத்ம விஷயத்திலும். நித்தியவிழிப்புடைய ஆத்மா வண்டியில் தூங்கும் பிரயாணிக்கு ஒப்பிடப்படுகிறது. வண்டி போய்க்கொண்டிருப்பது ஜாக்ராவஸ்தை. மாடுகள் போகாமல் நிற்பது ஸமாதி. (ஸமாதி என்பது ஜாக்ர ஸுஷுப்தி: மனிதன் விழித்திருக்கிருன் ; ஆனல் நடக்கும் விஷயங்களில் ஸம்பந்தப்படுவதில்லை. மாடுகள் நுகத்-

தடியிற் கட்டப்பட்டிருக்கின்றன; ஆனால் நகர்வதில்லை.) நித்திரை என்பது மாடுகள் அவிழ்த்துவிடப்பட்டிருப்பதாம். நுகத்தடியிலிருந்து மாடுகள் கட்டவிழ்ந்தது போல நித்திரையில் முற்றும் செயலோய்ந்து கிடக்கிறது.

மற்றும் ஸினிமா உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். படக்காட்சியில், திரையின்மேற் படங்கள் தோன்றுகின்றன. ஆனால் படங்களின் அசைவினால் திரை எவ்விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை; மாறுபடுவதுமில்லை. காண்பான் கவனம் படத்திலேயே; திரையிலில்லை. (திரைக்கு அன்னியமாகப் படம் எப்படி யிருக்க முடியும்? ஆயினும் திரையின் இருப்பைஎண்ணுவதில்லை.) இதுபோல் ஆத்மா வென்னும் திரையிலேதான் படம் ஆட்டம் முதலியவை நிகழ்வன. மனிதனுக்குப் படக் காட்சி தெரிகிறதேதவிர, பிரதானமாகிய திரை தெரிவதில்லை. ஆயினும் காட்சி ஆத்மாவுக்கு அன்னியமல்ல. பார்ப்பான் திரையைக் கவனித்தாலும் கவனிக்காவிட்டாலும் படக்காட்சி நடந்துகொண்டேதா னிருக்கும்.

சி:—ஆனால் படக்காட்சியை நடத்துபவன் ஒருவன் இருக்கிறானே!

ம:—சித்திரப்படக்காட்சி அறிவற்ற பொருட்களாலானது. தீபம், சித்திரம், திரை எல்லாம் ஜடப்பொருள்கள்; ஆகையால், அவற்றை நடத்த அறிவுடையவன் ஒருவன் அவசியமாகிறான். ஆனால், ஆத்மா பூர்ண ஞான சொரூபம். தன்னில் அனைத்தும் அடங்கப்பெற்றது. தனக்கன்னியமாக நடத்துபவன் இருக்கமுடியாது.

சி:—தேகமே கர்த்தாவாக நான் விபரீதபாவங் கொள்ளவில்லை. ஸ்ரீமத் பகவத்கீதை 18-வது அத்யாயம் 16-ஆவது சுலோகம்—

ஈச்வர: ஸர்வபூதானும் ஹ்ருத்தேசே(அ)ர்ஜுனதிஷ்டதி ।
ப்ராமயன் ஸர்வபூதானி யந்த்ராரூடானி மாயயா ॥

அதாவது:

"ஓ அர்ஜ்ஜுனு! ஈச்வரன் ஒவ்வொரு ஜந்துவின் ஹ்ருயத்திலும் வசிக்கிறுன்; தனது மாயா சக்தியால் யந்திரத்தின்மேல் வைத்து ஸகலஜந்துக்களேயும் சுழற்றுகிறுன்" என்னும் சுலோகத்தையே குறிப்பிடுகிறேன்.

ம:—தேஹேந்திரியசலனத்துக்கு ஹேதுவாக கர்த்தா ஒருவன் அவசியமில்லையாவென எண்ணுகிறுய். ஜடதேகம் உணர்வற்றதால் அதற்குடையவனெருவன் அவசியந்தான். ஸாமான்ய ஜனங்கள் தங்களே ஜீவராகக் கருதுவதால், ஈச்வரன் ஜீவர்கள் ஹ்ருதயத்தில் வசித்து அவர்களே நடத்துவதாக கிருஷ்ணன் சொன்னுர். வாஸ்தவத்தில் இத்தனே ஜீவர்களுமில்லே, அவர்களே நடத்துவோனும் அன்னியமாகவில்லே. ஆத்மாவே இவையனேத்தும். அதுவே திரை, படம், பார்ப்பான், நடிகர், அவர்களே நடத்துபவன், தீபம், அரங்கம், மற்றெல்லாமும். நீ ஆத்மாவான உன்னேத் தேகமாகவும் ஜீவனுகவும் பாவிப்பது, படம் - பார்ப்பவன் படத்திலுள்ள நடிகனுகத் தன்னே என்னுவது போலவேயாம். திரையின்றிப் படநடிகனெருவன் நடிக்க முயல்வது எப்படியோ, ஆத்மாவுக்கன்னியமாகத்தான் நடிப்பதாக ஒருவன் எண்ணிக்கொள்வதும் அப்படித்தான்.

சி:—மற்றப் பாத்திரங்களுடன் நாமும் இப்பிரபஞ்ச நாடகத்தில் நடிப்பதாகக் காண்கிறேம். அதேசமயத்தில், இவையனேத்தும் ஆத்மாவிலேயே நிகழ்வதையும் உணரும்படி சொல்கிறீர்கள். படம் பார்க்கின்றவனேயே

படக்காட்சியிலும் நடிக்கச் சொல்வதுபோ லல்லவா இருக்கிறது. ஆகையால் தூக்கத்தில் விழிக்கக் கற்க வேண்டும் போலும்!

ம:—அவஸ்தையும் தொழிலும் அவனவன் திருஷ்டியைப் பொறுத்தது. காகம், யானை, ஸர்ப்பம் இவை ஒரே அவயவத்தை இருவேறு தொழில்கட்கு உபயோகிக்கின்றன; ஒரு கண்ணாலே காகம் இருபுறமும் பார்க்கிறது. யானையின் துதிக்கை அதற்குக் கரமாகவும் நாசியாகவும் உபயோகமாகிறது. ஸர்ப்பம் கண்களாலேயே காணவும் கேட்கவுஞ் செய்கிறது. காக்கைக்குக் கண் ஒன்று அல்லது இரண்டென்றாலும், யானையின் துதிக்கையைக் கையென்றாலும் நாசியென்றாலும், ஸர்ப்பத்தின் கண்ணைச் செவியென்றாலும் எல்லாம் பொருள் ஒன்றே. அதுபோலவே ஞானியின் விஷயத்தில் தூக்க விழிப்பு, விழிப்புறக்கம், கனத்துயில், கனநன எல்லாம் ஒன்றே.

சி:—ஆனால் பௌதிக ஜாக்ரவுலகில் பௌதிக சரீரத்தோடு விவகரிக்கவேண்டி யிருக்கிறதே. உழைக்கும்போது உறங்கினால், அல்லது உறக்கத்தில் உழைத்தால் வேலை கெட்டுவிடுமே!

ம:—உறக்கம் மூடமல்ல; அதுவே ஒருவனுடைய சுத்தநிலை. விழிப்பு அறிவல்ல; அது அறியாமையே. உறக்கத்தில் முற்றறிவுள்ளது; விழிப்பில் பூர்ண அறியாமை இருக்கிறது. உன் மெய்ந்நிலை இரண்டையும் வியாபித்து அப்பாலுமுளது. அறிவு அறியாமை இரண்டுக்கும் அப்பாலுள்ளது ஆத்மா. துயில், கனவு, நனவு இம்மூன்றும் ஆத்மாவின்முன் வந்து போகும் தோற்றங்கள். நீ உணர்ந்தாலும் உணராவிட்டாலும்,

அவை நிகழ்கின்றன. வண்டியிலிருப்பவன் உறங்கும் போது மாடுகள் நிற்பதும் போவதும் அவிழ்த்துவிடுவதும்போல, ஸமாதி விழிப்பு கனவு உறக்கம் இவை எல்லாம் எதில் வந்துபோய்க் கொண்டிருக்குமோ அதுவே ஞானியின் சொரூபம். இவ்விடைகளெல்லாம் அஞ்ஞானியின் பார்வையைப் பற்றினவே. இன்றேல் இக் கேள்விகளே கிளம்பா.

சி:—ஆத்மாவிற்கு இக்கேள்விகள் கிளம்பா என்பது உண்மையே. அங்கே கேட்பதற்கு யாருளர்? ஆனல், நான் இன்னும் ஆத்மஸாக்ஷாத்கார மடையும் பாக்கியம் அடையவில்லை.

ம:—அதுதான் உன்னைத் தடுப்பது. நான் அஞ்ஞானி, ஆத்மாவை இனிமேல் அறியவேண்டும் என்னுமெண்ணத்தை நீ ஒழிக்கவேண்டும். நீயே ஆத்மா. நீ ஆத்மாவை உணராத காலம் எப்பொழுதேனுமுண்டோ?

சி:—ஆகையால் நாங்கள் தூங்கிக்கொண்டே விழித்திருக்கவும், பகற்கனவு காணவும் பயிலவேண்டுமா?

ம:—சிரிக்கிருர்.

சி:—"அகலாத் தியானம் செய்து ஸமாதியில் ஆழ்ந்தவன் தேகம் அக்காரணத்தால் அசைவற்றுக் கிடக்குமென்பதல்ல. அசைவுற்ரே அற்ரே இருக்கலாம். இந்நிலையில் நின்றவன் மனம் தேஹேந்திரிய சலனங்களாற் சலிக்காது. மனம் சலிப்பதே தேகம் சலிப்பதற்கு ஹேதுவுமாகாது" என்றேன் நான். மற்ரெருவர், "தேகத்தால் உழைக்கும் ஒருவனுக்கு ஸமாதி அல்லது நிரந்தரத்

தியானம் ஸாத்ய மன்று" என்கிருர். பகவானின் அபிப் பிராயமென்ன? நீங்களே என் வாசகத்துக்கு இலக் கியமா யிருக்கிறீர்கள்.

ம:—இருவர் சொல்வதும் சரியே. நீங்கள் சொல் வது ஸஹஜ நிர்விகல்பஸமாதி. மற்றவர் சொல்வது கேவல நிர்விகல்பஸமாதி. கேவலநிர்விகல்பத்தில் மனது ஆத்ம தேஜஸில் அமிழ்ந்து கிடக்கிறது. (நல்ல நித்திரை யில் அந்தகாரத்திற் கிடக்கிறது). ஸ்மாதியிலிருந்து விழித்தவுடன் ஸமாதிக்கும் தொழிலுக்கும் வித்தியாஸம் காண்கிருன். மற்றும் தேகம், திருஷ்டி, பிராணன், மனம் இவைகளின் சலனமும் விஷயக்காட்சியும் கேவல நிர்விகல்பஸமாதி சாதிக்க விரும்புகிறவனுக்குப் பிரதி பந்தக மாகும்.

ஸஹஜஸமாதியில் மனது ஆத்மாவில் ஒன்றி நசித்து விட்டது. ஆகையால் கேவல நிர்விகல்பத்திற் சொல்லப் பட்ட பேதங்களும் தடைகளும் இங்கில்லை. இத்தகைய வனுடைய தொழில்களெல்லாம் உறங்கும் பாலன் உண வருந்துவதுபோலாம். காணும் அன்னிய னறிவானன்றி அவனென்று மறியான். நகர்கிற வண்டியில் உறங்கும் பிரயாணிக்கு வண்டியின் சலனம் ஒன்றும் தெரியாது; ஏனெனில், அவன் மனம் இருளில் ஒடுங்கிக் கிடக்கிறது. ஸஹஜஞானியும் தன் உடற்சலனத்தை உணரான்; ஏனெனில் அவன் மனம் சிதானந்த அநுபூதியிற் கரைந்து அழிந்துவிட்டது. துயில், கேவல நிர்விகல்பஸமாதி, ஸஹஜநிர்விகல்பஸமாதி இவற்றுக்குள்ள வித்தியாசத் தைக் கீழ்க்கண்டபடி அட்டவணை செய்யலாம்—

துயில்	கேவல நிர்விகல்ப ஸமாதி	ஸஹஜநிர்விகல்ப ஸமாதி
1. மனம் பிழைத்திருக்கிறது.	1. மனம் பிழைத்திருக்கிறது.	1. மனம் இறந்தது.
2. இருளில் ஆழ்ந்திருக்கிறது.	2. ஒளியில் ஆழ்ந்திருக்கிறது.	2. ஆத்மாவிற் கரைந்து விட்டது.
	3. கிணற்றில் கயிற்ருற் கட்டித தொங்கும் தோண்டிபோல்	3. ஸமுத்ரத்திற் கலந்து தன்னை இழந்த நதி போல்
	4. கயிற்றின் மற்ரெரு நுனியால் இழுக்கப்படும்.	4. ஸமுத்ரத்திற் கலந்த நதி திரும்பாது.

தன்னை அறிந்த ஞானியின் மனம் முழுதும் நாசமாகிவிட்டது. அஞ்ஞானியைப்போல் அவனுக்கு மனம் இருப்பதாக, காண்பானுக்குக் காணப்படும். ஆகையால், ஞானியின் அகந்தை வெளிப்பார்வையில் உண்மைபோலத் தோன்றும்; ஆனல், உண்மையில் அதற்கு உள் வெளி உண்மையில்லை.

II

மௌனமும் தனிமையும்

சி:—மௌனவிரதம் உபயோகமா?

ம:—ஆத்மஸமர்ப்பணமே உண்மௌனம்; அது அகந்தையற்று வாழ்வது.

சி:—ஸந்யாஸிக்கு ஏகாந்தம் அவசியமா?

ம:—ஏகாந்தம் மனத்தில் உள்ளது. ஒருவன் கடின விவகாரத்தினிடையிலும் முழுமனவமைதியுடன் இருக்கலாம். அவன் எப்பொழுதும் ஏகாந்தவாசியே. மற்றொருவன் காட்டில் வசிக்கலாம். ஆனாலும் மனத்தைக் கட்ட வகையற்றிருப்பானாயின், அவன் ஏகாந்தத்தில் இருப்பதாகச் சொல்லக்கூடாது. ஏகாந்தம் என்பது மனத்தின் பாங்கு. வெளிவிஷயங்களிற் பற்றுள்ளவன் எங்கிருந்தாலும் ஏகாந்தமுறான். பற்றற்றவன் எப்பொழுதும் ஏகாந்தத்திலேயே இருக்கிறான்.

சி:—மௌனம் என்பதென்ன?

ம:—மனவாக்கு கடந்தநிலையே மௌனம்; அது மனதின் செயலின்றி நடைபெறும் தியானம். மனத்தை யடக்குவதே தியானம். ஆழ்ந்த தியானமே நிரந்தரப் பேச்சு. மௌனம் என்றால் எப்பொழுதும் பேசிக்கொண்டிருத்தல். அது வாக்கின் இடைவிடாப் பெருக்கு. அது பேச்சால் தடையுறும். வார்த்தைகள் இந்த மௌன பாஷையைத் தடுக்கின்றன. உபந்யாஸங்கள் ஜனங்களுக்கு யாதொரு நலனின்றியே மணிக்கணக்காய் நடைபெறலாம். ஆனால், மௌனம் சாசுவதமாயும் மனித வர்க்கம் முழுவதற்கும் பலனளிப்பதாயும் இருக்கிறது. மௌனத்தால் சொல்வன்மை வெளியிடப்பட்டது. சொற்பிரஸங்கங்கள் மௌனத்தைப்போல் அவ்வளவு தெளிவாயிரா. மௌனமென்றால் ஓயாமற் கோஷிப்பது. அதுதான் மிகச்சிறந்த பாஷை. சொற்கள் அடங்கி மௌனம் விளங்கும் ஓர்நிலை யுண்டு.

சி:—அப்படியானால் நம் எண்ணங்களை ஒருவாக்கொருவர் எப்படி அறிவித்துக்கொள்ள முடியும்?

ம:—இருமை இருந்தாலல்லவோ அது அவசியம்!

சி:—பகவான் ஊரூராகச் சென்று ஜனங்களுக்கு ஏன் ஸத்யத்தைப் போதிப்பதில்லை?

ம:—நான் அதைச் செய்யவில்லையென்று உனக்கெப்படித் தெரியும்? மேடைமீதேறி ஜனங்களுக்குப் பிரஸங்கிப்பதுதான் போதனையா? போதனையென்பது அறிவைப் புகட்டுவது. அதை மௌனமொன்றாலேயே உண்மையிற் செய்யமுடியும். ஒருமணி நேரம் பிரஸங்கம் கேட்டுவிட்டு, அதனால் தன் வாழ்வை மாற்றிக்கொள்ளவேண்டுமென்னும் உறுதியுறாத ஒரு மனிதனைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்? ஒரு பரிசுத்த ஸந்நிதியிலமர்ந்து சிறிது நேரத்தில் தனது வாழ்க்கையின் நோக்கம் முழுதும் மாறப்பெற்றுப் போகும் வேறொருவனோடு அவனை ஒப்பிட்டுப்பார். இவ்விரண்டில் எது நல்லது? பயனின்றி உரக்கப் பிரஸங்கம் புரிவதா? அல்லது மௌனமாயமர்ந்து ஆத்மசக்தியை எங்கும்பரப்புவதா?

மேலும் பேச்சு எப்படிப் பிறக்கிறது? சுத்த அறிவிலிருந்து அகந்தையும், அகந்தையினின்று எண்ணமும், அதனின்று வார்த்தைகளும் உண்டாகின்றன. ஆகையால், பேச்சென்பது ஆதிமூலத்தின் கொள்ளுப்பேரன். பேச்சால் பயனுண்டாகுமானால் மௌனத்தாற் பிரஸங்கிப்பது எவ்வளவுமேலான சக்தியுள்ளதாயிருக்கவேண்டுமென்பதை நீயே நினைத்துப்பார். ஆனால், ஜனங்கள் தாங்கள் சாசுவதமா யநுபவிக்கும் நித்ய ஸத்யமாய் ஒவ்வொரு கணமும் உள்ள இந்த வெளிப்படையான உண்மையை உணர்வதில்லை. இதுவே ஆத்மாவின் உண்மை. ஆத்மாவை அறியாதவன் யாராவது இருக்

கிருனா? ஆனால், அவர்கள் இதைப்பற்றிக் கேட்கக்கூட விரும்புகிறதில்லை. அப்பாலுள்ள ஸ்வர்க்கம் நரகம் மறு பிறப்பு இவைகளைப்பற்றியே அறிய விரும்புகிறார்கள். ஏனென்றால், அவர்களுக்குப் பிரியம் மறைபொருளிலே யே தவிர ஸத்யத்திலில்லை. மதங்கள் அவர்கள் கோரும் மறைபொருள்களைக் காட்டி, முடிவில் ஆத்ம வழிக்கே திருப்புகின்றன. உபாயம் எதுவாக இருந்தாலும் முடிவில் ஆத்மாவுக்கே திரும்பவேணடும். அப்படியிருக்க இங்கிப்பொழுதே ஏன் ஆத்மாவி லிருக்கலாகாது? மறு உலகத்தைக் காண்பதற்கும், அதைப்பற்றி ஊகிப்பதற்கும் ஆத்மா அவசியம். ஆகையால் அவை ஆத்மாவுக் கன்னிய மல்ல. விஷயங்களைப் பார்க்கிற அஞ்ஞானிகூட ஆத்மாவையே பார்க்கிறான்.

III

மனோநிக்ரகம்

சி:—மனத்தை எப்படி அடக்குவது?

ம:—ஆத்மாவையுணர்ந்தால் அடக்குவதற்கு மனம் இருக்காது. மனமற்ற இடத்தில் ஆத்மா பிரகாசிக்கிறது. மனம் சும்மா விருந்தாலும் தொழில்செய்தாலும் ஞானிக்கு ஆத்மா ஒன்றே யுள்ளது. ஏனென்றால் மனம், உடல், உலகம் இவை ஆத்மாவுக்கு அன்னியமல்ல; ஆத்மாவுக் கயலா யிரா. இவை ஆத்மாவிற் கன்னியமா யிருக்க முடியுமா? ஆத்மாவை யுணர்ந்தபோது இந்தச் சாயைகளைப்பற்றி இடர்ப்படுவானேன்? அவை ஆத்மாவை எப்படி மறைக்கும்?

சி:—மனம் வெறும் சாயையேயானால், ஆத்மாவை யுணர்வதெப்படி?

ம:—ஆத்மா ஸ்வயம்பிரகாசமாய் ஹ்ருதயத்தி லுள்ளது. ஒளி ஹ்ருதயத்திலிருந்து எழுந்து மனத்தின் நிலயமாகிய மூளைக்குப் போகிறது. மனத்துக்கு உலகம் காணப்படுகிறது. ஆத்மப் பிரதிபலன ஒளியால் உலகைக் காண்கிறாய். மனத்தின் செயலால் உலகம் காணப் படுகிறது. மனத்துக்கு ஒளி வரும்போது அதற்கு உலகம் தோன்றுகிறது; அப்படி ஒளி வராதபோது உலகம் கிரகிக்கப்படுவதில்லை. ஒளியின் மூலத்துக்கு மனம் திரும்பினால் விஷயஞானம் விளங்காது; கேவலம் ஆத்மா ஹ்ருதயமாய்ப் பிரகாசிக்கும்.

சந்திரன் சூரியவொளியாற் பிரகாசிக்கிறது. சூரியன் அஸ்தமித்தபொழுது பொருள்களைக் காணச் சந்திர வொளி உபயோகமாகிறது. சூரியன் உதித்துவிட்டால் சந்திரபிம்பம் ஆகாசத்தில் காணப்பட்டாலும் அதன் உதவி ஒருவருக்கும் தேவையில்லை. மனத்துக்கும் ஹ்ருதயத்துக்கும் உள்ள ஸம்பந்தமும் இப்படியே. பிரதிபலன வெளிச்சத்தால் மனம், பொருள்களைக்காண உபயோகமாகிறது. அது உள்ளொடுங்கிற் றென்றால் ஒளியின்மூலம் தானாகவே பிரகாசிக்கிறது. அப்பொழுது மனம் பகற்சந்திரன்போ லாகிறது. அறை இருண்டிருப்பின் அதை விளக்கத் தீபம் தேவை. சூரியன் உதித்தால் தீபம் தேவையில்லை; பொருள்கள் காணப்படு கின்றன. சூரியனைப் பார்க்கத் தீபம் தேவையில்லை. ஸ்வயம்பிரகாச சூரியன் பக்கம் உன் கண்ணைத் திருப்பி னாற்போதும். அதுபோலவேதான் மனத்தின் விஷயத்தி லும். பொருள்களைக் காண மனத்திற் பிரதிபலித்த ஒளி

தேவை; ஹ்ருதயத்தைக் காண மனம் உன்முகப்பட்டாற் போதும். அப்போது மனம் ஒடுங்க, தானே ஹ்ருதயம் பிரகாசிக்கிறது.

சி :—அக்டோபரில் ஆச்ரமத்தைவிட்டுப் போன பிறகு, பகவத்ஸந்நிதியில் எந்த சாந்திசுகத்தில் ஆழ்ந்து கிடந்தேனோ அந்த சுகம் பத்து நாட்கள் வரையில் என்னைவிட்டு நீங்கவில்லை. நான் வேலை செய்துகொண்டிருக்கும்பொழுதெல்லாம் ஒரு சாந்தி ரஸத்தின் தாரை உள்ளே இருந்துகொண்டிருந்தது. சாரமற்றதோர் உபந்யாஸத்தைக் கேட்கும்போது விழித்துக்கொண்டே தூங்குவதுபோன்ற இரட்டையுணர்வு இருந்துகொண்டிருந்தது. பிறகு அது முற்றிலும் மறைந்துவிட்டது. மறுபடியும் பழைய மூடத்தனங்களெல்லாம் வந்துவிட்டன. வேலையின்றித் தனியே தியானம் செய்ய வேளையில்லை. வேலைசெய்யும்போது அடிக்கடி “நான் இருக்கிறேன்’ என்ற நினைப்பிருந்தாற் போதுமா?

ம :—(கொஞ்சம் பொறுத்து) மனத்தை திடப்படுத்திக் கொண்டால் அந்த சாந்தி ஸ்திரமாக இருக்கும். அடிக்கடி பழகுவதாற் கிடைக்கும் மனோபலத்துக்குத் தக்கபடி அந்த சாந்தி நீடித்திருக்கும். அப்படிப்பட்ட மனத்துக்கு ரஸதாரையைப் பற்றிக்கொள்ளுதல் சுலபம். அந்த ஸ்திதியில் வேலை செய்தாலும் செய்யாவிட்டாலும், அந்த சாந்திப் பிரவாகத்துக்குத் தங்குதடை கிடையாது. அதற்கு வேலை தடையல்ல. அந்த வேலையைச் ‘செய்கிறவன் நான்’ என்ற எண்ணமே தடை.

சி :—மனத்தைத் திடப்படுத்த ஒரு தியானக்கிரமம் அவசியமா?

ம:—எந்த வேலையும் உனதல்ல என்ற எண்ணம் எப்போதும் உன் திருஷ்டியிலிருந்தால் அதுவே போதும். இதை ஞாபகப்படுத்திக்கொள்ள முதலில் பிரயத்னம் தேவை. பிறகு இது ஸஹஜமாயும் இடைவிடாது மிருக்கும். வேலையும் நடந்துகொண்டிருக்கும்; உன் சாந்திக்கு பங்கமிருக்காது. தியானமே இயற்கைநிலை. வேறு எண்ணங்கள் தடைசெய்வதால் அதனை இப்போது தியான மென்கிறாய். இவ்வெண்ணங்கள் ஒழிந்தபோது நீ தனித்திருக்கிறாய்; அதாவது சிந்தையற்ற ஸமாதிநிலை; இந்த உன் உண்மைநிலையை, இதர சிந்தனைகளை அப்புறப்படுத்தி மீண்டு மடைய முயல்கிறாய். அவ்வாறு அப்புறப்படுத்துவதே இப்போது தியான மெனப்படுவது. இப்பழக்கம் உறுதியானால் நமது உண்மை நிலையே உண்மைத்தியானமாக வெளியாகிறது.

சி:—ஒருவன் மனத்தை ஒருமைப்படுத்த முயலும் போது, மற்ற எண்ணங்கள் வெகுவேகமாகக் கிளம்புகின்றனவே!

ம:—தியானசமயத்தில் நாநாவித எண்ணங்கள் கிளம்புகின்றன. அது நல்லதே; ஏன்? உள்ளே மறைந்து கிடப்பது வெளியாகின்றது. வெளியானாலொழிய அதை அழிப்பதெப்படி? எண்ணங்கள் தாமே யெழ, அவை காலக்கிரமத்தில் நசிக்க, மனம் பலமடைகிறது.

சி:—சில சமயங்களில், மனிதர்கள் பொருள்கள் இவை கனவிற்போல இன்னதென் றுணரமுடியாத ஒளிமிக்க உருவங்கொள்கின்றன. அவை வெளியிலிருப்பன போலத் தோன்றுவதில்லை. ஆனால் அவற்றின் இருப்பையுணர்வதன்றி, காணும் தன்னைப்பற்றி எவ்வித வுணர்வு மற்றிருக்கிறான். மனத்தில் ஆழ்ந்த அமைதியிருக்கிறது.

KOVILOOR
MADALAYAM
மடாலயம்

அச்சமயங்கள் தன்னில் தான் ஆழ்ந் தக்கனவாமா? அல்லது இது அநுகூலமற்ற மனோ ராஜ்ய நிலையா? அதைத் தாத்காலிக சாந்தி தரும் நிலை எனக்கருதி விருத்தி செய்யலாமா?

ம:—மனத்தில் சாந்தியோடு அறிவு மிருக்கிறது; இதுவே குறியாகக் கொள்ளத்தக்க நிலை. இதை ஸ்வரூப ஸ்திதி யென்று உணராமல் இதைப்பற்றிக் கேள்வி கேட்டதே, இந்நிலை ஸ்திரமற்றது, ஏதோ ஓரேதுவால் வந்து போகிறதென்று காட்டுகிறது.

பாஹ்யவ்ருத்திகள் இருக்கும்போது "ஆழ்தல்" என்பது அமையும். மனத்தைத் திருப்பி யுண்முகமாக்கி வெளிவிஷய மேற்பரப்புக்குக்கீழ் மூழ்கவேண்டும். ஆனால அறிவுக்கு மறைப்பின்றி, நிலைபெற்ற சாந்தி திகழும்போது, மூழ்குவதற்குத் தேவையேது? அந்நிலையைத் தன்னிலையாக உணராவிட்டால், மூழ்கவேண்டுவது அவசியமே. இக்கருத்தால் இந்நிலை அநுபவத்துக்கோ, மூழ்குவதற்கோ தகுதியான தென்னலாம். இதனல் நீ கேட்ட பின்னிரு வினக்களும் எழா.

சி:—குழந்தைகளைக் கண்டால் அவர்களைப்போல் நாமாகவேண்டுமென்ற எண்ணத்தாலோ என்னவோ, மனம் பிரியமுற்று விரிவடைகிறது. இந்தப் பாசத்திலிருந்து விடுபடுவ தெப்படி?

ம:—ஆத்மாவைப் பற்றிக்கொள். குழந்தைகளைப் பற்றியும், நீ அவர்களிடம் கொள்ளும் உணர்ச்சிகளைப் பற்றியும் நினைப்பானேன்?

சி:—மூன்றும்முறை இப்போது திருவண்ணுமலைக்கு வந்த எனக்கு அகங்காரம் அதிகரித்து, தியானம் அஸாத்யமாய் விட்டது. இதைப்பற்றி உதாஸீனமா

யிருக்கவேண்டுமா? அல்லது இனிமேல் இப்படிப்பட்ட இடங்களை விலக்கவேண்டு மென்பதற்கு இது குறியா?

ம:—இது வெறுங்கற்பனை. இவ்விடமோ பிறிதோ இருப்பது உன்னுள்ளே தான். இப்படிப்பட்ட கற்பனைகள் தொலையவேண்டும். என்? அவ்விடங்கள் மனத்தின் செயல்களைக்குறித்து ஒன்றும் செய்வதற்கில்லை. அத்துடன், உன்னைச் சூழ்ந்தவை உன் இஷ்டத்தால் அமைவதில்லை. அவை இயற்கையால் அமைவன. நீ அவற்றை அதிக்ரமித்தவனாகவேண்டுமேயொழிய அவற்றுள் சிக்கிக்கொள்ள லாகாது.

[எட்டுவயதுப் பிள்ளை யொருவன் மாலை ஐந்து மணிக்கு பகவான் மலைமீது சென்றபோது, மண்டபத்தில் அமர்ந்திருந்தான். அவர் இல்லாத அச்சமயத்தில் இந்தப் பிள்ளை யோகத்தைப் பற்றியும், சுத்த வேதாந்தத்தைப்பற்றியும், எளிய செந்தமிழில் அனேக ஆன்றோர் வசனங்களிலிருந்தும், சாஸ்திரங்களிலிருந்தும், மேற்கோள்களுடன் பிரஸங்கித்தான். முக்கால் மணி கழித்து, பகவான் மண்டபத்திற்குள் வந்தபொழுது ஒரே அமைதி நிலவியது. பகவான் ஸந்நிதியில் அமர்ந்த இந்தப் பிள்ளை இருபது நிமிஷம் ஒரு வார்த்தையும் பேசாமல் பகவானை இமைகொட்டாது பார்த்திருந்தான். அவன் கண்களிலிருந்து கண்ணீர் பெருகிற்று. இடக்கையால் அவற்றைத் துடைத்துக்கொண்டு தனக்கு இன்னும் ஆத்மாநுபூதி உண்டாகவில்லை என்று சொல்லிக்கொண்டே அவ்விடம்விட்டுப்போனான்].

சி:—இந்தப் பிள்ளையின் அசாதாரணகுணங்களை எப்படி விளக்குவது?

H983
R65(3 ...)

ம :—அவனது ஜன்மாந்தர வாஸனை பலமாக இருக்கிறது. அமைதியான நிலைத்த மனத்தி லன்றி இந்த வாஸனைகள் எவ்வளவு பலமுள்ளவைகளாக இருந்த போதிலும் வெளிப்படுகிறதில்லை. பூர்வஞானத்தை ஞாபகப்படுத்திக்கொள்ளச் செய்யும் பிரயத்நங்கள் வீணுவதும், மனம் அமைதியாக நிலைபெற் றிருக்கும்போது, சில தாமே தோன்றுவதும் எல்லார்க்கும் அனுபவமே.

சி :—கலக்கமான மனத்தை எப்படி சமமாய் நிலைக்கச் செய்வது?

ம :—அது இத்தாகும்படி அதன் மூலத்தைத் தேட வேண்டும். அல்லது அழிந்து போகும்படி உன்னை ஸமர்ப்பணம் செய்யவேண்டும். ஆத்மஸமர்ப்பணமும் ஆத்மாநுபூதியும் இரண்டும் ஒன்றே. இவ்விரண்டிலும் தன்னடக்கம் அடங்கியிருக்கிறது. பரமேச்வரசக்தியை உணரும்போதுதான் அகந்தை யடங்குகிறது.

சி :—மனத்தை சஞ்சலத்துக்கு உட்படுத்துவதாகத் தோன்றும் ஸம்ஸாரத்திலிருந்து தப்புவ தெப்படி? மனச்சாந்தியை அடைவதற்கு துறவு ஓர் உறுதியான உபாயமல்லவா?

ம :—ஸம்ஸாரம் உன் மனத்திலேதா னிருக்கிறது. 'இதோ உலகமாகிய நானிருக்கிறேன்' என்று உலகம் சொல்வதில்லை. அப்படியாயின், அது உறக்கத்திலும் நீ அதை யுணரும்படி இருக்கவேண்டும். ஆனல் உறக்கத்தில் உலகமில்லை யானதால் அது நிலையற்றது. நிலையற்றது யதார்த்தமாகாது. யதார்த்தமற்றது ஆத்மாவால் எளிதில் ஒடுக்கப்படும். ஆத்மாவே நிலைபெற்றது. துறவு என்பது அநாத்மாவோடு ஆத்மாவை ஒன்றுபடுத்

கோவிலூர் ஆதீனம்

தாமையே. இப்படித் தப்பாகக் கருதும் அறியாமை அறவே, அநாத்மா நசிக்கிறது. இதுவே உண்மைத் துறவு.

சி:—இப்படிப்பட்ட துறவு இல்லாமலும், கருமங்களைப் பற்றின்றிச் செய்யக்கூடாதா?

ம:—ஆத்மஞானியே உண்மையான கர்மயோகியும் ஆவன்.

சி:—பகவான் துவைத தத்துவத்தைக் கண்டிக்கிறதுண்டா?

ம:—ஆத்மாவை அநாத்மாவோடு ஒன்றுபடுத்தும் போதே த்வைதம் இருக்கும். ஒன்றுபடுத்தாமையே அத்வைதம்.

IV

பக்தியும் ஞானமும்

சி:—ஸ்ரீமத் பாகவதம் ஸ்ரீகிருஷ்ணனை ஹ்ருதயத்திற் கான எல்லாவற்றையும் வணங்கி, அவை யாவையும் பரமாத்மாவாகவே காணவேண்டு மென்னும் ஒரு வழி காட்டியிருக்கிறது. ஆத்ம ஞானத்திற்கு இது உண்மை வழி யாகுமா? மனத்திற்கு அதீதமான பொருளை நானென்னும் விசாரணையால் தேடுவதைக் காட்டிலும் மனத்தின்முன் காணும் அனைத்தையும் பகவத்ஸ்வரூபமாகவே போற்றுதல் எளிதல்லவா?

ம:—ஆம். எல்லாவற்றிலும் கடவுளைக் காணும் போது நீ கடவுளை நினைக்கிறாய் அல்லவா? எல்லாவற்றிலும் கடவுளைக் காண்பதற்கு நீ கடவுளை நினைத்தே யாக வேண்டும். கடவுளை மனதில் வைத்தல் தியானம்.

தியானம் அநுபூதிக்கு முற்பட்ட நிலை. அநுபூதி ஆத்மாவில் ஆத்மஸம்பந்தமாயுள்ளது. அது ஆத்மாவிற் கயலாயிராது. அதற்குமுன் வேண்டுவது தியானம். நீ கடவுளைத் தியானித்தாலும் ஆத்மாவைத் தியானித்தாலும் வேறல்ல. ஏன்? முடிவு ஒன்றே. நீ எவ்விதத்திலும் ஆத்மாவிலிருந்து தப்பமுடியாது. நீ எங்கும் கடவுளைக் காண விரும்புகிறாய். ஆனால் உன்னிற் காண்பதில்லை. எல்லாம் கடவுளானால், அந்த எல்லாம் என்பதில் நீ உள்ளடங்கவில்லையா? நீ கடவுளாயிருக்க, எல்லாம் கடவுளாயிருப்பது ஆச்சரியமா? ஸ்ரீ பாகவதத்திலும் மற்றவர் தம் இதரக் கிரந்தங்களிலும் போதிக்கும் முறை இதுவே. இந்த அப்யாஸத்துக்குங்கூட, பார்க்கிறவன் அல்லது நினைக்கிறவன் இருக்கவேண்டும். அவன் யார்?

சி:—ஸர்வவ்யாபியான ஈச்வரனைக் காண்பதெப்படி?

ம:—கடவுளைக் காண்பதென்பது கடவுளாயிருப்பதே. வியாபித்தற்கு அவருக்கு அன்னியமாக 'எல்லாம்' என்பது இல்லை. அவரே இருக்கிறார்.

சி:—நாம் எப்பொழுதாவது கீதையைப் படிக்கலாமா?

ம:—எப்பொழுதும் படிக்கவேண்டும்.

சி:—ஞானத்திற்கும் பக்திக்கும் உள்ள ஸம்பந்தமென்ன?

ம:—நித்தியமாய் நிரந்தரமாய் ஆத்மாவில் நிலைத்திருக்கும் ஸஹஜஸ்திதியே ஞானம். ஆத்மாவில் நிற்க ஆத்மாவை நேசிக்க வேண்டும். கடவுள் ஆத்மாவாகவே இருப்பதால் ஆத்மாவிற் பூணும் அன்பே கடவுளிடம் பூணும் அன்பாகும். இதுவேபக்தி. இவ்விதம் ஞானமும் பக்தியும் ஒன்றே.

சி:—சுமார் ஒரு மணி நேரம் நாமஜபம் செய்யும் போது தூக்கம்போன்ற ஒரு நிலைக்கு உள்ளாகிறேன். விழித்தவுடன் ஜபம் நின்றுவிட்டதென்ற நினைப்பு வருகிறது. மறுபடியும் ஆரம்பிக்கின்றேன்.

ம:—'தூக்கம்போன்ற' நிலையா? வெகு நல்லது. அதுதான் ஸஹஜமான-நிலை. நீ இப்போது அகந்தையோடு சம்பந்தப்பட்டிருப்பதால், அந்த ஸஹஜநிலை உன் வேலையைக் கெடுப்பதாக நினைத்துக்கொள்கிறாய். அந்த நிலைதான் உன் ஸஹஜநிலையென்று நீ உணரும்வரையில், அதைப் பலமுறை நீ அனுபவிக்கவேண்டும். அப்பொழுது ஜபம் அன்னியமென்றும், ஆனாலும் அது தானாக நடந்துகொண்டிருக்குமென்றும் தெரிந்துகொள்வாய். ஜபம் செய்யும் மனத்தோடு உன்னைத் தப்பாக ஒன்றுபடுத்திக் கொண்டிருப்பதால் உனக்கு இந்த சந்தேகம் வந்தது. ஜபமாவது மற்றெல்லா எண்ணங்களையும் ஒதுக்கி ஒரே எண்ணத்தைப் பற்றி நிற்றல். அதுவே ஜபத்தின் கருத்து. ஜபம் தியானத்திற்கு வழி. தியானம் ஞானத்தில் முடியும்.

சி:—நாம ஜபம் செய்யும் முறையென்ன?

ம:—பக்தியில்லாமல் மேலெழுந்தவாரியாக நாமத்தைச் சும்மா உச்சரிக்கக்கூடாது. கடவுள் பெயரை உபயோகிப்பதானால், நாம் நம்மை முழுதும் அவருக்கு அர்ப்பணம் செய்து அவரை யழைக்கவேண்டும். அப்பொழுதுதான் அவர் நாமம் எப்பொழுதும் நம்முடன் இருக்கும்.

சி:—அப்படியானால் விசாரத்திற்கு அவசியமென்ன?

ம:—ஸமர்ப்பணத்தின் மெய்ப்பொருளை நன்றாக அறிந்து செய்தால்தான் அது பலன் கொடுக்கும். அந்த

அறிவு சிந்தனையாலும் விசாரத்தாலும் ஏற்பட்டு ஆத்ம ஸமர்ப்பணத்தில் ஸம்பூர்ணமாகிறது. ஞானத்திற்கும், மனோ வாக்குக் காயங்களை ஈச்வரனுக்கு ஸமர்ப்பிப்ப தற்கும் வித்யாஸமே இல்லை. இந்த ஆத்ம ஸமர்ப்பணம் நிஜமானால்தான் ஸம்பூர்ணமாகும். பக்தன் ஈச்வரனோடு விலை பேசவோ, அல்லது அவனிடத்தில் தனக்கு இது வேண்டும் அது வேண்டுமென்று கேட்கவோ கூடாது. இந்தப் பூர்ண ஸமர்ப்பணத்திற்குள் எல்லாம் அடக்கம். ஞானம், பக்தி, வைராக்யம், அன்பு எல்லாம் அதுவே.

V

ஆத்மாவும் அகந்தையும்

சி:—ஸமுத்திரத்தில் ஸங்கமமாகும் நதிக்குத் தனி யிருப்பு அற்றதுபோல, இறப்பினால் ஜீவனுக்கும் இருப் பற்றுப் புனர்ஜன்ம மற்றுப்போகாதா?

ம:—ஜலம் ஆவியாகி மலைமேல் மழையாகப் பெய்து மறுபடியும் நதிகளாக ஸமுத்ரத்திற் சேர்கிறது. அது போல ஜீவர்களும் தூக்கத்தில் தனிமையை யிழந்து, ஸம்ஸ்காரம் அல்லது பூர்வ வாஸனைக்குத் தக்கபடி மீண் டும் வெளிவருகின்றனர். அதுபோல் இறப்பிலும் ஸம்ஸ் காரத்தோடு கூடின ஜீவன் அழிவுறான்.

சி:—அஃதெப்படி?

ம:—வெட்டின மரத்தின்கிளைகள் மீண்டும் தளிர்க்க வில்லையா? அதன் வேர்கள் கெடாதிருக்கும்வரையில் மரமும் வளர்ந்துகொண்டே யிருக்கும். மரணத்தில் இதயத்தோடு ஒன்றுபடும் காரணத்தினால் மட்டும் ஸம்ஸ்

காரங்கள் ஒழியா. தக்க காலத்தில் மறுபடியும் பிறக்கும். இதுவே ஜீவர்கள் மறுபிறவிக்கு ஹேது.

சி:—இதயத்தில் ஒடுங்கின ஸூக்ஷ்மமான ஸம்ஸ்காரங்களிலிருந்து அனந்த ஜீவர்களும், ஜீவர்களோடு ஸம்பந்தப்பட்ட விசாலமான உலகமும் எப்படி உண்டாகும் ?

ம:—பெரிய ஆலமரம் சின்ன வித்திலிருந்து முளைப்பதுபோல, ஜீவர்களும் நாமரூபப் பிரபஞ்சமும் ஹ்ருதயத்திலிருந்து உண்டாகின்றன.

சி:—பூரணப் பொருளிலிருந்து தனி ஜீவன் எப்படி உதிக்கிறான்? அவன் மறுபடியும் தன் மூலத்தை அடைய முடிவதெப்படி ?

ம:—நெருப்பிலிருந்து பொறி கிளம்புவது போலப் பூரணத்திலிருந்து ஜீவன் கிளம்புகிறான். இந்தப் பொறிக்கே அகந்தை யென்று பெயர். அஞ்ஞானி, அகந்தை எழும்பொழுதே அதை ஒரு பொருளோடு சேர்த்துவிடுகிறான். அப்படிப் பொருளோடு சேராமல் அது தனித்திருக்க முடியாது. இந்தச் சேர்க்கைக்கே அஞ்ஞான மென்று பெயர். இந்தச் சேர்க்கையின் அழிவே ஒருவன் முயற்சிகளின் முடிவு. இப்படி வேறு பொருளோடு சேருந்தன்மை யழிந்தால், அகந்தை சுத்தமாவதோடு, தன் மூலத்தில் ஒடுங்குகிறது. தனக்கு உடம்போடுள்ள பொய்ச் சேர்க்கையே தேகாத்ம புத்தி. நல்ல பலன்கள் அடுப்பதற்கு, இந்தத் தேகாத்மபுத்தி ஒழிய வேண்டும்.

சி:—அதை ஒழிப்பதெப்படி ?

ம:—தூக்கத்தில் உடம்போடும் மனத்தோடும்கூடாமல் நீ இருக்கிறாயல்லவா? ஸ்வப்நம், ஜாக்ரம் இவ்விரண்

டினும் நீ அவற்ரேடு கூடியிருக்கிருய். நீ தேகமேயானல் ஸுஷுப்தியில் நீ தேகமற்றிருப்பதெப்படி? உனக்கு அன்னியமாயிருப்பதிலிருந்து நீ உன்னைப் பிரித்துக் கொள்ளலாம். ஆனல், உன்ஞேடு ஒன்றியுள்ளதிலிருந்து பிரிக்க முடியாது. ஆகையால் தேகமும் அகந்தையும் ஒரு பொருளல்ல. விழிப்பு நிலையிலேயே இதை நன்கு உணர வேண்டும். மூன்று அவஸ்தைகளையும் சோதிப்பது இந்த அறிவை யடையும்பொருட்டே.

சி:—ஜாக்ரஸ்வப்ந அவஸ்தைகளுடன் ஸம்பந்தப் பட்ட அகந்தை, ஜாக்ரஸ்வப்நஸுஷுப்திகளாகிய மூன்று அவஸ்தைகளையும் தனக்குள் கொண்ட அந்த ஒன்றை அறிய முயல்வ தெப்படிக்கூடும்?

ம:—இருநிலைகள் அல்லது இரு எண்ணங்களுக் கிடைவெளிகளில் சுத்த அகந்தை அநுபவமாகும். அகந்தை, ஒன்றைப் பற்றியபின் ஒன்றைவிடும் புழுவைப் போன்றது. பொருள்களுடனும் எண்ணங்களுடனும் பற்றற்ற பொழுதே, அதன் மெய்யியற்கை தோன்றும். ஜாக்ரஸ்வப்நஸுஷுப்திகளாகிய மூன்று நிலைகளையும் சோதித்து அடையப்படும் உறுதியாகிய இந்த இடைவெளியே உனது உண்மைநிலையாக, நித்ய நிர்விகார தத்துவமாக உணரவேண்டும்.

சி:—நான் விழிப்பிலிருப்பதுபோல் என் இஷ்டப் படி எவ்வளவு காலம் வேண்டுமோ அவ்வளவு காலம் ஸுஷுப்தியில் இருக்க முடியாதா? இந்த மூன்று நிலை களைப்பற்றி ஞானியின் அநுபவம் யாது?

ம:—உன் விழிப்பிலுங்கூட உறக்கம் இருக்கிறது. நீ இப்பொழுதும் ஸுஷுப்தியில்தான் இருக்கிருய். அதை இவ் விழிப்பிலேயே அறிவோடு உட்புகுந்தடைய

வேண்டும். உண்மையில் அதற்குட் போவதுமில்லை; அதைவிட்டு வருவதுமில்லை. ஜாக்ரத்திலேயே ஸுஷுப்தியை உணர்வதுதான் ஜாக்ரஸுஷுப்தி அல்லது சமாதி நிலை. அஞ்ஞானி அதிக நேரம் ஸுஷுப்தியிலிருக்க முடியாது. அவன் இயற்கை அவனை அதனின்றும் வெளியில் தள்ளிவிடுகிறது. அவன் அகந்தை இறக்கவில்லை. அது மீண்டும் மீண்டும் எழும். ஆனால் ஞானி அகந்தையை அதன் மூலத்திலேயே அடக்கிவிடுகிறான். அவன் விஷயத்திலுங்கூடப் பிராரப்தத்தால் வெளிப்படுத்தப் படுவதுபோல் அகந்தை எழலாம். அதாவது அஞ்ஞானியிடம் பிராரப்தம் அகந்தையை நிலைக்கச் செய்வது போல, வெளித் தோற்றத்துக்கு ஞானியிடமும் இப்படி ஏற்படலாம். ஆனால் இம் மூல வித்யாசம் இருக்கிறது. அஞ்ஞானியின் அகந்தை எழும்பொழுது-அது உண்மையில் உறக்கத்திலன்றி என்று மொடுங்கியதின்று - தன் மூலத்தை அது சிறிதும் அறிவதே இல்லை. அதாவது அஞ்ஞானிக்குக் கனவுநனவுகளில் தனது ஸுஷுப்தி நிலை தெரியாது. ஆனால் ஞானிக்கோ அகந்தையின் எழுதலோ இருப்போ தோற்றமாத்திரம். இப்படி எழுவது மிருப்பதுமாகத் தோன்றினும் அவனெப்பொழுதும் அதன் மூலத்தில் லக்ஷ்யம் வைத்துத் தன்னகண்ட அதீத (மூன்று நிலைகளையும் கடந்த) அநுபூதி யுட்கொண்டவன். அவனுக்கு இவ்வகந்தையால் அபாயமில்லை. இது எரிந்த கயிற்றின் சாம்பல் உருப்போன்றது. அதற்குக் கயிற்றின் உருவம் இருக்கிறதேயொழிய, அதைக் கொண் டொன்றையும் கட்டமுடியாது. நிரந்தரமாக மூலத்திற் கவனம் நிறுத்தப்பட்டால், கடலில் உப்புப் பொம்மை போல் அகந்தை அம்மூலத்தி லழிவுறும்.

சி:—சிலுவையில் அறைதல் என்பதன் உண்மைப் பொருளென்ன?

ம:—அகந்தையே கிறிஸ்து. தேகமே சிலுவை. தேகாத்ம புத்தியை அதில் அறைந்தால், அகந்தை யழிந்து, எஞ்சியிருப்பது பூரணப்பொருளே. இந்நிகழ்ச் சியே உயிர்த்தெழல் என்பது.

சி:—இம்மாதிரி அறைதல் நியாயமா? கொலை ஒரு பெரும் பாதகமல்லவா?

ம:—ஒவ்வொருவரும் தற்கொலை செய்துகொண்டு தானிருக்கிறார்கள். இந்த அஞ்ஞான வாழ்க்கையினால் நித்தியானந்த நிஜஸ்திதி அழிக்கப்படுகிறது. அந்த நித்ய நிச்சய நிலையைக் கொலைசெய்ததாலேயே இந்த ஜன்மம் தோன்றியிருக்கிறது. இது வாஸ்தவத்தில் ஆத்மஹத்தி அல்லவா? அப்படி யிருக்க, கொலையாதிபற்றிக் கவலைப் படுவானேன்?

சி:—நிர்விகல்ப ஸமாதியில் இருபத்தொரு நாட் களுக்கு மேல் இருக்கமுடியாது என்றும், அதற்குமேல் முயலும் ஒருவன் இறந்துவிடுவான் என்றும் ஸ்ரீராம கிருஷ்ணர் சொல்லுகிறார். அது ஸத்தியமா?

ம:—பிராரப்தம் அழிந்தால் அகந்தை இருந்தவிடம் தெரியாமற் கரைந்துவிடும். இதுவே பூர்ண நிர்வாணம். பிராரப்தம் அழிவுற்று லொழிய, ஜீவன்முக்தரிடத்தில் எழுவதாகத் தோன்றுவதுபோல் அகந்தை தோன்றிக் கொண்டேயிருக்கும்.

VI

ஆத்மாநுபூதி

சி:—ஆத்மாநுபூதி யடைவ தெப்படி?

ம:—அநுபூதி ஒன்றும் புதிதாக அடையப்படுவ தன்று. அது ஏற்கெனவே இருக்கிறது. வேண்டுவதெல் லாம், 'நான் அநுபூதி அடையவில்லை' என்கிற எண்ணத் தைத் தொலைத்தலே. சும்மாவிருத்தல் அல்லது சாந்தியே அநுபூதி. ஆத்மா இல்லாத வேளை இல்லை. சந்தேகமோ அநுபூதி யடையவில்லை என்கிற உணர்ச்சியோ இருக்கிற வரையில் இவ்வெண்ணங்களை ஒழிக்க முயலவேண்டும். இவை ஆத்மாநாத்மச் சேர்க்கையால் ஏற்படுவன. அநாத்மா மறைய ஆத்மாவே நிற்கும். இடம் உண்டாக்க, அடைத்துக்கொண்டிருப்பவற்றை அகற்றினாற்போதும்; வேறெங்கிருந்தோ இடம் கொண்டுவரப்படுவதில்லை.

சி:—வாஸனாக்ஷயத்தாலன்றி ஆத்மாநுபூதி உண் டாகாதென்றால் வாஸனைகள் முற்றும் அறப்பெற்ற அந்த ஸ்திதியை அறிவ தெப்படி?

ம:—நீ இப்பொழுதே அந்நிலையி லிருக்கிறாய்.

சி:—ஆத்மாவைப் பற்றிக்கொண்டிருப்பதென்றால், வாஸனைகள் எழும்போதே அழிக்கவேண்டு மென்று கருத்தா?

ம:—நீ இருக்கிறபடியிருந்தால் வாஸனைகள் தாமே நசிக்கும்.

சி:—ஆத்மாவை நான் எப்படி யடைவேன்?

ம :—ஆத்மாவை அடைவது என்பதில்லை. ஆத்மாவை அடைவதாயிருந்தால் ஆத்மா இங்கு இப்பொழுது இல்லை யென்றும், அதை இனிமேல் அடையவேண்டுமென்றும் பொருள்படும். புதிதாக அடையப்படுவது இழக்கப் படும்; நிலைக்காது; நிலைக்காததற்காக முயல்வதும் வீண். ஆதலால் ஆத்மா இனி அடையப்படுவதன்று. நீயே ஆத்மா. நீ அதுவாகவே இருக்கிறாய். உண்மையென்ன வென்றால் இந்த உன் இன்ப நிலையை நீ அறியவில்லை. அறியாமை குறுக்கிட்டு ஆனந்தமாகிய பரிசுத்த ஆத்மா வின்மேல் ஒரு திரையிடுகிறது. இந்த அஞ்ஞானத் திரை யாகிய தப்பறிவைப் போக்குவதற்கே, இத்துணைப் பிர யத்னங்களும். மனம் புத்தி இவைகளோடு ஆத்மாவைப் பொய்யாகச் சேர்த்துப் பார்ப்பதிலேயே பிழையிருக் கிறது. இப் பொய்யொற்றுமை தொலையவேண்டும். அப் பொழுது ஆத்மாவே மிஞ்சி நிற்கும்.

ஆகையால், அநுபூதி என்பது ஒவ்வொருவர்க்கும் இருக்கிறது அப்யாஸிகளுக்குள் அநுபூதியில் வித்யாஸ மில்லை. 'யான் இதையறியமுடியுமா' என்னுமையமும், 'நான் அறியவில்லையே' என்னுமெண்ணமுமே தடை கள். இத்தடைகளினின்றும் விடுபட்டிரு.

சி :—ஸமாதியால் என்ன பிரயோஜனம்? அங்கே எண்ணமிருக்கிறதா?

ம :—ஸமாதியே ஸத்யத்தை வெளிப்படுத்தும். எண் ணங்கள் ஸத்யத்தை மறைக்கும். ஆகையால், ஸமாதி யிலேதவிர மற்ற நிலைகளில் ஸத்யம் உணரப்படுவதில்லை. ஸமாதியில், 'நான் இருக்கிறேன்' என்னும் உணர்ச்சி தவிர, வேறு எண்ணங்கள் இரா. "நானிருக்கிறேன்" என்னுமநுபவமே சும்மாவிருத்தல்.

சி:—நான் இங்கே அடைகிற ஸமாதி அல்லது சாந்தி யநுபவத்தை மற்ற இடங்களிலும் எப்படி அடையலாம்?

ம:—இப்பொழுதிருக்கும் ஸாந்நித்ய அநுகூலமே உனது தாத்காலிக அநுபவத்திற்குக் காரணம். இந்த ஸமூகத்துக்கயலாய் நீ அதை அடையமுடியுமா? இந்த அநுபவம் இடம்பற்றியது. அது ஸ்திரப்படுகிறவரையில் அப்யாஸம் அவசியம்.

சி:—தன் ஜீவோபாதிக்கு வெளியில் மையங் கொண்டு, தன்னில் அனைத்தையும் அடக்கியதாய்க் காணும் ஓரறிவின் ஒளி விலாசங்கள் சில சமயங்களில் தெளிவாய் ஒருவற்கு ஏற்படுகின்றன. இந்த அபூர்வ ஒளிகளை அடைந்து ஸ்திரப்படுத்தி விசாலமாக்குவதற்கு தத்துவசாஸ்திர பரிபாஷைகளை உபயோகிக்காமல் பகவான் உபாயம் சொல்லவேண்டும். இந்த அநுபவ அப்யாஸத்தில் விவகாரங்களை விட்டு விலகுவது அவசியமா?

ம:—வெளியிலா! உள் வெளி யாருக்கு? திருசியம் த்ரஷ்டா இருக்கிறவரையில்தான் இவை இருக்கமுடியும். மேலும், இவ்விரண்டும் யாருக்கு? சோதிக்கில் திருசியம் த்ரஷ்டாவாய் முடியும். இந்த த்ரஷ்டா யார்? இந்த விசாரம் த்ரஷ்டாவுக் கப்பாலுள்ள சுத்த அறிவிற் கொண்டுபோய்விடும். ஜீவோபாதி என்பது மனம். இந்த மனம் எல்லையுடையது. ஆனல் சுத்தவறிவு எல்லையற்றது. முன் சொன்ன விசாரத்தா லடையத்தக்கது.

அடைதல்—ஆத்மா அடையப்பட்டே யிருக்கிறது; நீ அதையறியத் தடையாக மூடிக்கொண்டிருக்கும் ஆவரணத்தை நீக்கலே வேண்டுவது.

ஸ்திரப்படுத்தல் :—ஆத்மா ஒருதரம் அநுபவிக்கப் பட்டால், அது நித்யப்ரத்யக்ஷமாய்த் தானாக அநுபவிக் கப்படும். அது என்றும் அகல்வதில்லை.

விசாலமாக்கல் :—ஆத்மாவை விசாலமாக்க லென்ப தில்லை. இருக்கிறபடியே இருக்கிறது. அதில் குறுகலோ விரிதலோ இல்லை.

விவகாரங்களை விட்டு விலகல் :—ஆத்மாவில் ஸ்திதி யே ஏகாந்தம். அதற்கயலொன்றுமில்லை. விலகல் என் பது ஏதோ ஒரு நிலையிலிருந்தோ இடத்திலிருந்தோ பிறிதொன்றற்கு நிகழ்வது. ஆத்மாவுக்கயலாய் இவ் விரண்டுமில்லை. எல்லாம் ஆத்மாவாக இருக்க, விலகல் என்பது முடியாதது; எண்ணவுங் கூடாதது.

அப்யாஸம் :—ஸஹஜமான சாந்திக்கு ஏற்படும் தடை நிவிருத்தியே அப்யாஸம். நீ அப்யாஸம் செய் தாலும் செய்யாவிட்டாலும் ஸஹஜஸ்திதியிலேயே இருக் கிறாய். கேள்வி சந்தேகம் அற்று நிற்றலே உனது நிஜஸ்திதி.

சி :—ஸமாதி கிடைத்தால் ஸித்திகளும் கிட்டுமல் லவா?

ம :-ஸித்திகளை உணரத் தனக்கயலாகப் பிறரிருக்க வேண்டும். என்றால், அவைகளை வெளிக்காட்டுவானிடம் ஞானமில்லை யென்பது அர்த்தம். ஆகையால் ஸித்திகள் ஒரு பொருளாகக் கருதத்தக்கன வல்ல. ஞானத்தையே லக்ஷ்யமாகக் கருதி யடையவேண்டும்.

சி :—எனக்கு அநுபூதியுண்டானால், அதனாற் பிறர்க் குப் பயனுண்டா?

ம :—ஆஹா! அதுவே நீ பிறர்க்குச் செய்யக்கூடிய பேருபகாரம். அரிய ரஹஸ்யங்களைக் கண்டுபிடித்தவர்

அனைவரும் ஆத்மாவின் ஆழ்ந்த சாந்தியிலேயே அவைகளைக் கண்டுபிடித்தனர். ஆனால் அந்நிலையில் ஸஹாயஞ் செய்ய, உண்மையில் அன்னியரொருவருமில்லை. பற்பல பொன்னணிகளை மதிப்பிடும்போது, தட்டான் பொன்னையே காண்பதுபோல அநுபூதிமானும் ஆத்மாவையே காண்கிறான். உன்னை நீ தேகமாகக் கருதின் நாமரூபங்களெதிர்ப்படும். நீ தேகாத்மபுத்தி தீர்ந்து நின்றால் உனக்கயலாக ஒருவரும் காணப்படமாட்டார். அநுபூதிமான் உலகத்தைத் தனக்கயலாகக் காண்பதில்லை.

சி :—ஞானிகள் மற்றவர்களோடு கலந்திருப்பது நல்லதல்லவா?

ம :—கலப்பதற்குத் தனக்கயலாவா ரொருவரும் இல்லை. ஆத்மா வொன்றே ஸத்யம்.

சி :—கஷ்டப்படும் உலகத்தார்க்கு நான் உபகாரம் செய்யவேண்டியதில்லையா?

ம :—உன்னைப் படைத்த சக்தியே உலகத்தையும் படைத்தது. உன்னைக் காப்பாற்றும் அந்த மகாசக்தி அவ்வாறே உலகத்தையும் காப்பாற்றும். கடவுளே உலகத்தை சிருஷ்டித்திருப்பதால் அதைக் காப்பாற்றுவதும் அவர் பொறுப்பு; உன் வேலையன்று.

சி :—தேசபக்தி கொள்வது நம் கடமையல்லவா?

ம :—சும்மா விருப்பது மாத்திரமே உன் கடமை. இதுவாகவோ அதுவாகவோ இருப்பது உன் கடமையல்ல. வெறும் *"அஸ்மிதாவே நான்" என்பதில் முழுவதும் அடங்கிக் கிடக்கிறது. "சும்மா விரு" என்பதே உபாயத்தின் ஸாரம். "சும்மா" என்பதன் பொரு

*அஸ்மிதா—இருக்கிறேன் என்பது.

னென்ன? உன்னைக் கொல் என்பது அதன் பொருள். நாமரூபம் ஒவ்வொன்றும் துன்பத்திற்கே காரணம், "நான், நான்" என்பது ஆத்மா; 'நானிது' என்பது அகந்தை. நான் நானாகவே யிருப்பது ஆத்மா; அது குறுக்கே பாய்ந்து நானிது, நானது என்றால் அது அகந்தை.

சி:—ஆனால் கடவுள் யார்?

ம:—ஆத்மாவே கடவுள். "இருக்கிறேன்" என்பது கடவுள். ஆத்மாவுக்கன்னியமாகக் கடவுள் இருந்தால் அவர் ஆத்மாவற்றவராவார். இப்படிச் சொல்வது மூடத்தனம்.

கடவுளை யுணர்வதற்குச் செய்யவேண்டியதெல்லாம் சுமமா விருத்தலே. இதைக்காட்டிலும் சுலபமானது யாது? ஆகையால் ஆத்மவித்தை அதிசுலபம்.

VII

குருவருள்

சி:—குருகிருபை என்பதென்ன? அதனால் ஆத்மாநுபூதி எப்படி உண்டாகும்?

ம:—குரு என்பது ஆத்மா. சில வேளை மனிதன் உலகவாழ்வில் உள்ளதைக்கொண்டு திருப்தியடையாமல் அதிருப்திமேலிட்டு தன் ஆசைகள் நிறைவேறக் கடவுட் பூஜை முதலானவை செய்கிறான். கிரமமாக அவன் மனம் சுத்தமடைந்து, உலக ஆசையைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு மேலாகக் கடவுளையறிய விரும்புகிறான். அப்போது கடவுளருள் தோன்ற ஆரம்பிக்கிறது. கடவுள் குருவுருக்கொண்டு பக்தனுக்குத் தோன்றி, ஸத்யத்

தைப் போதித்துத் தன்னிணக்கத்தால் அவன் சித்தத்தை சுத்தம் செய்கிறார். பக்தன் மனம் பலமடைந்து அந்தர்முகப்படுகிறது. தியானத்தால் அது இன்னும் சுத்தப்பட்டுச் சிறிதும் அலைவற்றுச் சும்மா நிற்கிறது. அந்த அமைதியான ஆகாசமே ஆத்மா.

குரு வெளியுமுள்ளார்; உள்ளுமுள்ளார். வெளியிலிருந்து மனம் உண்முகமாகும்படி தள்ளுகிறார். உள்ளிலிருந்து மனத்தைத் தன்வசமிழுத்து, அதை அமைதியாக வைத்துக்கொள்ள உதவுகிறார். இதுதான் குரு கிருபை. தெய்வம், குரு, ஆத்மா இவை ஒன்றே.

சி:—பிரம்மஞான சங்கத்தில் தங்களை நடத்த குருவைத் தேடுவதற்காகத் தியானம் செய்கிறார்கள்.

ம:—குரு உள்ளே இருக்கிறார். அவர் வெளியில் மாத்திரம் இருக்கிறாரென்ற தப்பெண்ணத்தைத் தீர்க்கும் பொருட்டே தியானம். நீ தேடும் குரு உனக்கயலாயிருந்தால் அவர் மறைந்துவிடுவதும் நிச்சயம். அவ்வாறு தோன்றி மறையுங் குருவினால் பயனென்ன? நீ தனி யென்றோ உடம்பென்றோ கருதுகிறவரையில் உனக்கு வெளி குருவும் தேவையே; அவர் உடம்புடன் காணப்படுவார். தன்னை உடம்பாகக் கருதும் பொய் தீர்ந்தால், குரு ஆத்மாவுக் கயலற்றுக் காணப்படுவார்.

சி:—ஆத்மஞான மடையக் குரு உதவி செய்வாரா?

ம:—குரு உன் கையைப் பிடித்துக்கொண்டு காதில் ஓதுவாரா? நீ எப்படி இருக்கிறாயோ அப்படியே அவரும் இருப்பதாக நீ எண்ணிக்கொள்ளலாம். உனக்கு உடம்பிருப்பதனால் அவருக்கும் உடம்பிருக்கிறதென்றும் உனக்கு அவர் ஏதோ பிரத்யக்ஷ அனுகூலம் செய்வா

ரென்றும் நீ கருதுகிறாய். ஆனால் அவர் வேலை அந்தரங்கத்தில் ஆத்ம ஸம்பந்தமானது.

சி :—குருவைக் காண்பதெப்படி?

ம :—ஸர்வ வியாபியாகிய ஈச்வரன் தன் பக்தன் மேற் கருணைகூர்ந்து, பக்தன் பக்குவத்துக்குத் தக்கபடி அருளுருக்கொண்டு வருகிறார். பக்தன், குருவை மனிதனென்று நினைத்து, இரண்டு பௌதிக சரீரங்களுக்கும் ஸம்பந்த மேற்படுத்திக்கொள்ளப் பார்க்கிறான். ஆனால் பரமாத்மாவாகிய ஈச்வரனே மனிதவுருத் தாங்கி வந்துள்ள குரு, உள்ளிருந்து இவன் வழிகளிற் பிழை காண உதவி, ஆத்மாவை அறியும்வரை சரியான மார்க்கத்தில் அவனை நடத்துகிறார்.

சி :—அப்படியானால் பக்தன் என்ன செய்யவேண்டும்?

ம :—குரு வார்த்தையின்படி நடந்து உள்ளே உழைக்கவேண்டும். குரு உள்ளும்புறமு மிருப்பதால் நீ உண்முகப்பட அநுகூலமான ஸ்திதியை எற்படுத்தி, உன்னை மையத்துக்கு இழுக்க அவர் உண்முகத்தையும் தயார் செய்கிறார். இவ்வாறு நீ உள்ளத்தில் நன்கு நிலைநிற்கும் பொருட்டு அவர் வெளியிலிருந்து உன்னை உள்ளுக்குத் தள்ளி, உள்ளிருந்தும் இழுத்துக்கொள்கிறார். உன் சொந்த முயற்சியால் உலகத்தை வென்றுவிடலாமென எண்ணுகிறாய். உன் வெளிமுயற்சி யெல்லாம் வீணாகி உள்ளே ஒடுங்குகிறபோது, 'ஆ! மனிதனை அதிக்ரமித்த ஒரு சக்தி இருக்கிறது' என்று உணர்கிறாய்.

அகந்தை அடக்கப்படக் கூடாத ஒரு மதயானை. அதையடக்கச் சிங்கத்துக்குக் குறைந்த எதனாலும் முடியாது. அந்தச் சிங்கமே குரு. அவருடைய ஒரே பார்வை

இந்த மதயானையாகிய அகந்தையை நடுங்கச்செய்து கொன்றுவிடுகிறது. காலக்கிரமத்தில், நீ அழிந்த விடத்திலேயே உன் நிஜ மகிமையுள்ள தென்பதை யுணர்வாய். அந்த நிலையை யடைய நீ ஆத்ம ஸமர்ப்பணம் செய்ய வேண்டும். அப்போது குரு உன் பக்குவமறிந்து உன்னை நடத்துகிறார்.

சி:—யாதொரு உபதேசமும் தீக்ஷையும் செய்யாத குருவின் மௌனம், அவர் பேசும் வார்த்தைகளைவிட, சாஸ்திர சர்ச்சைகளைவிட எப்படி அதிக சக்தி வாய்ந்தது?

ம:—மௌனமே அதிதீவிரமான கிரியை. சாஸ்திரங்கள் எவ்வளவு விஸ்தாரமாயும் அழுத்தமாயுமிருந்தாலும், அவை பலிதத்தில் தவறுகின்றன. குரு இருந்தபடி இருக்கிறார். எல்லாரிடத்திலும் அருள் தாண்டவமாடுகிறது. ஸர்வ சாஸ்திரங்களிலும் இந்த மௌனம் வெகு விசாலமும் மிக அழுத்தமுமானது.

சி:—அதனால் சிஷ்யனுக்கு ஆனந்த மேற்படுமா?

ம:—குருவுக்குத் தன்னை ஸமர்ப்பித்தவுடன் சிறிதும் அகந்தையின் வாசனைக்குக் கூட இடமில்லை. ஸமர்ப்பணம் ஸம்பூர்ணமாயிருந்தால், அகந்தையுணர்வனைத்து மற, துன்பமே யிருக்கமுடியாது. ஸத்ய ஆத்மா ஆனந்தமே தவிர வேறன்று. அதுவேதான் நூதன தர்சனம்.

சி:—அருளை அடைவதெப்படி?

ம:—அருள் ஆத்மாவே. அதுவும் அடையப்படுவதன்று. அது இருப்பதென நீ உணரவேண்டும். சூரியன் பிரகாசமாத்திரமே; அது இருட்டைக் காண்பதில்லை. அப்படியிருந்தும் சூரியப் பிரவேசத்தால் இருள் ஓடி-

விடுகிற தென்கிருய். அதுபோலச் சிடனது அறியாமை யும் இருளுருப்போல குருவீக்ஷண்யத்தால் இல்லாதாகி விடுகிறது. உன்னைச் சுற்றிலும் சூரிய வெளிச்ச மிருக் கிறது. ஆனல் சூரியனைப் பார்க்க அதன் பக்கம் நீ திரும்பிக் காணவேண்டும். அதுபோல ஸ்வதஸ்ஸித்த மாயினும், அருளையுள்ளபடி நாடி யடையவேண்டும்.

சி:—அருள், நாடுவானது பக்குவத்தைத் துரிதப் படுத்தாதா?

ம:—அதை யெல்லாம் குருவிடம் ஒப்புவித்துவிடு. யாதொன்றும் மிச்சம் வைத்துக்கொள்ளாமல் அவரைச் சரணடை.

இரண்டில் ஏதாவதொன்று செய்யவேண்டும். உன் அசக்தத்தை யுணர்ந்து, பரமேச்வரசகாயம் அவசியமா யிருப்பதால் சரண்புகு; அல்லது துன்பத்தின் மூலான் வேஷணம் செய்து மூலத்தை யடைந்து ஆத்மாவில் ஆழ்ந்துவிடு. எவ்வழியாலும் நீ துன்பத்திலிருந்து விடு படுவாய். ஈச்வரனே குருவோ தன்னைச் சரண் புகுந்த பக்தனைக் கைவிடுவதில்லை.

சி:—குருவுக்கோ கடவுளுக்கோ நமஸ்கரித்தலின் தாற்பரிய மென்ன?

ம:—அகந்தை யடங்கி மூல ஆத்மாவில் ஒடுங்குதல் இதன் பொருள். வெளிச்சின்னங்கள் வணக்கங்களால் கடவுளோ குருவோ ஏமாறமாட்டார். அகந்தை இருக் கிறதா இல்லையா என்பதையே கவனிப்பார்.

சி:—பகவான் இலையிலிருந்து, அநுக்ரஹத்துக் கறி குறியாகச் சிறிது பிரஸாதம் தரலாகாதா?

ம:—அகந்தையை நினையாமல் உண். அப்போது நீ சாப்பிடுவதெல்லாம் பகவத் பிரஸாதந்தான்.

சி:—படித்தவனுக்குக் குருகிருபை தேவையில்லாத தால் அவன் ஞானோதயத்துக்கு விசேஷ யோக்யதை யுடையவ னல்லவா?

ம:—படிப்பற்ற ஞானியின்முன் பண்டிதனும் பணிய வேண்டியதுதான். எழுத்துவாசனை யில்லாதது அறி வின்மைதான். படிப்போ, கற்றும் அறிவின்மை. இரண்டு பேரும் உண்மை லக்ஷ்யத்தை அறிந்தவரல்லர். வேறோர் விதத்தில் ஞானியும் அறியாதவனே; ஏனென்றால் அவ னுக்கு ஒரு லக்ஷ்யமுமில்லை.

சி:—குருவநுக்ரஹத்தை அடைவதற்கல்லவா அவ ருக்குக் கையுறை வழங்கப்படுகிறது; அதனாலன்றோ பகவானுக்குப் பொருள்கள் ஸமர்ப்பிக்கப்படுகின்றன!

ம:—ஏன் கையுறை கொண்டு வருகிறார்கள்? நான் கேட்கிறேனா? வேண்டா மென்றாலும் கொணர்ந்து திணிக்கிறார்கள். என்? ஒரு தரம் வாங்கிக்கொண்டு விட்டால், பிறகு வேண்டாமென்று நிராகரிக்க முடியாது. சிறு ஊன்போட்டுப் பெருமீன் பிடிக்கிற வியாபாரந் தானிது. தூண்டிற்காரனுக்கு மீன்களுக்கு இரைபோட வேண்டு மென்று வெகு அக்கரையா? மீனைப்பிடித்துச் சாப்பிடுவதி லன்றோ திருஷ்டி!

சி:—அநேக தீக்ஷைகள் ஆகிய பிறகு தான் மோக்ஷ மடையலாகு மென்று பிரம்மஞானசபையார் சொல் வதில் ஏதாவது உண்மை யுண்டா?

ம:—ஆம். ஒரே ஜன்மத்தில் மோக்ஷமடைபவர்கள் முன்ஜன்மங்களிலேயே எல்லாத் தீக்ஷைகளையும் அடைந் திருக்கவேண்டும்.

சி:—ஞானி விதேகனான பிறகு நாலைந்து விதமான வேலைகளை இவ்வுலகத்திலோ பிறவுலகத்திலோ மேற்கொண்டு செய்யவேண்டுமென்று பிரம்மஞானசபையார் சொல்லுகிறார்கள். இதைப்பற்றி பகவான் அபிப்பிராயமென்ன?

ம:—சிலர் அப்படி ஆதிகாரிக புருஷர்களாகலாம்; எல்லாருமல்ல.

சி:—கண்ணுக்குத் தெரியாமலே ரிஷிகணத்தோர் உலககாரியங்களைக் கவனித்துவருகிறார்களாமே! பகவானுக்கு அவ்வாறு ஏதாவது தெரிகிறதா?

ம:—கண்ணுக்குத் தெரியாமலென்றால் எப்படிக் காண்கிறது?

சி:—ஞானதிருஷ்டியில்.

ம:—ஞானதிருஷ்டியில் ஞானத்துக்கு அன்னியமாக யாதொன்றுமில்லை.

சி:—நான் அவர்களைத் தெரிந்துகொள்ள முடியுமா?

ம:—உனது பாரமார்த்திக ஸத்யத்தை உணர்ந்து கொண்டால், ரிஷிகள் ஆசாரியர்களுடைய ஸத்யமும் உனக்கு விளங்கும். இருப்பது ஒரே ஒரு குரு. அது ஆத்மாவே.

சி:—புனர்ஜன்மம் உண்மைதானா?

ம:—அறியாமை உள்ளவரையில் புனர்ஜன்மம் உண்டு. வாஸ்தவத்தில், இப்பொழுதோ இதன் முன்போ யாரும் ஜன்மமெடுத்ததேயில்லை; இனியும் எடுக்கப்போவதில்லை. இதுதான் உண்மை.

சி:—யோகிக்குப் பூர்வஜன்மமெல்லாம் தெரியுமா?

ம:—இந்த ஜன்மத்தைப் பற்றி முதலில் உனக்குத் தெரியுமா? பூர்வஜன்மமெல்லாம் தெரியவேண்டுமென்கிருயே! இந்த ஜன்மத்தைப்பற்றிய உண்மையை இப்பொழுது தெரிந்துகொள்; மற்ற ஜன்மங்களைப்பற்றிய உண்மையெல்லாம் தானே தெரியும். இப்போதுள்ள இச் சிற்றறிவை வைத்துக்கொண்டே இவ்வளவு கஷ்டப்படுகிருய். இன்னும் அதிக அறிவை மனத்தில் ஏற்றிக்கொள்வானேன்! இன்னும் அதிகக் கஷ்டப்படவா?

சி:—மற்றவர்களுக்கு ஞானமுண்டாக்க பகவானது ரஹஸ்ய சக்திகள் உபயோகமாகின்றனவா, அல்லது பகவான் அநுபூதியே அதற்குப் போதுமா?

ம:—மற்றெல்லா சக்திகளைக் காட்டிலும் ஆத்மாநுபூதியே மஹாசக்தி வாய்ந்தது. ஞானிக்கு அகந்தையற்றுப்போனதால் அவனுக்கு அயலார் எவருமில்லை. அவன் உனக் களிக்கக்கூடிய மிகச்சிறந்த நலன் யாது? ஆனந்தம். ஆனந்தம் சாந்தியிற் பிறக்கிறது. கலக்கமற்ருல் தான் சாந்தி நிலைக்கும். கலக்கம் மனத்திலெழும் எண்ணங்களா லுண்டாவது. மனமே யில்லையென்ருல் பூர்ண சாந்தியே உள்ளது. மனம் செத்தாலொழிய சாந்தியும் சுகமும் பெறமுடியாது. முதலில், தான் இன்புற்ருலொழிய மற்றவர்களை இன்புறுத்தவும் முடியாது. மனமற்ற ஞானிக்கு, அவன் திருஷ்டியில் மற்றவர் இல்லாததால், அவன் அநுபூதியே மற்றவர்களைப் பரவச மாக்கப் போதியதாகும்.

VIII

சாந்தியும் சுகமும்

சி:—ஆத்ம விசாரத்தால் எனக்கு சாந்தி வராது போலிருக்கிறதே; வேறெவ்விதத்தால் வரும்?

ம:—சாந்தியே உனது சுபாவஸ்திதி. இந்தஸ்திதியை அறிய முடியாமல் தடை செய்வது மனம். விசாரம் மனத்தைப் பற்றியது. மனம் இன்னதென்று விசாரி. மனம் தொலைந்து போய்விடும். எண்ணத்தைத் தவிர மனமென்று ஒன்றுமில்லை. ஆயினும் எண்ணங்கள் தோற்றுவதனால் அவை எங்கிருந்தோ தோற்றுவதாகக் கற்பனை செய்துகொண்டு, அவ்விடத்தையே மனமென்று சொல்லுகிறாய். மனமென்பது என்னவென்று உள்ளே நுழைந்து நோக்கினால் உண்மையில் மனமென்று யாதொன்றையுங் காணோம். இப்படி மனமிறந்தால் சாசுவதமான சாந்தி விளங்கும்.

சி:—காவியம், ஸங்கீதம், ஜபம், பஜனை, இயற்கை வனப்பின் காட்சி, நல்லஸ்தோத்ரபடனம் முதலிய உபாயங்களால் அகண்ட ஏக உண்மையுணர்ச்சி சில சமயங்களில் அடைகிறோம். அகந்தை தோன்றாத, அந்த ஆழ்ந்த சாந்தியுணர்வு "இதய குகையுட் புகுத" லென்று பகவான் கூறுவதே தானா? இவ்வப்யாஸம் ஆழ்ந்த ஸமாதிக்கும் அதன் வாயிலாக ஸத்யத்தின் பூர்ண தர்சனத்துக்கும் வழியாகுமா?

ம:—அநுகூல விஷயங்கள் மனத்தின்முன் தோன்றினால் ஆனந்தமா யிருக்கிறது. இந்த ஆனந்தம் ஆத்மாவின்

இயற்கையே; அஃதன்றி வேறு ஆனந்தமில்லை. அது வெளியில் வெகுதூரத்தில் இருப்பதன்று. ஆனந்தமான தென்று நீ சொல்லும் சமயங்களில் வாஸ்தவத்தில் நீ ஆத்மாவிலேயே மூழ்குகிறாய். இப்படி மூழ்குவதால் முன்னமேயுள்ள சுய இன்பம் வெளியாகிறது. இவ்வின்பம் உன்னுள்ளேயே இருக்க, அது வெளிப்பொருள்களிலோ ஸம்பவங்களிலோ இருப்பதாக நினைப்பதற்குக் காரணம் வெறும் எண்ணங்களே. இப்படிப்பட்ட சமயங்களில் உனக்குத் தெரியாமலே நீ ஆத்மாவில் மூழ்கியிருக்கிறாய். ஏக-ஸத்ய-ஆத்மாவாய் இருக்கிற ஆனந்தமும் நீயும் ஒன்று என்னும் அநுபவஞானத்துடன் அப்படி ஆழ்ந்தால் அதையே அநுபூதியென்று சொல்லலாம். நீ ஹ்ருதயமாகிய ஆத்மாவில் அறிந்து மூழ்கவேண்டும்.

ஸ்ரீ

மஹர்ஷி வாய்மொழி

இரண்டாம் பாகம்

I

ஆத்மவிசாரம்

சீடன் :—ஆத்மாவை யறிவதெப்படி ?

மஹர்ஷி :—யாருடைய ஆத்மா ? நீயே கண்டுபிடி.

சீ :—என் ஆத்மாவைத்தான். நானார் ?

ம :—நீயே தேடிக் காண்.

சீ :—எனக்குத் தெரியவில்லையே.

ம :—நன்றாக ஆலோசித்துப்பார். "நானறியேன்" என்று சொல்கிறவன் யார்? நீ சொல்லுகிற இந்த "நான்" யார் ? நீ அறிந்துகொள்ளாதது எது ? என்ன தெரியவில்லை ?

சீ :—என்னில் உள்ளது—யாரோ, எதுவோ தெரியவில்லை.

ம :—யாரோ என்பது யார்? யாரிடத்தில் உள்ள யார் ?

சீ :—ஏதோ ஒரு சக்தியோ, என்னவோ !

ம :—தேடிப்பார்.

சீ :—நான் ஏன் பிறந்தேன் ?

ம :—பிறந்தது யார் ? உன் கேள்விகளுக்கெல்லாம் அதுவே பதில்.

சீ :—அப்படியானால் நானார் ?

ம :—(புன்சிரிப்புடன்) என்னைப் பரீக்ஷை பார்க்கவா வந்தாய்? நீயே சொல்லவேண்டும் நீ யாரென்று.

சீ :—நான் என்ன முயன்றாலும் "நான்" என்பது எனக்குப் பிடிபடவில்லை. அது இன்னதென்று வெளிப்படையாக உணரக்கூட முடியவில்லை.

ம :—"நான்" என்பது உணரப்படவும் முடியவில்லையென்று சொல்கிறவனார்? ஒன்று மற்றொன்றால் உணரப்படாத இரண்டு "நான்" இருக்கிறதா உன்னில்?

சீ :—நானாரென்று கேட்பதற்குப் பதிலாக, "நீங்கள் யார்" என்று விசாரிக்கலாமா? அப்படிச் செய்வதால் என் திருஷ்டியெல்லாம் உங்கள் மேலேயே இருக்கும். ஏனெனில் உங்களைக் குருரூபமான ஈச்வரனாகக் கருதுகிறேன். நானார் என்று கேட்பதைக் காட்டிலும் இவ் விசாரத்தாலேயே நான் தேடும் லக்ஷ்யம் கிட்டுவதாகலாம்.

ம :—நீ எம்மாதிரி விசாரணை செய்தாலும் கடைசியில் ஏகமாம் தானாகிய ஆத்மாவைத்தான் அடையவேண்டும். "நான்", "நீ", "குரு", "சீடன்" இந்த வித்யாசங்களெல்லாம், அறியாமைக்கு அறிகுறி. இருப்பது அகம் ஸ்வரூபமாம் பரமாத்மா ஒன்றே. மற்றவிதம் பாவிப்பதெல்லாம் தன்னைத்தான் ஏமாற்றிக்கொள்வதாம்.

இவ்விஷயத்தை ரிபு முனிவர், அவருடைய சீடன் நிதாகன்—இவர்களைப் பற்றிய புராணக்கதையொன்று நன்கு போதிப்பதாக இருக்கிறது.

இரண்டற்றதாகிய ஏகமாம் பிரம்மத்தின் அத்தியந்த சத்தியத்தை ரிபு தம் சீடனுகிய நிதாகனுக்குப் போதித்தபோதிலும், மிக்க படிப்பும் புத்தியுமுள்ள நிதாகன் ஞானமார்க்கத்தை நன்கு அவலம்பிக்கப் போதுமான திட நிச்சயம் அடையாமல் கர்மகாண்டத்தின்படி ஒழுகி வந்தான்.

ஆனல் குரு, தம் சீடன் எப்படித் தம்மைப் பூஜித்தானே அதைப்போல் தாமும் அவனை நேசித்தார். ரிபு முனிவர், தம் சீடன் கர்மகாண்டத்திலிருந்து எவ்வளவு விடுபட்டிருக்கிருனென்று காண, தாம் வயதானவராயிருந்தும் நகரத்தில் வசித்த தம் சீடனிடம் தாமே போவார்.

தன் குரு தன்னைக் கவனித்துவருகிருரென்று அறியாதபொழுது, நிதாகன் எப்படி நடப்பானென்று கவனிக்கச் சிற்சில சமயங்களில் ரிபு மாறுவேடம் பூண்டு போவார்.

அப்படிப் போயிருந்த ஒரு சமயத்தில் நிதாகன் ராஜபவனியை வெகு கருத்தாகக் கவனித்துக்கொண்டிருப்பதைப் பட்டிக்காட்டான்வேஷங் கொண்ட ரிபு கண்டார். நகரவாசி நிதாகன் கண்டுகொள்ளவில்லை. "இதென்ன கும்பலும் கூச்சலும்" என்று பட்டிக்காட்டானுகிய ரிபு கேட்டான். "ராஜா பவனி போகிருர்" என்று நிதாகன் பதிலுரைத்தான்.

"அரசனு? ஊர்வலம் போகிருனு? யார் அரசன்?" என்றுன் பட்டிக்காட்டான்.

"அதோ யானைமேல்" என்றுன் நிதாகன்.

"அரசன் யானைமேல் இருக்கிருன் என்கிருயா? ஆம், நான் இருவரைக் காண்கிறேன். இதில் அரசன் யார்? யானை எது?" என்றுன் பட்டிக்காட்டான்.

"என்ன! நீ இரண்டையும் பார்க்கிறாய். ஆனால் மேலிருப்பவன் அரசன் என்றும் கீழ் இருப்பது யானை என்றும் அறியமாட்டாயா? உன்னைப் போன்ற மனித னிடம் பேசுவதாற் பயனென்ன?" என்றான் நிதாகன்.

"என்னைப்போன்ற மூடனிடம் பொறுமையை இழக்கவேண்டாம். உன்னை வேண்டிக்கொள்கிறேன். மேல், கீழ் என்றாயே. இதன்பொருள் என்ன?" என்று கெஞ்சினான் பட்டிக்காட்டான்.

நிதாகனுக்குக் கோபம் தாங்கவில்லை. "மேலே அரசனையும் கீழே யானையையும் காண்கிறாய். அப்படி இருந்தும் மேல் கீழ் என்றால் என்னவென்று அறிய விரும்புகிறாய். கண்ட காட்சிகளும் கேட்ட வார்த்தைகளும் இவ்வளவு அறிவை விளக்கவில்லையென்றால் நடித்துத்தான் உனக்குப் போதிக்கவேண்டும். குனி. எல்லாம் உனக்கே பூர்ணமாக விளங்கிவிடும்" என்று வார்த்தைகளைக் கொட்டினான் நிதாகன்.

சொன்னபடி செய்தான் பட்டிக்காட்டான். அவன் தோளின்மேல் ஏறிக்கொண்டான் நிதாகன்.

"இப்பொழுது புரிகிறதா, மேலே நான் அரசன் போல் இருக்கிறேன். கீழே நீ யானைபோல் இருக்கிறாய். இப்பொழுது தெளிவாகிவிட்டதா?" என்றான்.

"இல்லை, இன்னும் புரியவில்லை. நீ அரசன்போல் மேல் இருக்கிறாய் என்றும், நான் யானைபோல் கீழ் இருக்கிறேன் என்றும் சொல்லுகிறாய். அரசன், யானை, மேல், கீழ்—அதுவரையில் விளங்குகிறது. ஆனால், நான், நீ என்று சொன்னாயே; எதைக் குறித்து, நான், நீ என்கிறாய்? அதுதான் விளங்கவில்லை. தயவுசெய்து அதை

விளக்கு" என்று வெகு நிதானமாகச் சொன்னான் பட்டிக்காட்டான்.

இப்படி 'நான்' 'நீ' என்பதின் பேதத்தை விவரிப்பதான மஹாபிரச்னையானது திடீரென்று தன் முன் தோன்றவே நிதாகனுக்கு ஓர் விழிப்பு உண்டாயிற்று. உடனே கீழே குதித்து, தனது குருவின் சரணங்களில் விழுந்து, "வந்தனத்துக்குரிய எனது குரு ரிபுவையன்றி, வெளித்தோற்றமாகிய இந்தப் பௌதிக வாழ்விலிருந்து உண்மைப்பொருளாகிய ஆன்ம நிச்சயத்திற்கு என் மனதைக் கவரக்கூடியவர் வேறு யார்" என்று வேண்டி வணங்கினான் நிதாகன்.

ஆகையால் தோற்றமாம் பௌதிக வாழ்வை ஆத்ம விசாரத்தின் மூலமாய் இங்கேயே இப்பொழுதே கடப்பது உனது லக்ஷ்யமாக இருக்க, உடலுக்கே உரித்தாகிய 'நீ', 'நான்' என்கிற பாகுபாட்டுக்கிடமேது? எண்ணங்களின் மூலத்தைத் தேடி மனம் உள்நாட, 'நீ' எங்கே, 'நான்' எங்கே?

இங்ஙனம் நாடி, அனைத்தையும் தன்னுட்கொள்ளும் ஆன்மாவாக அமர்.

சீ:—தான் தன்னைத் தேடிக் கொண்டிருப்பது ஹாஸ்யமல்லவா? நானார் விசாரம் கடைசியில் வெறும் பேச்சாக முடியவில்லையா? மந்திரம்போல் "நானார் நானா" ரெனச் சொல்லிக்கொண்டு முடிவில்லாமல் என்னையே நான் கேட்டுக்கொண்டிருப்பதா?

ம:—ஆத்மவிசாரம் வெறும் சூத்திரமல்ல. அது எந்த மந்திரத்தையும் ஜபிப்பதைக் காட்டிலும் உயர்ந்தது. வெறும் மனத்தால் நானாரென்று மாத்திரம் கேட்பதாக இருந்தால் அதனால் விசேஷம் ஒன்றுமில்லை. முழு மனத்தையும் அதன் மூலத்தில் ஏகாக்கிரம் செய்வதே ஆத்ம

விசாரத்தின் நோக்கம். ஆகையால் ஒரு நான் மற்றொரு நானைத் தேடுவதல்ல இது.

இந்த ஆத்ம விசாரம் வெறும் சூத்திரமல்ல. ஏனெனில் இது, சுத்தமாம் தன்னறிவில் முழு மனத்தையும் அசைவின்றி நிலைநிற்கச் செய்கிற நிதித்யாஸனமே.

நானார் விசாரமே உண்மையுருவாகிய எல்லையற்ற சுத்த ஸத்வத்தை உணர்வதற்குத் தவறா உபாயம். அது ஒன்றே நேரான வழி.

சீ:—ஆத்ம விசாரம் ஒன்றே ஞானத்திற்கு நேரான மார்க்கமாக என் கருதப்படவேண்டும்?

ம:—ஏனெனில் ஆத்மவிசாரம் ஒன்றைத் தவிர மற்ற எவ்வித சாதனத்திலும் சாதனத்தை நடத்தும் பொருட்டு மனமென ஒன்று இருந்தே யாகவேண்டும். மனமின்றி அந்த சாதனையை நடத்துவ தெப்படி? அகங்காரம் ஒருவர் சாதனத்தில பற்பல சூக்ஷ்மமான உருவங் கொள்ளும். ஆனல், அது மட்டும் அழிவதில்லை. ஜனகன், "என்னைக் கெடுத்துக்கொண்டிருந்த திருடனைக் கண்டு பிடித்துவிட்டேன். இதோ அவனுக்குத் தக்க தண்டனை அளிக்கிறேன்" என்று கூறியபோது, உண்மையில் அவர் அஹங்காரம் அல்லது மனத்தைத்தான் குறிப்பிடுகிறார்.

சீ:—ஆனல், அந்தத் திருடனை மற்ற சாதனங் களாலும் பிடித்துக்கொள்ளலா மன்றோ?

ம:—ஆத்மவிசார மொழிந்த மற்ற சாதனங்களால் அகந்தையை அழிக்க முயல்வது, திருடனே திருடனாகிய தன்னைப் பிடிக்கக் கொத்தவாலாவது போல்தான். ஆத்ம விசாரமொன்றே, அகந்தையோ மனமோ உண்மையில் இல்லவேயில்லை யென்னும் சத்தியத்தை வெளிப்படுத்திக்

கைவல்யமான ஆத்மாவின் சுத்த நிர்விசேஷ ஸ்திதியை உணரச் செய்ய முடியும்.

ஆத்மாவைத் தெளிவா யுணர்ந்தபின் உணர்வதற்கு வேறென்றுமில்லை. ஏனெனில் அதுவே முற்றின்பம். எல்லாம் அதுவே.

சீ:—குறைகள் நிரம்பிய இவ் வாழ்வில் நாம் ஆத்மாவை அறியக் கூடுமா?

ம:—ஆத்மானந்தம் எப்போதும் ஸித்தமா யிருக்கிறது. சிரத்தையோடு நாடினுல் அதை நீயே உணர்வாய். இவ்வாழ்வின் தொல்லைக்குக் காரணம் வெளியி லில்லை. அகந்தையாம் உன்னுள்ளேயே இருக்கிறது. நீ உனக்கு அற்பமான உபாதியைக் கற்பித்துக்கொண்டு அதனுல் எழும் தொல்லைகளைக் கடக்க வீணில் முயல்கிருய். எல்லாத் துன்பங்களுக்கும் அகந்தையே மூலம். அதுவே உன் தொல்லைப் பெருக்குக்குக் காரணம். உண்மையில் உன்னுள்ளிருக்கும் எல்லாத் துன்பங்களுக்கும், வாழ்க்கையின் சம்பவங்களைக் காரணமாகக் கூறுவதில் யாது பயன்? உனக்கு அன்னியமாயுள்ளவற்றிலிருந்து என்ன இன்பத்தை யடைவாய்? அப்படி அடைந்தாலும் அது எவ்வளவு காலம் நிற்கும்?

அகந்தையை மறுத்து அதை நிர்விஷயம் செய்து சுட்டெரித்தால் நீ பந்தத்திலிருந்து விடுபடுவாய். அதை ஏற்றுக்கொண்டால், அது உனக்குத் தளைகளை ஏற்படுத்தி அவைகளை மீறும் வீண் முயற்சிகளை உண்டாக்கும். அப்படித்தான் இந்தத் திருடன் ஜனக ராஜனைப் பாழாக்க முயன்றுன்.

உன்னியல்பாம் ஆத்மாவில் நிஷ்டனுவ தொன்றே என்றும் உனது ஸஹஜநிலையாகிய இன்பத்தை உணர வழியாகும்.

சீ:—கேவலம் ஆத்மாவே உண்மை என்னும் சத்தியத்தை உணராதநான், விசாரமார்க்கத்தைக் காட்டிலும் சாதனைக்குப் பொருந்தியுள்ளதாக பக்தியோக மார்க்கங்களைக் கைக்கொள்ளக் கூடாதா? ஸர்வ பரிபூரண ஸத்வஸ்துதத்துவத்தை என்னைப் போன்ற ஸாமான்யர்கள் சிறிதும் அடையமுடியா தல்லவா?

ம:—ஓர் பொருளை யடைந்து அதன் மூலம் இன்பம் அனுபவிக்கலாம் எனத்தக்க தோர் அறிவல்ல பிரம்ம ஞானம். நீ விடவேண்டுவ தெல்லாம் உன் அஞ்ஞான திருஷ்டி ஒன்றையே. நீ தேடும் ஆத்மா உண்மையில் நீயே. காணமற்போகாத தசமன் காணமற் போனதாகத் துக்கப்பட்ட முட்டாளைப்போல் உனது கற்பித அஞ்ஞானம் காரணமின்றி உனக்கு ஓயாத் துயரத்தைக் கொடுக்கிறது.

பத்து முட்டாள்கள் ஓர் ஆற்றைக் கடந்தார்கள்; அக்கரைக்குப் போனதும் எல்லோரும் பத்திரமாக வந்து சேர்ந்தோமா என்று நிச்சயப்படுத்திக்கொள்ள விரும்பினர்கள். அப் பதின்மரில் ஒருவன் எண்ண ஆரம்பித்தான். அவன், மற்றவர்களை எண்ணுகையில் தன்னை மறந்துவிட்டான். 'ஒன்பது பேரைத்தானே காண்கிறேன். நிச்சயமாய் ஒருவனை நாம் இழந்துவிட்டோம். அது யாராக இருக்கலாம்?" என்றான். "நீ சரியாக எண்ணினயா?" என்று சொல்லி, மற்றவனும் எண்ண ஆரம்பித்தான். அவனும் ஒன்பது பேரையே எண்ண, இவ்வண்ணம் முறையே ஒருவன்பின் ஒருவனக அப்

பதின்மரில் ஒவ்வொருவனும் தன்னைவிட்டு ஒன்பது பேரையே எண்ணினன். நாம் ஒன்பது பேரே இருக்கிறோம் என்று எல்லோரும் ஒரேவிதத் தப்பெண்ணங் கொண்டு, யார் காணப்படவில்லையென்று தங்களுக்குள் விசாரித்துக்கொண்டார்கள். காணாத நபரைக் கண்டு பிடிக்கும் முயற்சியெல்லாம் வீணாயிற்று. "யார்தான் வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போகப்பட்டானோ? ஐயோ! நாம் அவனை இழந்து விட்டோமே" என்று இந்தப் பத்து அவிவேகிகளில் மிக்க மிருதுவானவன் புலம்பிக் கண்ணீர் விட்டான். உடனே மற்றவர்களும் அவனுடைய அழுகையிற் சேர்ந்துகொண்டார்கள்.

நதிக்கரையில் அவர்கள் இப்படி அழுதுகொண்டிருப்பதைக்கண்டு மனமிளகிய ஒரு வழிப்போக்கன் காரணம் என்ன வென்று விசாரித்தான். நடந்ததைத் தெரிவித்து, "நாங்கள் பல தடவை எண்ணிப் பார்த்தும் ஒன்பது பேருக்குமேல் இல்லை" என்று அவர்கள் சொன்னார்கள். இக் கதையைக் கேட்ட வழிப்போக்கன், பத்துப்பேரும் தன்முன் இருக்கக்கண்டு, நடந்தது என்ன வென ஊகித்தான். அவர்கள் பத்துப்பேரும் சௌக்கியமாக ஆற்றைக் கடந்துவந்ததை அவர்களே நன்குணர்ந்துகொள்ளும்பொருட்டு, அவர்களிடம் இவ்வாறு சொன்னான்: "உங்களில் ஒவ்வொருவனுக்கும் நான் ஒரு அடி கொடுக்கும்போது, நீங்கள் வரிசையாக ஒன்று இரண்டு மூன்று என்று எண்ணிக்கொள்ளுங்கள். அப்பொழுது, நீங்கள் எல்லாரும் எண்ணிக்கைக்கு உள்ளானீர்கள் என்பதும் ஒரேதரந்தான் எண்ணப்பட்டீர்களென்பதும் நிச்சயமாகும். காணப்படாதவனாகிய தசமனும் கண்டுபிடிக்கப்படுவான்." இதைக் கேட்டுத்

தாங்கள் இழந்த நண்பன் கண்டுபிடிக்கப்படும் நிச்சயத்தினுற் சந்தோஷப்பட்டு வழிப்போக்கன் சொன்ன உபாயத்தை அங்கிகரித்தார்கள்.

இந்த இரக்கமுள்ள வழிப்போக்கன் பதின்மருள் ஒவ்வொருவனுக்கும் முறையே ஓர் அடி கொடுக்க, அடிபட்டவன் உரக்க எண்ணிக்கொண்டான். கடைசி மனிதன் அவனது முறையில் அவனுக்கு அடி கிடைத்த போது 'பத்து' எனவே, அனைவரும் பிரமை யடைந்தனர். ஒருவரை யொருவர் பார்த்து ஒரே குரலில் "நாங்கள் பதின்மர்" என்று சொல்லி, தங்கள் துயரத்தைப் போக்கியதற்காக வழிப்போக்கனுக்கு வந்தன மளித்தனர்.

இதுதான் உவமைக் கதை. இதில் தசமன் எங்கிருந்து வந்தான்? அவன் எப்பொழுதாவது இழக்கப்பட்டானு? அத்துனைப் பொழுதும் அவன் அங்கேதான் இருந்தான் என்று அறிந்துகொண்டவதனுல் அவர்கள் ஏதேனும் புதிதாய் அடைந்தார்களா? பதின்மரில் எவனும் உண்மையில் இழக்கப்பட்டது அவரது துயரத்தின் காரணமல்ல. வேறென்னவோவெனின் அறியாமையே அதன் காரணம். அதிலும் விசேஷம் என்னவெனில், இன்னுன்தான் இழக்கப்பட்டானென்று சற்றும் அவர்கள் அறிந்துகொள்ளாமலே, ஒன்பது பேரையே எண்ணினதால், ஒருவன் இறந்தானென்ற தப்பெண்ணமே அவர்கள் துயரத்தின் நிஜமான காரணம்.

உன் விஷயத்திலும் அப்படித்தான். நீ துன்பமும் கவலையுமடைய யாதொரு காரணமுமில்லை. ஸர்வ பரிபூரண ஸத்-தத்வமாகவே இருக்கும் உன் இயற்கை உண்மையைக் குறுக்கிக்கொண்டு, பிறகு நான் வியஷ்டி-

ஜீவனெனத் துன்பமிகப்படுகிருய். மற்றும், இல்லாதவை யாம் தளைகளைக் கடப்பதற்காக, ஏதோ ஓர் சாதனை யைக் கையாள்கிருய். இங்கே, உன் சாதனையே தளை களை யதார்த்த மென்று ஒத்துக்கொண்டால், அவை களைக் கடக்க அது எப்படி உதவும்?

ஆகையால் சுத்த ஸச்சின்மாத்ர அகண்ட ஆத்மா வாக நீ உன்னை அறிந்துகொள் என்கிறேன். நீ என்றும் அவ்வாத்மாவே. அதற்கு நீ அன்னியனல்ல. ஆகை யால் நீ அதை அறியாமல் இருக்க முடியாது. உனது அஞ்ஞானம், இந்தக் கதையில், காணுமற்போன தச மனைப்பற்றி அப்பதின்மர் அடைந்த குழப்பம்போல் வெறும் ஆரோபமே.

ஆகையால், ஞானோதயத்தால் உனக்கு நூதன ஸ்திதி ஒன்றும் ஏற்பட்டுவிடுவதில்லை. உனது பொய் யாம் அஞ்ஞானத்தையே அது போக்குகிறது. இன்பம் உன் நித்ய நிர்விகார ஸஹஜநிலை. இதுவே உன் இருக் கும் இயல்பு எனத் தானுக விளங்குகிறதே தவிர அவ் வியல்பிற்கு ஏதும் கூட்டப்படுகிறதில்லை. உன் ஆத்மாவை உணர்ந்து நீ அதுவாக அமர்தலே துன்பத்திலிருந்து விடுபடுவதற்கு ஒரே வழி. இதை அடைவதில் அசாத்ய மென்ன, சொல்.

II

சாதனையும் அருளும்

சீ :—ஆதி காலத்திலிருந்து செய்துவரப்படும் கட வுளைப்பற்றிய விமர்சனத்துக்கு முடிவுண்டா?

ம :—(மௌனமாய் இருக்கிருர்)

சீ:—(திகைத்து) ஸ்ரீபகவானின் மௌனத்தை என் கேள்விக்கு நான் விடையாகக் கொள்ளவேண்டுமா?

ம:—ஆகா, மௌனம் ஈச்வரஸ்வரூபம். இதையே (மௌனவ்யாக்யாப்ரகடிதபரப்ரஹ்மதத்வம்) என்ற பாதம் விளக்குகிறது. (மௌன வியாக்யானத்தினுலே பிரம்ம ஸத்யம் பிரகடிக்கப்படுகிறது.)

சீ:—ஈச்வரனைப்பற்றிய இப்படிப்பட்ட விசாரணைகளைப் புத்தர் புறக்கணித்துவிட்டாரல்லவா?

ம:—அது மாத்திரமல்ல. அவரைச் சூனியவாதி என்று அதனுலேயே கூறுகிறார்கள். கடவுளைப்பற்றி யுக்திவாதம் செய்துகொண்டிருப்பதைக் காட்டிலும் இங்கேயே இப்பொழுதே சாதகனை இன்புறச் செய்யும் வழியில் நடத்துவதையே புத்தர் உண்மையில் தம் தர்மமாகக் கொண்டார்.

சீ:—கடவுள், வ்யக்தம் என்றும் அவ்யக்தம் என்றும் விவரிக்கப்பட்டு, வ்யக்தம் என்னும் முறையில் உலகத்தையும் தம் அம்சமாக வைத்துக்கொண்டிருக்கிறாரெனச் சொல்லப்படுகிறதல்லவா? இது உண்மையாயின் உலகின் ஓர் அம்சமாகிய நாம் அவரது வ்யக்தஸ்வரூபத்தில் அவரை அறிந்திருக்கவேண்டுமே!

ம:—கடவுள், உலகம் இவற்றின் இயற்கையைப் பற்றித் தீர்மானிக்கும் உன்னையே நீ அறிந்துகொள்.

சீ:—என்னை நான் அறிவது என்றால் கடவுளை அறிவதாகுமா?

ம:—ஆகா, கடவுளே உன்னுள் இருக்கிறார்.

சீ:—அப்படியானல், யானுகிய கடவுளை நான் அறிவதற்கு எது தடையாயிருக்கிறது?

ம :—தன்னிலையில்லா மனமும் வழியற்ற வழியும்.

சீ :—நான் மிக்க அற்பனேயாயினும் என்னுள்ளே இருக்கும் பரமனின் அபாரசக்தி தடைகளையெல்லாம் ஏன் நீக்கக் கூடாது?

ம :—ஆம், நீ அதற்கு ஆசைப்பட்டால், அப்படியே செய்வார் அவர்.

சீ :—அவரே உண்டாக்கக்கூடாதா அவ்வாசையை?

ம :—அப்படியானால் அவரைச் சரணடை.

சீ :—நான் சரணாகதி அடைந்தால் ஈசுவரனை வேண்டுதல் தேவை யில்லையா?

ம :—சரணாகதியே மகத்தான பிரார்த்தனை.

சீ :—ஆனால் சரண்புகுமுன் அவரது தன்மை இன்னதென்று அறியவேண்டாமா?

ம :—நீ விரும்புவதையெல்லாம் ஈசன் உனக்காகச் செய்வானென்று நம்பினால், நீ உன்னை அவரிடம் ஒப்புக் கொடுத்துவிடு. இல்லாவிட்டால் அவரைச் சும்மா விட்டுவிடு; உன்னை நீ அறிந்துகொள்.

சீ :—கடவுளுக்காவது குருவுக்காவது என் விஷயத்தில் ஏதாவது கவலை உண்டா?

ம :—உண்மையில் இவ்விருவரும் வேறல்லர்: ஓர் உருவானவரே. இவர்களில் நீ யாரொருவரைத் தேடினாலும், நீ நம்புவதைக் காட்டிலும் அதிகமான கவலையுடன் அவர் உன்னைத் தேடுகிறார் என்று நம்பு.

சீ :—ஒரு ஸ்திரீ தான் இழந்த காசைத் தான் அடையும் வரையில் தேடுகின்ற ஓர் உவமைக் கதையை இயேசு சொல்கிறார்.

ம:—ஆம். உண்மையாகத் தம்மை நாடுகிறவனைக் கடவுளோ குருவோ எப்பொழுதும் நாடுகிறார் என்கிற ஸத்தியத்தை இக் கதை நன்றாக விளக்குகிறது.

அந்த நாணயம் செல்லாத காசாய் இருந்தால் அந்த ஸ்திரீ அவ்வளவு கஷ்டப்பட்டுத் தேடியிருக்கமாட்டாள். இதன் கருத்து என்ன? நாடுபவன், பக்தி சிரத்தை முதலியவற்றால், தனக்கு யோக்யதையைத் தேடிக்கொள்ள வேண்டும் என்பதே.

சீ:—ஆனால், கடவுளின் கருணை உண்டென்று நம்புவது எப்படி?

ம:—பக்குவமற்ற உன் மனம் உணராவிட்டால் அவரது கருணை இல்லை என்பது கருத்தல்ல. இதனால் கடவுள் கருணையற்றவர் என்றாகும். அதாவது கடவுள், கடவுள் இயல்பே அற்றுப்போகிறார். இது முற்றிலும் அஸம்பாவிதம்.

சீ:—"உன் நம்பிக்கைப்படி உனக்குச் செய்யப்படும்" என்று கிறிஸ்து சொல்கிறாரே, உண்மைதானா?

ம:—அப்படித்தான்.

சீ:—"ஆத்மா யாரை வரிக்கிறதோ அவர்தான் ஆத்மாவை அறியமுடியும்" என்று உபநிஷத்துக்கள் சொல்கின்றன அல்லவா? ஆத்மா வரிப்பானேன்? மேலும், ஆத்மா ஏன் ஏதோ ஒருவனை மாத்திரம் குறித்து வரிக்க வேண்டும்?

ம:—சூரியன் உதிக்கும்போது எல்லா அரும்புகளும் மலர்வதில்லை. சிலவே மலர்கின்றன. அதற்காக சூரியனை நிந்திக்கலாமா? மொட்டு தானே மலரமுடியாது. அதற்கு சூரிய வெளிச்சம் தேவை.

சீ :—மாயையாகிய திரையை ஆத்மாவே இட்டுக் கொண்டு இருக்கிறபடியால், அதன் நீக்கத்துக்கு ஆத்மாவின் உதவி தேவை என்று நாம் சொல்லலாகாதா?

ம :—சொல்லலாம்.

சீ :—ஆத்மா, தன்மீது தானே திரையைப்போட்டுக் கொண்டிருப்பதனுல் தானேதானே அந்தத் திரையை நீக்கிக்கொள்ளவும் வேண்டும்?

ம :—ஆம், அந்தத் திரை யாருக்கு என்று பார்.

சீ :—நான் ஏன் பார்க்கவேண்டும்? ஆத்மாவே தன் திரையை நீக்கிக் கொள்ளட்டுமே!

ம :—ஆத்மா திரையைப் பற்றிக் கேட்குமேயானுல் அதுவே நீக்கிக் கொள்ளவுஞ் செய்யும்.

சீ :—கடவுள் புருஷனு (வியக்தியா)?

ம :—ஆம். அவர் எப்பொழுதும் உத்தம புருஷன். தன்மையிடம் பெற்றவர். நான் என உன்முன் நிற்பவர். நீ பிரபஞ்ச விஷயங்களுக்குப் பிராதான்யம் கொடுப்பதால், கடவுள் எங்கேயோ பின் தங்கிவிட்டதாகக் காண்கிறது. நீ அனைத்தையும் விட்டுவிட்டு அவரையே தேடினுல், அவரே உன்னில் நானுக (ஆத்மாவாக) நிற்பார்.

சீ :—சித்தியின் முடிவான நிலை, அத்வைதத்தின்படி ஜீவப்பிரம்ம ஐக்யமே என்றும், விசிஷ்டாத்வைதத்தின்படி இக் கைவல்யானுபவத்திலும் பிருதக்பாவமுண்டென்றும், த்வைதத்தின்படி ஐக்யபாவமே இல்லையென்றும் கூறப்படுகிறது. இவைகளில் எதையே நேரான கொள்கை எனக் கருதலாம்?

ம :—ஏதோ பிற்காலத்தில் என்ன நேரிடுமோவென்று இப்பொழுது சிந்திப்பதேன்? "நான்" இருக்

கிறேன் என்பது எல்லார்க்கும் ஒப்பாம். எந்த சம்பிரதாயத்தைச் சேர்ந்தவனுயிருந்தாலும் உண்மையான ஆர்வமுடையவன் முதலில் இந்த 'நான்' என்பதை என்னவென்று காணட்டும். பிறகு, இந்த 'நான்' பரமனோடு ஒன்றுபட்டவனு அலனு என்பதை யோசிக்கலாம். முடிவை இப்போதே நீ அநுமானிப்பானேன்? நிர்மல மனத்தோடு விசாரி.

சீ :—முடிந்த நிலையின் அறிவு, அப்யஸிக்கக்கூட, வழி காட்டி யுதவாதா?

ம :—அதைப்பற்றி இப்பொழுதே செய்யும் தீர்மானத்திற்கு யாதொரு மதிப்புமில்லை, பயனுமில்லை.

சீ :—ஏன்?

ம :—ஏனென்றால், உன் கொள்கையே பிசகு. உன் தீர்மானம் உன் மதியைப் பொறுத்தது. அந்த மதிக்கு ஒளி ஆன்மாவிடமிருந்து வருகிறது. ஆன்மவொளியால் விளங்கும் அற்ப மதி அவ்வான்மாவின் தன்மை இன்னதென்று தீர்மானிக்கப் புகுவது அதன் துரஹங்காரமல்லவா? புத்தி ஆன்மாவைச் சென்றடையாமல், அநுபூதி நிலையின் தன்மையை உணரவும் முடியாது. அது முடிவான அநுபூதியை இன்னதென்று தீர்மானித்து விடுவதெப்படி? இது சூர்ய மண்டலத்திலேயே சூரியனுடைய வெளிச்சத்தை, ஒரு சிறு மெழுகுவர்த்தி கொடுக்கும் ஒளியை அளவையாகக் கொண்டு அளக்க முயல்வது போல் ஆகும். சூரியனுக்கு வெகு தூரத்திற்குமுன்பே மெழுகுவர்த்தி உருவற்றுவிடும். புத்தியின் கதியும் அவ்வாறே. வீணில் விவாதித்துக்கொண்டிருப்பதைக் காட்டிலும் நித்யாபரோக்ஷமான ஆன்மாவை இப்பொழுதே அநுசந்தானம் செய்ய முயல்.

III

ஞானியும் உலகமும்

சீ :—ஞானி உலகத்தைக் காண்கிருனு?

ம :—இந்தக் கேள்வி யாருக்கு? ஞானிக்கா? அஞ்ஞானிக்கா?

சீ :—அஞ்ஞானிக்கே.

ம :—உலகம் தன்னுடைய உண்மையைத் தீர்மானிக்க முற்படுகிறதா? இந்த சந்தேகம் உனக்கேயல்லவா? இப்படி சந்தேகிக்கிறவன் யார் என்று முதலில் தெரிந்து கொள். உலகம் மெய்யா, பொய்யா, பின்னுல் பார்த்துக் கொள்ளலாம்.

சீ :—அஞ்ஞானி உலகத்தையும் பஞ்சேந்திரிய விஷயங்களையும் காண்பதுபோல் ஞானியும் காண்கிருனு?

ம :—நீ உலகத்தைக் காண்கிறே னென்கிருய். உன்னையன்றிப் பொருள்களின் அறிவுண்டோ? காண்பானுகிய நீ உன்னை யறியாமல் காட்சியாம் உலகவியல்பை எப்படி அறிவாய்? முன்னிலைப் பொருள்கள் உடற் பொறிகளுக்குப் புலனுவது சரி. ஆனுல், இக் கேள்வி எழுவது உடற்கா? "நான் பொருள்களை உணர்கிறேன். இதுமெய்யா?" என்று உடல் கேட்கிறதா? அல்லது உலகம் "இதோ நான் உலகம், நான் மெய்" என்று கூறுகிறதா?

சீ :—ஞானிக்கு திருச்ய ஜகத்உண்டா? ஞானுநுபூதியின் பின் உலகத்தை உணர்கிருனு? என் சந்தேகம் இதுவே.

ம :—உலகத்தைப்பற்றியோ, ஞானநுபூதியின் பின் உலகம் என்னவாகிற தென்பதைப்பற்றியோ நீ ஏன் தொல்லைப்படுகிறாய்? முதலில் உன்னை நீ அறிந்துகொள். உலகம் தோன்றினாலென்ன? தோன்றாவிடிலென்ன? தோன்றாததனால் நீ ஏதாவது லாபமடைகிறாயா? இப்பொழுது உலகம் தோற்றமாவதினால் மாத்திரம் நீ அடையும் நஷ்டமென்ன? ஞானிக்கோ, அஞ்ஞானிக்கோ உலகைக் காண்பதனாலோ, காணாமையாலோ யாதொரு விசேஷமுமில்லை. இருவரும் அதைக் காண்கிறார்கள். ஆனால், அவ்விருவர் திருஷ்டிகளிற் பேதமுண்டு.

சீ :—ஞானி, அஞ்ஞானி இவ்விருவருக்கும் உலகம் ஒன்றாகவே தோன்றினால் அவர்கள் திருஷ்டியில் வித்யாஸம் எப்படி இருக்கக்கூடும்?

ம :—உலகத்தைப் பார்த்தாலும் ஞானி அவ்வுலகுக்காதாரமாகிய தன்னையே காண்கிறான். உலகத்தைக் கண்டாலும் காணாவிட்டாலும், அஞ்ஞானி இருக்குமியல்பாம் தன்னை யறிவதில்லை.

படக்காட்சிகளில் திரையில் காணும் சித்திரங்களை உதாரணமாக எடுத்துக்கொள். ஆட்டம் தொடங்கு முன்பு உன்முன் உள்ளது என்ன? வெறுந் திரையே. அந்தத் திரையின்மேல் காட்சி முழுவதையும் காண்கின்றாய். பார்ப்பதற்குச் சித்திரங்களனைத்தும் உண்மைபோல் இருக்கின்றன. ஆனால் அங்கேபோய்த் தொட்டுப் பார்த்தால் நீ பற்றிக்கொள்வது எதை? இந்தப் படங்களெல்லாம் அத்தனை மெய்யாகக்காணப்படுவதற்குஆதாரமான திரையையே. ஆட்டம் முடிந்தபின்பு சித்திரங்களெல்லாம் மறைய எஞ்சி நிற்பது எது? திரையே.

ஆத்மாவும் இப்படியே. உள்ளது ஆத்மா ஒன்றே. சித்திரங்கள் தோன்றி மறைகின்றன. நீ ஆத்மா ஒன்றையே பற்றிக்கொண்டால் சித்திரங்களின் தோற்றத்தால் ஏமாறமாட்டாய். சித்திரங்கள் தோன்றினாலும் மறைந்தாலும் ஒன்றுதான். திரையைவிட்டுச் சித்திரங்கள் இருப்பதாக ஒருவன் பிரமிப்பதுபோல் ஆன்மாவுக் கயலாக உலகமே மெய்யென அஞ்ஞானி பிரமிக்கிறான். திரையன்றி இருப்பில்லாப் படங்கள்போல் காண்பானையன்றிக் காட்சி யில்லையென அறிந்தால் பிராந்திக்கிடமில்லை. திரையும் சித்திரமும் பார்வையும் ஆத்மாவேயென ஞானி அறிவான். சித்திரங்களோடு சம்பந்தப்படாமல் ஆத்மா அவ்யக்தமாகவும், சித்திரங்களின் சேர்க்கையால் வியக்தமாகவும் இருக்கிறது. ஆத்மாவின் வியக்தாவியக்த ஸ்திதிகளில் ஞானி யாதொரு பேதமும் காண்பதில்லை. அவன் எப்பொழுதும் ஸ்வரூப நிலையிலேயே இருக்கிறான். ஆனால், ஞானி பல துறைகளிலும் சுறுசுறுப்பாயிருப்பது கண்டு அஞ்ஞானி பிரமை அடைகிறான்.

சீ:—என் முதற் கேள்வி இதை யறியும்பொருட்டுத்தான். நாங்கள் உலகத்தைப் பார்ப்பதைப்போல் ஞானியும் பார்க்கிறானா? அப்படியானால் நேற்று வெகு விசித்திரமாக அந்தப் புகைப்படம் மறைந்துவிட்டதே, அதைப்பற்றி பகவான் என்ன நினைத்தார்?

ம:—(சிரித்துக்கொண்டு) மதுரைக் கோயில் படத்தைக் குறிப்பிடுகிறாயா? சில நிமிஷங்களுக்கு முன் அதைப் பார்த்துக்கொண்டிருந்த பலபேர்களிடம் அது கைமாறிக்கொண்டிருந்தது. அவர்கள் பார்த்துக்கொண்டிருந்த ஏதோ ஒரு புஸ்தகத்துள் அதைத் தவறி வைத்துவிட்டிருக்கலாம்.

சீ:—ஆம், அந்த விஷயந்தான். படத்தை எனக்குக் காட்டுவதற்காக ஊக்கத்துடன் தேடியும் அது மாயமாய் மறைந்துபோனபோது பகவானுக்கு என்ன தோன்றிற்று?

ம:—எங்கேயோ இருக்கும் உன் தேசமாகிய போலந்துக்கு என்னை அழைத்துக்கொண்டு போவதாக நீ கனவு கண்டு விழித்துக்கொண்டு, "நான் இப்படியெல்லாம் கனவு கண்டேன். நீங்களும் அப்படியே கனவு கண்டீர்களா? அல்லது வேறு வகையில் நான் உங்களை அழைத்துப் போனதாக அறிந்தீர்களா" என்று கேட்டால், இந்தக் கேள்விக்கு நீ என்ன மதிப்புக் கொடுப்பாய்?

சீ:—ஆனால், காணாமற்போன இந்தப் படத்தின் விஷயம் முற்றும் ஸ்ரீ பகவானின் முன்னிலையிலேயே நடந்ததல்லவா?

ம:—ஆம். இந்தப் படத்தைக் கண்டது, அது மறைந்தது, நீ அதைப்பற்றி விசாரிப்பது எல்லாம் மனத்தின் வேலையே.

ஒரு புராணக்கதையுண்டு. காட்டில் பர்ணசாலையிலிருந்து சீதை மறைந்துவிட்டபொழுது, 'ஓ சீதா,—ஓ சீதா' என்று ராமன் அழுது அவளைத் தேடிக்கொண்டு போனான். காட்டில் நடப்பதைப் பார்வதி பரமேச்வரர்கள் ஆகாசத்திலிருந்து கவனிக்கையில், பார்வதி ஆச்சர்யப்பட்டு சிவனிடம், "நீங்கள் இராமன் பரிபூரணன் என்று ஸ்தோத்திரம் செய்தீர்களே; அவன் சீதையை இழந்து எப்படி துக்கப்படுகிறான் பாருங்கள்" என்றாள். சிவன், "ஸ்ரீ ராமனுடைய பூர்ணத்துவத்தைப் பற்றிச் சந்தேகித்தால் அவனை நீயே சோதித்துப் பார். உனது

யோகமாயையால் நீயே உன்னை சீதையாக மாற்றிக் கொண்டு அவன் முன் நில்'' என்றார். பார்வதி அந்த சீதையைப் போலவே ஸ்ரீராமன்முன்பு தோன்றிய பொழுதும் ராமன் அவளை லக்ஷ்யஞ் செய்யாமல் குருடன்போல், 'ஓ சீதா' ஓ சீதா' என்று கூவிக்கொண்டே போனதைக் கண்டு தேவி ஆச்சர்யமடைந்தாள்.

சீ:—இக்கதையின் தத்வம் எனக்கு விளங்கவில்லையே !

ம:—இராமன் உண்மையில் உடலுருவாகிய சீதையையே தேடினதா யிருந்தால், தன்முன் நின்ற ரூபத்தைத் தான் இழந்த சீதையாகக் கண்டுகொண்டிருப்பான். ஆனால் அப்படி இல்லை. அவனுடைய திருஷ்டியில், தன் முன்பு நின்ற சீதையைப் போலவே தானிழந்த சீதையும் பொய்யே.

இராமன் உண்மையில் கண்ணற்றவனல்ல. ஆனால் ஞானியாகிய இராமனுக்கு, முன்பு பர்ணசாலையில் சீதை இருந்தது, அவள் மறைந்தது, அதன் காரணமாக அவன் அவளைத் தேடினது, பார்வதி பிரத்யக்ஷமாக சீதையுருக் கொண்டு அவன்முன் நின்றது, இவை அனைத்தும் பொய்யே. இப்பொழுது உனக்கு விளங்குகிறதா, புகைப் படத்தின் மறைவு எப்படித் தோன்றினதென்று ?

சீ.—இன்னும் எனக்கு விளங்கவில்லை. இதோ பொறிக ளுணர்வதாகப் பலவகையாலும் தோன்றுகிற இந்த உலகம் ஒரு கனவா ? கற்பனையா ?

ம.—நீ சத்தியம் ஒன்றையே தேடுபவனாக இருந்தால் உலகம் உண்மையற்றது என்று அங்கீகரிப்பதைத் தவிர உனக்கு வேறுவகையில்லை.

சீ:—ஏன் ?

ம :—உலகம் மெய் என்னும் எண்ணத்தை நீ விட்டா லொழிய உன் மனம் உலகத்தையே நாடி நிற்கும். மெய் யொன்றே யுளதாக, மெய்யல்லதை யுளதெனக் கொண் டால், உளதாம் மெய்யை உணர்த லென்று மில்லை. இது ரஜ்ஜு ஸர்ப்ப நியாயத்தால் விளங்கும். ஸர்ப்பத்தைக் காண்கிறவரையில் ரஜ்ஜுவையறியமுடியாது. ஆரோபித ஸர்ப்பம் மெய்யாக வுணரப்பட, அதிஷ்டான ரஜ்ஜு முற்றிலும் பொய்யாய்விடும்; அதாவது யதார்த்தமாக இருக்கும் ரஜ்ஜுவை ரஜ்ஜுவாகத் தெரிந்துகொள்ளாத பொழுது கல்பித மாத்திர ஸர்ப்பம் யதார்த்த ஸர்ப்ப மாகவே பார்க்கப்படுகிறது.

சீ—தாத்காலிகமாக உலகத்திற்குப் பாரமார்த்திக ஸத்தியம் இல்லை என்று கொள்ளலாமாயினும், அது முற் றிலும் அஸத்யமென்று கொள்வது கஷ்டம்.

ம :—நீ கனவுகாணும்போதுகூட அப்படித்தான் கனவுலகத்தை பெய்யாகவே பார்க்கிறாயல்லவா? கனவு நிகழும் வரையிலும் நீ அங்கு கண்டு தெரிந்துகொள்வ தெல்லாம் உண்மையே.

சீ :—அப்படியானால் இவ்வுலகத்தின் ஸத்யம் கன வின் ஸத்தியந்தானா?

ம :—நீ கனவு காணும்போது அது மெய்யெனத் தோன்றுவதில் தோஷம் காண்கிறாயா? கனவு கனவாக இருக்கும் வரையில் அதிற் குற்றமென்ன? இறந்துபோன ஒருவனோடு பேசிக்கொண்டிருப்பதுபோல் நடப்பதற்கரி தாகிய ஏதோ ஒன்றைப்பற்றி நீ கனவு காணலாம். அக் கனவில் ஒருக்ஷணமாத்ரம், ‘இந்த மனிதன் இறந்துபோன வனல்லவா, என்று நீயே சந்தேகப்படலாம். ஆனால் உன் மனம் சொப்பனக் காட்சியை எப்படியோ மெய்

யென ஏற்றுக்கொள்கிறது. கனவு நிகழுங்கால் அம்மனி தன் பிழைத்திருப்பது முழு மெய்யே. வேறு விதமாகச் சொன்னால், கனவு கனவாயிருக்கும் வரையில், அதன் உண்மையை சந்தேகிக்க அது இடங்கொடுப்பதில்லை. அதுபோலவே இவ்விழிப்புலகத்தின் மெய்யை நீ விழித் திருக்கும்போது சந்தேகிக்க சக்தியற்றவனாக இருக்கிறாய்.

தான் சிருஷ்டி செய்த இவ்வுலகத்தைத் தானே பொய்யென்று மனம் எப்படி ஒப்புக்கொள்ளும்? விழிப் புலகத்துக்கும், கனவுலகத்துக்கும் உள்ள ஒற்றுமையை சித்தாந்தம் செய்வதன் விசேஷம் இதுதான். இரண்டும் மனத்தின் கற்பனையே. மனம் இவ்விரண்டில் ஏதொன்றில் ஈடுபட்டிருந்தாலும் கனவு காணும்போது கனவுலகத் தையும், விழித்திருக்கும்போது விழிப்புலகத்தையும் பொய்யென்று மறுக்க அது சக்தியற்றதாம். இதற்கு மாறாக மனத்தை உலகத்திலிருந்து திருப்பி அகமுக மாக்கி அப்படியே அமர்ந்தால், அதாவது எல்லா அனு பவங்களுக்கும் ஆதாரமாகிய ஆத்மா ஒன்றிலேயே விழிப் புடையவனாக இருந்தால், நீ இப்பொழுது உணரும் உலகம் கனவில் வசித்த உலகம்போன்று அத்துணைப் பொய்யாகவே இருக்கும்.

சீ:—நான் முன் சொன்னதுபோல உலகத்தைப் பல வகையாகக் காண்கிறோம், உணர்கிறோம். கனவிற் போல் இவ்வுணர்ச்சிகள் மனக் கற்பனையல்ல. அவை புல னாகும் பொருள்களின் பிரதிபலனம் என்பது வெளிப் படை. கனாக்களோ பலருக்கும் வித்தியாசமானவை என்பது மாத்திரமல்ல. ஒரே மனிதனுக்கும் வெவ்வேறா கும். நனவுலகம் அப்படியல்லவாதலால் அது வெளியில் மெய்யாக இருக்கிறதென்பதை ருஜுப்படுத்த இதுவே போதாதா?

ம:—விழித்துக்கொண்ட பிறகுதான், இவையெல்லாம் ஒன்றுக்கொன்று பொருந்தாதவை; கனவுலகத்தைச் சேர்ந்தவை என்கிற பேச்சுகளெல்லாம் எழுகின்றன. நீ கனுக்கண்டபொழுது கனவு ஒரு தொடர்புடையதாகவே இருந்தது, அதாவது கனவில் நீ தாகமடைந்தால் கற்பனையாகிய நீரைக் கற்பனையாகக் குடித்து, கற்பனையான உன் தாகத்தைத் தணித்துக் கொள்கிறுயல்லவா? அக்கனவே கற்பனை என்று நீ உணராதிருந்த வரையில் அது முற்றும் உனக்கு மெய்யாகவே இருந்ததேயொழிய, கற்பனையல்ல, இதுபோன்றே இவ்விழிப்புலகமும், நீ இப்போதடைகின்ற புலனுணர்வுகள் ஒன்றுபட்டவை, உலகு மெய் என்னும் எண்ணத்தை உனக்குக் கற்பிக்கிறது.

இதற்கு மாருக உலகு ஸ்வதஸ்ஸித்த மாவதானுல் அது தன்னிருப்பை உன் உறக்கத்தில் ஏன் வெளிப்படுத்திக் கொள்ளக்கூடாது? உறக்கத்தில் உலகம் இருக்கிறதெனச் சொல்வதற்கு, அது உன் அநுபவத்தின் விஷயமல்ல. ஆனுல், அவ்வுறக்கத்தில் உன்னிருப்பைப் பற்றி ஏதாவது சந்தேகமுண்டா?

சீ:—உறக்கத்தில் ஒருவன் தன்னைக் காணுமலிருப்பது ஸஹஜம். உறங்கினபோது நான் உலகத்தைக் காணுமலிருந்தாலும் உலகம் இல்லையென்று நான் மறுக்கிறதில்லையே. அது எப்பொழுதும் இருந்துகொண்டிருக்கிறது. நான் அதைக் காணுவிட்டால் அப்பொழுது தூங்காதிருந்த பலர் அதைக் காண்கிருர்கள்.

ம:—நீ தூக்கத்திலிருந்ததை உனக்கு மெய்ப்பிப்பதற்கு மற்றவர்களுடைய சாக்ஷியம் அவசியமா? அவர்களுடைய சாக்ஷியை மட்டும் ஏன் இப்பொழுது கோருகிருய்?

நீ உறங்கிக்கொண்டிருக்கும்போது உலகம் இருந்ததாக மற்றவர்கள் சொல்லக்கூடுவது நீ விழித்துக்கொண்ட பிறகுதானே. உன் இருப்பைப்பற்றின விஷயம் வேறு. விழித்ததும் நீ நன்ருக உறங்கினதாகச் சொல்கிருய். அவ்வளவுக்கு, தூக்கத்தில் உன் இருப்பை நீ உணர்ந்திருக்கவேண்டும். ஆனல், அப்பொழுது உலகம் இருந்ததைப்பற்றியோ உனக்கு ஒரு அணுவும் தெரியாது. நீ விழித்துக்கொண்டிருக்கிற இப்பொழுதுகூட "நான் ஸத்யம்" என்று இந்த உலகம் சொல்கிறதா? அல்லது நீ உலகத்தைப்பற்றிச் சொல்கிருயா?

சீ:—நான்தான் சொல்கிறேன். ஆனல், உலகத்தைப் பற்றித்தான் சொல்கிறேன்.

ம:—சரி, உன்னுடைய ஸத்யத்தைப்பற்றி ஒன்றுமே யறியாமல் உலகத்தின் ஸத்யத்தை மெய்ப்படுத்த முயலும் உன்னைக்கண்டு இந்த உலகம் சிரிக்கிறது.

எப்படியாவது உலகம் ஸத்யம் என்று சாதிக்க விரும்புகிருயா? ஸத்யம் எது என்று நிரூபிக்க லக்ஷணம் யாது? எது சாச்வதமாய், ஸ்வதஸ்ஸித்தமாய், சுயம் பிரகாசமாய் நிர்விகாரமாயிருக்கிறதோ அதுவே ஸத்யம். உலகம் ஸ்வதஸ்ஸித்தமானதா? மனத்தையன்றி உலகுண்டோ? உறக்கத்தில் மனமுமில்லை. உலகமுமில்லை; விழித்துக்கொண்டால் மனமும் தோன்றுகிறது; உலகமும் தோன்றுகிறது. நித்யமாக ஒன்றையொன்று ஆச்ரயித்திருக்கும் இந்த த்வந்த்வத்தின் கருத்தென்ன? அனுமானுதி தர்க்கலக்ஷணங்களெல்லாம் உனக்குத் தெரியும். இவைகளே பௌதிக சாஸ்திர விசாரணைக்கு ஆதாரமாகக் கருதப்படுகின்றன. இப்படி தர்க்கசாஸ்திரத்திற்கு சம்மதமான முறையில் நீ என் உலகத்தின் ஸத்யத்தை

நிர்ணயிக்கக்கூடாது? நான் இருக்கிறேன் என்று உலகம் சொல்வது அசாத்யம். ஆனால், நானிருக்கிறேன் என்று நீ உன்னைப்பற்றிச் சொல்லிக்கொள்ளலாம். ஏனென்றால் உனது இருப்பு வெறும் இருப்பல்ல. அது அறிவோடு கூடினது. உண்மையில் இவ்விருப்பும் அறிவும் ஒன்றே.

சீ:—உலகம் தன்னை அறியாமலிருக்கலாம். ஆயினும் அது இருக்கிறதல்லவா?

ம:—அறிவு என்பது தன்னறிவுதான். எதையாவது அறிவதாயிருந்தால் நீ உன்னையே அறிகிறாய். உணர்வற்ற இருப்பென்பது பொருந்தாத வசனம். அப்படிப் பட்ட இருப்பே இல்லை. வெறும் கௌணமே. ஆனால் உண்மை இருப்பாம் ஸத் கௌணமல்ல. அதுவே வஸ்து. ஆகையால் உண்மைக்கு ஸத்து, சித்து (இருப்பு, அறிவு) என்று பெயர். ஒன்றைவிட்டு மற்றொன்று இருப்பது மில்லை. உலகமோ தானாக இருப்பதும் இல்லை, தன் னிருப்பை அறிந்துகொள்வதுமில்லை. அதாவது உலகம் ஸ்வதஸ்ஸித்தமோ ஸ்வப்ரகாசமோ அல்ல. அப்படிப் பட்ட உலகம் மெய்யென்று எப்படி நீ கூறுவாய்?

இந்த உலகத்தின் தன்மைதான் என்ன? எப்பொழுதும் மாறிக்கொண்டிருக்கின்றது. தொடர்ந்த இடையறா மாறுதலே அதன் லக்ஷணம். மற்றொன்றைச் சார்ந்ததாய் தன் உணர்வற்றதாய் எப்பொழுதும் மாறிக்கொண்டேயிருக்கும் உலகம் ஸத்யமானதல்ல.

சீ:—மேல்நாட்டாருடைய பௌதிக ரஸாயன சாஸ் திரங்கள் எல்லாம் உலகை மெய்யென்று உரைப்பது மாத்திரமல்லாமல், வேதங்களுங்கூட அண்டாண்டங்களின் சிருஷ்டியைப்பற்றி வெகுவிசாலமான விவரங்களைத்

தருகின்றன. உலகம் பொய்யானுல் இப்படி அவை விவரிக்க முயல்வானேன்?

ம :—வேதங்களின் நோக்கம், ஆத்மாவின் நித்யத்வத்தைப் போதித்து, அதுவே நீ என்று பிரமாணத்துடன் பிரகடிப்பதே யாகும்.

சீ :—நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனுல் உலகத்தை மெய்யென்று அவைகள் கருதினுலொழிய பிரம்மாண்டத்தின் விவரங்களை வெகு நுட்பமாகக் கொடுப்பானேன்?

ம :—உனக்கு எது ஸித்தாந்தமாகத் தோன்றுகிறதோ அதை ஆசரணையில் வைத்துக்கொள். மீதியை விட்டுவிடு. சாஸ்திரங்கள் சத்தியத்தைத் தேடும் பலவகைப்பட்டவரையும் அநுக்ரஹிக்கவேண்டியிருக்கிறது. மற்றும் பற்பலர் மனங்களின் அமைப்பு பற்பலவிதமாக இருக்கிறது. ஆகையால் சாஸ்திரங்கள் பற்பலவிதமாகக் கூறும். நீ ஒப்புக்கொள்ளாததை அர்த்தவாத மென்று தள்ளிவிடு.

IV

ஹ்ருதயமே ஆத்மா

சீ :—இதயமே உணர்வுக்கு இருப்பிடமெனவும், அதுவும் ஆத்மாவும் ஒன்றே யெனவும் பகவான் சொல்கிறதுண்டு. இதயம் என்பதின் சரியான பொருள் என்ன?

ம :—இதயத்தைப்பற்றிக் கேள்வி யெழுவதற்குக் காரணம் நீ உன் மூலஸ்தானத்தை அறிய அபேக்ஷிப்பதே. விவேகிகள் ஸ்வரூப விசாரத்திலும் மனஸ்தத்வ

நிர்ணயத்திலும் ஸஹஜமான தீவிர சுபேச்சைகொள்கிறார்கள்.

கடவுள், ஆத்மா, இதயம், உணர்வின் உள்ளம் என எந்தப் பெயராற் கூறினும் ஒன்றே. கொள்ளவேண்டிய கருத்து என்னவென்றால் இதயம் என்பது தன் இருப்பின் மூலமாகிய மத்தியமென்பதே. அஃதொன்று இன்றேல் வேறொன்றுமில்லை. அதன்கண் இவ்வகிலமுமே அமைந்திருக்கும்.

சீ:—ஆனல் பகவான் இந்த ஜடவுடலுக்குள் இதயத்துக்கென மார்பக மையத்தின் இருவிரல் வலத்தே ஓர் ஸ்தானத்தைக் குறித்திருக்கிறதேன்?

ம:—ஆம். மகான்களின் அனுபவப்படி. அதுதான் அத்யாத்மானுபவத்தின் மத்தியஸ்தானம். இந்த இதய மத்தியம் இதயப் பெயருள்ள மாம்சபிண்டமாகிய ரக்தாசயமல்ல. இந்த அத்யாத்ம இதயமத்தியம் உடலின் ஓர் அங்கமல்ல. இதயம் என்பது உன் இருப்பின் மூலம். அவ்வளவுதான் சொல்லலாம். உன் நனவு கனவு துயில்களிலும், வியவகாரத்திலும், ஆழ்ந்த நிஷ்டையிலும் நீ உண்மையி லொன்றியுள்ளது அதிலேயே.

சீ:—அப்படியானல் அதை எப்படி தேகத்தில் இடம் பெற வைப்பது? அப்படி அதற்கு ஒரு ஸ்தானத்தைக் குறிப்பது தேசகாலத்திற் கப்பாலுள்ளதை ஒரு பௌதிக எல்லைக் குட்படுத்துவதாகு மல்லவா?

ம:—அதுதான் உண்மை. ஆனல் இதயத்தின் நிலையை உணர விரும்புகிறவன் தன்னை உடலுக்குள் இருப்பவனுகக் கருதுகிறானல்லவா? இப்பொழுது கேள்விகேட்கும்பொழுது, உன் உடல் மாத்திரம் இங்கு இருப்பதாகவும், நீ எங்கேயோ இருந்து பேசுவதாகவும்

பாவிப்பாயா? இல்லையே. தேக பாவத்தை ஸஹஜமாகக் கொள்கிறாயல்லவா? இதன் பொருட்டே பௌதிக வுடலைப்பற்றி ஏதாவது கூறுவது. உண்மையில் சுத்த சைதன்யம் ஏகம்; பரிபூர்ணம்; உருவற்றது; உள்வெளியற்றது? இடம் வலமற்றது; இதயமாகிய சுத்த சைதன்யத்தில் ஸர்வமும் அடக்கம். அதற்கயலாய் ஒன்றுமேயில்லை. அதுவே ஸித்தாந்தம்.

இந்த அதீத நிலையில் இதயமாகிய ஆத்மா அல்லது அறிவுக்கு பௌதிகவுடலில் யாதொரு ஸ்தானத்தையும் நிர்ணயிக்கப்படாது. ஏன்? தேகம் என்பதே மனத்தின் விக்ஷேபம். மனமோ சுயம்பிரகாசமான இதயத்தின் அற்பமாம் பிரதிபிம்பம். அனைத்தையும் தன்னுட் கொண்ட அத் தத்துவம், அதன் திவலையாம் பொய்த் தோற்றமாகிய ஜடவுடலில் ஓர் சிற்றணுவாக எப்படி அடங்கியிருக்கக்கூடும்? ஆனால் இது உணரப்படுவதில்லை.

உடலையும் உலகத்தையும் விட்டு, அஞ்ஞானிக்கு பாவனை அஸாத்தியம்.

இமாலயத்திற்கப்பால் வெகு தூரத்திலிருக்கும் உன் தேசத்திலிருந்து இப்போது வந்திருக்கின்றேன் என்று நீ சொல்லலாம். ஆனால் இது உண்மையல்ல. எங்கும் நிறைந்த ஆத்மாவாகிய உனக்கு போக்கெங்கே, வரவெங்கே, அசைவுதானெங்கே? நீ இருந்த விடத்தில் இருந்தபடியே இருக்கிறாய். உனது உடம்புதான் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டுபோகப்பட்டு, கடைசியாக அது இந்த ஆச்ரமம் வந்து சேர்ந்திருக்கிறது. இதுவே தெளிந்த வுண்மையாக இருக்க, திருசிய வுலகத்திலிருக்கும் ஒரு வியக்தியாகத் தன்னைக் கருதுகிறவனுக்கு இம்மெய் ஜாலம்போல் தோன்றுகிறது.

விவகார திருஷ்டியைக்கொண்டே இதயத்திற்கு இந்தப் பௌதிகவுடலில் ஒரு ஸ்தானம் கற்பிக்கப்படுகிறது.

சீ:—அப்படியானல் இதயமத்தியின் அநுபவம் மார்பின் ஓர் குறிப்பிட்ட இடத்தில் இருக்கிறதென்று பகவான் சொல்வதை அறிந்துகொள்வதெப்படி?

ம:—கேவல அறிவுமயமான இதயம் தேசகாலத்திற்கு அப்பாற்பட்டதென்ற உண்மையான நிலையை நீ அங்கிகரித்துவிட்டால், மற்றதையெல்லாம் அந்தப் பரமார்த்த திருஷ்டியில் நீயே அறியலாம்.

சீ:—இந்த பாவத்தை அறியும்பொருட்டே இதயத்தின் ஸ்தானத்தைப்பற்றிக் கேட்டேன். பகவானின் அநுபவம் எப்படியோ?

ம:—திரிகாணுதீத சுத்த அறிவு ஞானியின் அநுபவம். அஞ்ஞானிக்கு தேகாத்மபுத்தி எத்தனை ஸஹஜமோ, ஞானிக்கு நிருபாதிக நித்ய ஸத்வாநுபூதி அத்தனை ஸஹஜம். ஆனல் இந்த அநுபூதி ஸோபாதிகமாகவோ(உடலுடனே),நிருபாதிகமாகவோ(உடலற்றே) இருக்கலாம். கேவல அநுபூதியில் ஞானி தேசகாலாதீதனே. தேகத்தில் இருதயத்தின் நிலையைப்பற்றி அந்த ஸ்திதியில் கேள்வியே எழாது.

சைதன்யத்தைவிட்டு உயிர் நிற்காதாகையால் அந்தச் சைதன்யத்தாலேயே உடலறிவு போஷிக்கப்படுகிறது. உடலுணர்வு குறுகியது. எல்லையற்ற நித்ய ஸத்வாநுபவத்தோடு அது ஸமானமாகாது. உடலறிவென்பது, ஞானி தன்னைத்தானென உணர்ந்திருக்கும் சுத்த சைதன்யத்தின் அணுமாத்திரப் பிரதிபிம்பமே. தன்னுடைய எல்லையற்ற சுயம்பிரகாச மெய்யறிவின் பிரதி

பிம்ப கிரணமே அவனுக்கு உடலுணர்வு. இம் முறையில்தான் ஞானி தன் உடலின் இருப்பை உணர்கிறான்.

சுத்த சைதன்யமாம் நிருபாதிக ஹ்ருதய ஸ்திதியில் ஞானிக்கு தேகப்பிரஜ்ஞையே இல்லை யாகையால், அவனுக்கு உடலுணர்வு ஏற்படும்போது, நினைவு மூலமாக ஹ்ருதயாநுபவத்துக்கு உடலுள் ஓர் ஸ்தானம் குறிப்பிடப்படுகிறது.

சீ:—இதயத்தின் பிரத்யக்ஷாநுபூதியோ, அதன் ஸ்மிருதியோ இல்லாத என்போன்றவர்களுக்கு இவ்விஷயம் புரிந்துகொள்வது கஷ்டமாகத் தோன்றுகிறது. இதய ஸ்தானத்தை நிரூபிப்பதற்கு வெறும் ஊகமே ஆதார மல்லவா?

ம.—அப்படியானால் இதைப்பற்றிச் சிந்திப்பது வியர்த்தமே. நீ உண்மையில் ஊகத்தையே ஆதாரமாகக் கொள்வதில்லை. ஸித்தமா யிருக்கும் உள்ளுணர்வையே ஆதாரமாகக் கொள்கிறாய்.

சீ:—இவ்வுள்ளுணர்வு யாருக்கு?

ம:—அனைவர்க்குமே.

சீ:—இதயத்தைப்பற்றி எனக்கும் உள்ளுணர்வுண்டென்று பகவான் மதிக்கிறாரா என்ன?

ம:—இல்லை. இதயத்தின் உள்ளுணர்வைப் பற்றியல்ல, தேகத்தில் உன் இதய ஸ்தானத்தைப் பற்றியே.

சீ:—எனக்கு இதயஸ்தானத்தைப் பற்றிய உணர்வு உண்டென்று பகவான் சொல்கிறாரா?

ம:—ஏன் சொல்லக்கூடாது?

சீ:—(தன்னைக்காட்டி) என்னை நேராகக் குறித்தா பகவான் சொல்கிறார்?

ம:—ஆம். அதுதான் உள்ளுணர்வு.

நீ உன்னைச் செய்கையால் எப்படி உணர்த்தினாய்? மார்பின் வலப்புறத்தில் உன் கையை வைத்துக் காட்டினா யல்லவா? அதுதான் இதயத்தின் ஸ்தானம்.

சீ:—அப்படியானால் இதயமத்தியத்தைப் பற்றிய பிரத்யக்ஷானுபவம் ஏற்படாதிருக்கும்வரையில் நான் இந்த உள்ளுணர்வையே நம்பியிருக்கவேண்டுமா?

ம:—அவ்வுள்ளுணர்வில் என்ன பிழை?

ஒரு மாணவன் நான் இக் கணக்கைச் சரியாகச் செய் தேன் என்கிறான். அல்லது நான் ஓட்டமாய் ஓடி உங் கள் புஸ்தகத்தைக் கொண்டுவரட்டுமா என்று சொல் கிறான். அப்போது, கணக்கைச் சரியாகச் செய்ததாக தலை யைக் குறிப்பிடுவானா அல்லது புஸ்தகத்தைக் கொண்டு வர, தன்னை வேகமாய்க் கொண்டுபோகும் கால்களைக் குறிப்பிடுவானா? இவ்விரு விஷயத்திலும் அவனது விரல் மார்பின் வலப்புறத்தையே சகஜமாகக் குறிக்கும். இச் செய்கையால், நான் என்பதன் ஸ்தானம் தன்னில் அவ் விடத்திலுள்ளது என்னும் கம்பீர தத்துவத்தை, தன்னை யறியாமலே, வெளிப்படுத்துகிறான். இவ்விதம் இதயமா கிய ஆன்மாவைத் தானாகவே குறிப்பிடச் செய்வது பிழையற்ற உள்ளுணர்வாகும். இந்தச் செய்கை சகஜ மானது. எல்லா மக்களுக்கும் இயற்கையானது. இதற்கு விலக்கில்லை. இதயமத்தியம் உடலில் இடம் பெற்று இருப்பதற்கு இதைவிட வேறென்ன பிரமாணம் வேண்டும்?

V

ஹ்ருதயத்தின் ஸ்தானம்

சீ:—ஆத்மாநுபூதி புருவமத்தியில் ஏற்படுவதாக ஒரு பெரியவர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

ம:—முடிவற்ற பூர்ணானுபவம், காண்பான் காட்சி இரண்டையும் கடந்ததே. இது அடையப்பெற்றால் ஆத்மாவின் அநுபவம் எங்கு தோன்றினாலும் சரிதான்.

சீ:—இவ் வாத்மவுணர்வின் இடம் புருவ மையம், இதயமெனும் இரண்டுள் எது சரி?

ம:—சாதனைக்காக புருவமத்தியத்திற் பாவனைசெய்யலாம். அது மனக் கற்பனையாகவே முடியும். உன் தனிமை முற்றும் நசித்து எப்பரம ஆத்மாநுபூதியின் கண் நீ ஒன்றுபட்டுப் போகிறாயோ அது மனோதீதம். அந்நிலையில் அதற்கயலாய் தனிப்பட்ட யாதொரு வஸ்துவும் த்யேய ஸ்தானமாக உணரப்படமாட்டாது.

சீ:—என் கேள்வியை வேறொரு விதமாக விவரிக்கிறேன். புருவமத்யத்தை ஆத்ம நிலயமாகக் கூறலாமா?

ம:—அறிவின் மூலமான ஆத்மா, ஜாக்ரத் ஸ்வப்ந ஸுஷுப்தி அவஸ்தைகளுக்கு ஆதாரமென்று அங்கீகரிக்கிறாயல்லா? ஆனால் தியான அப்யாஸி தூக்கத்தால் விழுங்கப்படும் போது என்ன ஆகிறது பார். ஸுஷுப்தி தொடங்கவும் அதன் அறிகுறியாக அவன் தலை யாடுகிறது. ஆனால் ஆத்மா, சிரத்தில் புருவம் அல்லது மற்ற ஸ்தலங்களில் இருப்பதானால் இப்படி நிகழ்வது அஸாத்யம்.

உறக்கத்தின்போது புருவத்தில் ஆத்மாவின் அநுபவம் ஏற்படுவதில்லை. ஆதலால் ஆத்மாவின் ஸ்தானமாக அதைச் சொல்லக்கூடாது. அப்படிச் சொல்லுவதானால் ஸ்வஸ்தானத்தை விட்டுப் பிறழ்கிறது என்று சொல்லவேண்டும். அது அசம்பாவிதம்.

உண்மை என்னவென்றால் சாதகன் எந்தச் சக்கரத்தில் அல்லது மத்தியில் தன் மனத்தைச் செலுத்துகிறானோ அதில் தன் அநுபவத்தை அடைகிறான். அதனாலேயே அந்தச் சக்கரமோ நடுவோ ஆத்மாவின் ஸ்தானமாய்விடுவதில்லை.

கபீரின் புதல்வனாகிய கமாலைப்பற்றி ஓர் சரித்திரமிருக்கிறது. இதனால் புருவமோ, சிரமோ ஆத்மாவின் நிலயமாகாது என்பது நன்கு விளங்கும்.

கபீர் சிறந்த ராமபக்தர். தமது பிரபுவின் கீர்த்தியைப் பாடிவரும் அதிதிகளை வரவேற்று ஸத்காரம் செய்து உபசரிப்பார். ஒருசமயம் இந்த பக்த பந்தியை உண்பிப்பதற்கு வேண்டிய பொருள் அவரிடம் இல்லாமற் போயிற்று. மறுநாள் பொழுது விடியுமுன் தம் நெறி தவறாதபடி ஏதாவது ஒருவகையில் ஏற்பாடு செய்வதைத் தவிர வேறு வழி இல்லை. ஆகையால் கபீரும் அவருடைய மகனும் தேவையான உணவுப்பொருளை யடையப் புறப்பட்டார்கள். தகப்பனும் மகனும் ஒரு வியாபாரியின் வீட்டிற் கன்னம்வைத்து சாமான்களை யெல்லாம் எடுத்துக்கொண்டார்கள். பிறகு மகன் உள்ளே போய் வீட்டிலுள்ளவரை எழுப்பி, அவர்கள் வீடு கொள்ளையடிக்கப்பட்ட தென்று ஸத்யத்தின் பொருட்டுச் சொன்னான்.

வீட்டிலுள்ளவரை எழுப்பிவிட்ட பிறகு பையன் மறுபுறத்திலுள்ள தன் தந்தையிடம் சேர முயன்ருன். துவாரத்தின் வழியாகத் தப்பித்துக்கொள்ள முயலும் போது அவனுடம்பு அதிற் சிக்கிக்கொண்டது. பின் தொடரும் வீட்டாரால் இன்னுனென்று கண்டுபிடிக்கப் படக்கூடாது. கண்டுபிடிக்கப்பட்டால் மறுநாள் ஸமாராதனை நடைபெருது. ஆகையால் பையன் தன் தகப்பனைக் கூப்பிட்டுத் தன் தலையைத் துணித்துக்கொண்டு போகும்படி சொன்னுன். பக்தர்களின் ஸத்காரத்திலேயே கண்ணுங்கருத்துமா யிருந்த கபீர் யாதொரு தியக்கமுமின்றி மகன் கருத்தின்படி செய்து உணவுப் பொருள்களுடன் தப்பித்துப் போனுர். ஒருவரும் கண்டுபிடிக்க முடியாதபடி தலையை வீட்டில் மறைத்து வைத்தார். மறுநாள் பக்தர்களுக்கு சமாராதனை நடந்தது. முன்னிரவு நிகழ்ந்தவைபற்றி கபீர் சிறிதும் கவலுறவில்லை. என்மகன் இறக்கவேண்டு மென்பதே ஸ்ரீராமர் திருவுள்ளமாயின் அது நடக்கட்டுமே யென்று தம்மைத் தேற்றிக்கொண்டார். மாலையில் பஜனை கோஷ்டியோடு ஊர்வலம் வந்தார்.

இதனிடையில், கொள்ளையிடப்பட்ட வீட்டார் அரசனிடம் முறையிட்டுக் கமாலின் முண்டத்தையும் ஆஜர் செய்தனர். திருடனைத் தேட எவ்விதத்திலும் இது உதவவில்லை. அந்த உடலுக்குடையவனைக் கண்டுபிடிக்கும்பொருட்டு அதை ஒரு பொதுத்தலத்திற் கட்டி வைக்க அரசன் உத்தரவிட்டான். ஈமக்கடன்களைப் புரியாமல் விடாத உற்ருருறவினர் வந்து முண்டத்தைத் தமதென்று கொண்டுபோவார்கள். அப்போது அங்கு ஒளித்து வைக்கப்படும் காவலாளர் அவர்களை விசாரித்துச் சிறைப்படுத்துவார் என்பது அரசன் கருத்து.

கபீர் பஜனை கோஷ்டியார் பாடிக்கொண்டு பூரண பக்தி யாவேசத்தோடு அவ்வழி வந்தனர். கட்டை போல் விறைத்துக் கிடந்த கமாலின் முண்டம் அனைவரும் வியக்கும்படி கர தாளஞ் செய்தது.

ஆத்மாவின் ஸ்தானம் சிரம் அல்லது புருவமத்தியம் என்கிற கொள்கை உண்மையல்ல வென்பது இக்கதையால் நிரூபிக்கப்பட்டது.

மற்றும் யுத்தகளத்தில் ஒரு சிப்பாயின் தலை திடீரென்று துணிக்கப்படுகிறபொழுது, அந்த முண்டம் இறந்துவிழும் விரையிற் சிறிதுநேரம் சண்டையிடல் போல் ஓடிக் கைகால்களை உதைத்துக் கொள்ளுகிறதும் மேற்கூறிய ஸித்தாந்தத்துக்கு வேறோர் நிதர்சனம்.

சீ:—ஆனால் கமாலின் தேகம் பல மணிகளுக்கு முன்பே ஜீவனற்றுவிட்ட தல்லவா? அது எப்படி கர தாளம் போட முடியும்?

ம:—நீ இறப்பு என்று சொல்வது கமாலுக்கு அபூர்வமான அனுபவம் அல்ல. அவன் பால்யத்திலேயே நடந்த சரித்திரம் இதோ இருக்கிறது.

கமால் பையனா யிருந்தபொழுது அவனோடு சம வயதுடைய ஒரு தோழன் இருந்தான். அவ்விருவரும் கோலி விளையாடுவார்கள். ஒருவன் மற்றொருவனுக்கு ஏதாவது ஆட்டங்கள் பாக்கி கொடுக்கவேண்டி யிருந்தால், அதை மறுநாள் கழித்துவிட வேண்டுமென்பது அவர்களுக்குள் பொது விதி. அவன் தோழன் ஒரு ஆட்டம் பாக்கி. மறுநாள் காலை கமால் தன் பாக்கியைத் தண்டிக்கொள்ள அந்தப் பையன் வீட்டுக்குப் போனான். அந்தப் பையனின் உடம்பு தாழ்வாரத்தில்

நீட்டிக்கிடந்தது. அவனது பந்துக்கள் அவன் பக்கத்தில் அழுதுகொண்டிருந்தார்கள்.

சமாசாரம் என்ன என்று கேட்டான் கமால். "அவன் நேற்று மாலை என்னுடன் விளையாடிக்கொண்டிருந்தானே? எனக்கு ஒரு ஆட்டம் பாக்கிகூடக் கொடுக்கவேண்டுமே" என்றான். பந்துக்கள் இதைக் கேட்டுவிட்டு, பையன் இறந்துவிட்டான் என்று சொல்லி அழுதார்கள். கமால், "இல்லை, இல்லை, அவன் இறக்கவில்லை. என்பாக்கியைத் தீர்க்காமல் என்னை ஏமாற்றிவிட இறந்துவிட்டதாகப் பாசாங்கு செய்கிறான்" என்றான். பந்துக்கள் மறுத்து, "பையன் உண்மையில் இறந்துவிட்டான்; உடல் சில்லிட்டு விறைத்திருக்கிறது; நீயே நேராகக் காண்" என்று கமாலிடம் சொன்னார்கள். "ஆஹா, இதெல்லாம் வெறும் பாசாங்கு என்று எனக்குத் தெரியும். உடல் விறைத்துச் சில்லிட்டால் என்ன? நான்கூட அப்படியே நடிக்க முடியும்" என்று சொல்லிக் கீழே படுத்துக்கொண்டு கண்ணைமூடித் திறப்பதற்குள் இறந்துவிட்டான். தங்கள் பையன் இறந்ததற்காகப் பரிதாபமாய் அழுதுகொண்டிருந்த அந்தப் பந்துக்கள் கமால் இறந்ததைக்கண்டு திகைத்துத் துன்புற்று அழுதார்கள். கமால் திடுக்கென்றெழுந்தான். "பார்த்தீர்களா? நீங்கள் சொல்லுகிறபடி நானுந்தான் செத்துக் கிடந்தேன். இதோ மறுபடியும் உயிரோடெழுந்து ஆடுகிறேன். இப்படித்தான் அவனும் ஏமாற்ற விரும்புகிறான். ஆனால் அவன் தன் ஏமாற்றத்தால் என்னிடமிருந்து தப்பிப்போக முடியாது" என்றான்.

கடைசியில் கமாலின் மகிமையால் இறந்தவன் உயிர் பெற்றெழவே, அவன் தன் பாக்கி ஆட்டத்தையும் வசூல்

செய்துகொண்டான். கருத்தென்னவென்றால் உடலின் இறப்பால் ஆத்மா இறப்பதல்ல. பிறப்பிறப்பால் அதற்கு உடலொடு சம்பந்தம் குறைவதில்லை. புருவ நடு முதலிய ஏதேனுமோர் சக்காம் அல்லது ஆதாரத்தின் அப்யாஸ பலத்தால் உண்டாகும் அனுபவத்தால் ஆத்மா அவ்விடத்திற் கட்டுப்பட்டதாகாது. அகமக மெனப் பிரத்யக்ஷமாக ஸ்புரித்துக் கொண்டிருக்கும் ஆத்மா நித்யமும் சாசுவதமுமானது. அது மனதின் அவஸ்தாத்திரயம், பிறப்பிறப்பு இவைகளையெல்லாம் கடந்து நிற்கிறது.

சீ:—ஆத்மாவின் ஸ்தானம் இதயமாயிருந்தாலும் எந்தச் சக்கரத்தில் வேண்டுமானாலும் அது உணரப்படலாம் என்று ஸ்ரீபகவான் சொல்லுவதினால், புருவமத்யத்திலேயே லக்ஷயம் வைத்து தீவிரமாகத் தியானஞ் செய்தால் அதுவே ஆத்மாவின் நிலயமாகிவிடக் கூடாதா?

ம.—உனது மனத்தை ஒருமுகப்படுத்துவதற்காக ஏதாவது ஒரு ஸ்தானத்தைக் குறிப்பிட்டு தியான சாதனமாக அதை வைத்துக்கொள்ளும் வரை, ஆத்மாவின் ஸ்தானத்தைப் பற்றிய கொள்கை யெல்லாம் வெறும் ஊகமே. நீ உன்னை திரஷ்டாவாகவும் நீ தியானிக்கிற ஸ்தானம் திருசியமாகவும் கொண்டதால் இது வெறும் பாவனையே. இதற்கு மாறாக, காண்பானையே கண்டு ஆத்மாவில் ஒடுங்கினால் நீ அதனுடன் ஒன்றுபடுகின்றாய். அதுவே இதயம்.

சீ:—அப்படியானால் புருவமத்யத்தை லக்ஷயமாகக் கொள்வது உசிதமா?

சீ:—த்யேய வஸ்து தியானிப்பானைவிட்டு அன்னியமாகாமையே எந்தத் தியானத்துக்கும் முடிந்த நிலை. திருக்கு திருச்யம் ஒன்றாகும் தன்னிலையே இதயம்.

புருவமத்யத்தில் லக்ஷ்யம் வைப்பது சாதனைமுறைகளிலொன்று. அதனால் தாத்காலிகமாக எண்ணங்கள் உள்ளடங்குகின்றன. காரணம் என்னவென்றால் எண்ணங்கள் யாவும் மனத்தின் பஹிர்முக விருத்திகள். மனோ விருத்தி முக்கியமாகக் காட்சியைப்பற்றி நிற்கும். அந்தக் காட்சி ஸூக்ஷ்ம மனோமயம் அல்லது ஸ்தூல பௌதிகமாயிருக்கலாம்.

புருவமத்திய லக்ஷ்ய சாதனையில் ஜபமும் கூடவே செய்யவேண்டும். ஏனென்றால் மனத்தைக் குவிப்பதிலோ, கலைப்பதிலோ ஊனக்கண்ணுக்குப் பின் ஊனக் காதே முக்கியமானது. மனக்கண் அதாவது பாவனாபலத்திற்கு அடுத்தாற்போல் மனச்செவி (மனத்தாற் கேட்பது) முக்கியம்.

ஆகையால் மனக்கண்ணைப் புருவநடு முதலிய லக்ஷ்யங்களில் வைக்கும்பொழுது நாமஜபம் அல்லது மந்திரஜபமும் செய்யவேண்டும். அப்படி இல்லாவிடில் தியான லக்ஷ்யத்தை இழந்து விடுவாய்.

இந்த சாதனத்தில் நாமம் அல்லது மந்திரம் லக்ஷ்யமாய்க் கொண்ட மத்யத்தில் ஒடுங்கிவிடுகிறது. சுத்த சைதன்யம், ஆத்மா அல்லது இருதய ஸாக்ஷாத்காரமே முடிவான அநுபூதி.

சீ:—ஏதோ ஒரு லக்ஷ்யம் அல்லது சக்காரத்தில் தியானஞ்செய்வதை பகவான் ஏன் குறிப்பிட்டுச் சொல்வதில்லை.

ம:—யோக சாஸ்திரங்கள் ஸஹஸ்ராரம் ஆத்ம ஸ்தானம் என்று குறிப்பிடுகின்றன. புருஷஸூக்தத்தில் ஹ்ருதயமே ஸ்தானமாகக் கூறப்படுகிறது. இவ்விரண்

டில் எது சரியான ஸ்தானமென்னும் சந்தேகம் சாதகனுக்கு வராதபடி, அஹம் அல்லது அஹம்விருத்தியை உதவியாகக் கொண்டு மூலத்தைத் தேடச் சொல்லுகிறேன். ஏனென்றால் யாரும் தன்னைப்பற்றிச் சந்தேகிப்பது அஸாத்யம். நானிருக்கிறேனென்பது அனைவர்க்கும் சாமான்ய அநுபவம். எவ்வித சாதனையிலும் தன்னிருப்பின் மூலத்தை நாடி உள்ள உணர்வடைவதே முடிவான லக்ஷ்யம். அதுவே 'நான் இருக்கிறேன்' என்கிற ஸாமான்ய அநுபவத்திற்கு ஆதாரம். ஆகையால் நீ ஆத்மவிசாரம் செய்வதால் ஆத்மாவாகிய ஹ்ருதயத்தையே அடைகிறாய்.

VI

அஹமும் அஹம்விருத்தியும்

சீ:—அகந்தையினால் தொடங்கப்பட்ட விசாரம் அவ்வகந்தையின் அசத்யத்தை எப்படி வெளிப்படுத்தும்? இது பொருத்தமற்ற தல்லவா ?

ம:—அஹம்விருத்தி எழும் மூலத்துள் மூழ்கினால் அகந்தையின் பொய்த்தோற்றத்தைக் கடப்பாய்.

சீ:—இந்த அகம்விருத்தி மூவித அகந்தையில் ஒன்றுதானே? யோகவாஸிஷ்டமும் சுருதிகளும்அகந்தை மூன்று விதமென்று கூறுகின்றனவே ?

ம:—ஆம். ஸ்தூல சூக்ஷ்ம காரணமாகிய மூன்று தேகங்களையுடையது அகந்தை யென்று சொல்லப்படுகின்றது. ஆனால், இவ்விதம் சொல்வது தத்துவவிளக்கத்தின் பொருட்டே. விசாரமார்க்கம் அகந்தையின்

உருவத்தையே ஆதாரமாகக் கொள்வதாயின் இந்த விசாரம் முற்றும் அஸாத்யமே யாகும். ஏனென்றால் இந்த அகந்தை கொள்ளும் ரூபங்கள் எண்ணிறந்தன. ஞானவிசாரத்திற்கு, அஹம்விருத்தி ஒன்றே அகந்தையின் ரூபமென்று கொள்ளவேண்டும்.

சீ:—அஹம் விருத்தியின் மூலத்தைத் தேடுவதால் பூரணஞானம் அடையக்கூடுமா?

ம:—அஹம்விருத்தியைக் கொண்டு ஆத்மவிசாரம் செய்வது, நாய் தன் எஜமானனை அவனது மோப்பங் கொண்டு தேடுவதுபோலாம். எஜமானன் எங்கோ ஓர் தூரமான இடத்திலிருக்கலாம். ஆனாலும் நாய் அவனைத் தடையின்றித் தேடிப் பிடிக்கும். இதற்கு எஜமானனின் மோப்பமே உண்மையில் ஆதாரம். அவன் அணிந்த உடை, கச்சை, உயரம் போன்றவைகளை அது ஆதாரமாகக் கொள்வதில்லை. அது தேடும்போது அம்மோப்பத்தைத் தவிர வேறொன்றிலும் மனத்தைச் செலுத்தாமல், கடைசியில் அவனைச் சென்றடைகிறது.

அதுபோலவே, ஆத்மவிசாரத்தில் உன் அநுபவத்தின் பிரதான ஆதாரமாகிய தன்மை என்னும் அஹம் விருத்தியே உனக்குத் தவறாத உபாயமாகும். அதைத் தவிர மற்றெந்த உபாயமும் ஆத்மாவை யடைய நேரான சாதன மாகாது.

சீ:—எத்தனையோ விருத்திக ளிருக்க அஹம்விருத்தியை மாத்திரம் ஆத்மாவை யடைய நேரான உபாய மெனக் கூறுவதேன்?

ம:—அஹம் என்னும் இப் பதமே நிரம்பப்பொருள் உள்ளதாக இருக்கிறது. வடமொழி எழுத்துக்களின்

முதலெழுத்து 'அ'. கடையெழுத்து 'ஹ'. இவ்விரு எழுத்துக்களும் சேர்ந்த இச்சொல்லால் அனைத்தும் கவரப்படுகிறது. ஏனெனின் அஹமென்பது பாரமார்த்திக இருப்பின் உருவமாகிய ஆத்மாவையே குறிக்கிறது.

தன்மை அல்லது நான் என்பது அஹம்விருத்தி என வழங்கினாலும், அது மனத்தின் மற்ற விருத்திகளைப்போல் ஓர் விருத்தியல்ல. ஒன்றுக்கொன்று சம்பந்தமற்ற மற்ற விருத்திகளைப்போல் அல்லாமல் இந்த அஹம்விருத்தி மனத்தின் ஒவ்வொரு விருத்தியோடும் சம்பந்தமுடையது. அஹம்விருத்தி யின்றி மற்ற விருத்தி எப்படி நிற்கமுடியும்? ஆனால், அஹம்விருத்தியோ மனத்தின் ஏனைய விருத்திகளின் உதவியற்று தானே தனித்து நிற்கமுடியும். ஆகையால் ஸ்வபாவத்திலேயே மற்ற விருத்திகளிலிருந்து அஹம்விருத்தி பிரத்யேகமானது.

ஆகையால், அஹம்விருத்தியின் ஆதாரத்தைத் தேடல் என்பது அகந்தையின் ரூபங்களில் ஏதோ ஒன்றைத் தேடுதலல்ல. இந்த நான் என்பது எங்கெழும் என்கிற மூலத்தைத் தேடுவதேயாகும். அஹம்விருத்தியே எல்லா விருத்திகளின் ஆதாரமானதால், அஹம்விருத்தி ரூபமாகிய அஹந்தையின் மூலத்தைத் தேடி யறிந்தால், அகந்தை கொள்ளக்கூடிய ரூபங்களுள் ஒவ்வொன்றையும் கடந்ததாகும்.

சீ :—அஹம் விருத்தியிலேயே அகந்தையின் காரியமான மற்றெல்லா ரூபங்களும் அடங்கியிருக்கிறதாயினும், அவ்விருத்தியை மாத்திரம் விசாரத்தின் உபாயமாகக் கொள்வானேன்?

ம :—ஏனென்றால் உன் இருப்பின் மறுக்கமுடியாத ஆதாரம் அது ஒன்றேயாகும். மேலும் அதன் மூலத்

தைத் தேடுவதே ஆத்மாநுபூதிக்கு நேரானவழி. ஏனென்றால், அகந்தை காரணதேகத்தோடுகூடி சுழுத்தியிருளில் மூழ்கிவிடும்போது நீ அதை லக்ஷ்யமாகக் கொண்டு விசாரிப்பது அஸாத்யமல்லவா?

சீ:—ஆத்மவிசாரம் செய்வது ஜாக்ரத்தில். அகங்காரமோ ஜாக்ரத்துக் கன்னியமாகிய சூக்ஷ்மகாரண தேஹங்களுடன் கூடினது. அப்படியிருக்க ஜாக்கிரத்தில் நடத்தப்பட்ட விசாரத்தால் சூக்ஷ்மகாரணங்கள் அகப்பட்டு அழிவுறுவ தெப்படி?

ம:—ஆத்மவிசாரத்தால் அகம் நசிப்பதில் சந்தேகமேயில்லை. மூலமே அடிபட்டுவிடுமாகையால் அகந்தையின் சூக்ஷ்மரூபங்களைப் பொருட்படுத்தவேண்டியதில்லை.

சீ:—அகந்தையை ஆதாரமாகக் கொள்ளாத அகண்ட கேவல ஆத்மாவே லக்ஷ்யமாகவிருக்க, அதை அகம்விருத்தியின் மூலமாக விசாரிப்பதால் பயன் என்ன?

ம:—அகந்தை தோன்றிமறையும் தன்மையுடையது. அது பற்பல ரூபங்கொள்ளும். ஆயினும் வியவஹாரத்தில் அது சிஜ்ஜடக்கிரந்திமாத்திரமாய் இயங்கும். உணர்வற்ற ஜடவுடலுக்கும் பூரண ஸச்சித்துக்கும் இடையில் உதிப்பதே சிஜ்ஜடக்கிரந்தி. அகம்விருத்தியின் மூலவிசாரத்திற்கு ஆதாரம் சிஜ்ஜடக்கிரந்தியின் சிதம்சமே. ஆகையால் இந்த விசாரத்தின் முடிவு ஆத்ம சைதன்ய பூர்ணானுபூதியே.

சீ:—ஞானியின் அநுபூதியாகிய சுத்த சைதன்யத்துக்கும், "நானிருக்கிறேன்" என்கிற மறுக்கமுடியாத ஸாமான்ய அநுபவத்திற்குமுள்ள ஸம்பந்தம் என்ன?

ம :—சமசுத்த ஸச்சிதாத்மாவே ஹ்ருதயம். உண்மையில் அதுவே நீயாக இருக்கிறாய். இது ஹ்ருத்+அயம் (மத்தியம்+இது) என்னும் பதப்பொருளால் குறிக்கப்படுகிறது. ஹ்ருதயத்திலிருந்தே 'நான்' என்பது உதித்து தன் ஆதாரமாம் இருப்பை உணர்த்துகிறது. தன்னியல்பில் அது சுத்த ஸத்வமே. ராஜஸ தாமஸமற்ற சுத்த ஸத்வ ஸ்வரூபமாகவே ஞானியின் அகம் இருப்பதாகக் காணப்படுகிறது.

சீ :—ஞானியினிடம் அகந்தை சுத்தஸத்வமாய்இருப்பதால்தானே அது உண்மையாகத் தோன்றுகிறது.

ம:—அல்ல, ஞானி, அஞ்ஞானியென்ற வித்யாஸமின்றி அகந்தை எவ்வித உருக்கொண்டாலும் அது வெறுந்தோற்றமே. ஆனால் ஜாக்கிரமும் உலகமும் மெய்யெனப் பிரமிக்கும் அஞ்ஞானி அகந்தையையும் மெய்யாகவே காண்கிறான். மற்றவர்களைப் போல் ஞானியும் நடிப்பதைக் காண்கிற அஞ்ஞானி அந்த ஞானிக்கும் யாதேனும் ஒரு ஜீவோபாதி கற்பிக்க நேருகிறது.

சீ :—அப்படியானால், ஞானியினிடம் அகம்விருத்தி எப்படி விவகரிக்கிறது?

ம :—அவனிடம் விருத்தி வியாபாரமே இல்லை. இதயமாயிருப்பதே ஞானியின் லக்ஷணம். ஏனெனில் உபநிடதங்கள் பிரஜ்ஞானமெனக் கூறுகிற சமசுத்த சைதன்யமும் அவனும் அனன்யமே. பிரஜ்ஞானமே கேவலமாம் பிரம்மம். பிரம்மமே பிரஜ்ஞானம்.

சீ :—அஞ்ஞானிமட்டும் இந்த ஸத்யத்தை அறியாததேன்?

ம :—ஹ்ருதயசைதன்யத்தின் பிரதிபிம்பமாகிய மனத்தை மாத்திரமே அஞ்ஞானி பார்க்கிறான். அவன்

உள்ள உணர்வை நாடுவதில்லை. ஏன்? அவன் மனம் பஹிர்முகத்திலேயே பிரவிருத்திக்கிறது.

சி:—எங்குமாய் விளங்கும் ஹ்ருதயத்தின் அகண்ட சைதன்யம் அஞ்ஞானிக்கு விளங்காதபடி தடுப்பதெது?

ம:—கடத்தின் நீரில் அதன் குறுகிய எல்லைக்குள் பிரம்மாண்ட சூரியன் பிரதிபிம்பிப்பதுபோல், ஜீவனது சூக்ஷ்ம மனோவாசனைகள், பிரதிபிம்பிக்கும் பளிங்காகி, ஹ்ருதயத்திலிருந் தெழும் சைதன்யத்தின் வியாபக அகண்ட தேஜஸைப் பற்றிக்கொண்டு, மனமெனும் தோற்றத்தை வெளிப்படுத்துகிறது. இப் பிரதிபிம்பத்தைப் பார்த்து அஞ்ஞானி தான் பரிபூர்ண பிரம்மமாயிருந்தும் தன்னை அற்பஜீவ னென்றே பிரமிக்கிறான். மனம் அகம்விருத்தியின் மூலத்தைத் தேடும் வகையால் உண்முகப்பட வாசனைகளெல்லாம் தாமே நசிக்கின்றன. பிரதிபிம்ப ஆதாரமற்றபொழுது மனம் இதயமாகிய ஏக சத்திய ஒளியில் ஒடுங்கி மறைந்துவிடுகிறது. அகம் விருத்தியின் மூலத்தை ஒருமுகமாய் சிரத்தையுடன் விசாரிப்பதே முக்யகர்த்தவ்ய மென அப்பியாஸி அறிய வேண்டியது.

சி:—அவன் செய்யும் முயற்சியெல்லாம் ஜாக்ராவஸ்தையின் மனத்திற் குட்பட்டதாகவே இருக்க, அதன் மூன்று அவஸ்தைகளில் ஒன்றில்மாத்திரம் நடத்தும் இந்த விசாரணை எப்படி மனத்தையே நாசமாக்கும்?

ம:—அகம்விருத்தியின் மூலவிசாரணை அப்பியாஸி விழிப்பில்மாத்திரமே நடத்துகிறானென்பது உண்மையே. அவன் மனம் நாசமாயிற் றென்று சொல்லமுடியாது. அவஸ்தாக்கிரம மாறுதல்களும் அவஸ்தாத்ரயங்களுமே வெறும் தோற்றமெனவும், அவை தன் அந்தர்முக நிஷ்

டையை எவ்விதத்திலும் பாதிப்பதில்லையெனவும் அப்பியாஸபலத்தால் தானே அறிவான்.

ஆத்மவிசாரம் தீவிர அந்தர்முக மனத்தினால் மாத்திரம் சாத்யம். அஹம்விருத்தியின் மூலவிசார பலனாக அடையப்படுவது, மனத்தின் பிரதிபலன ஒளி முற்றும் ஒடுங்கிய சமசுத்த சைதன்ய ஒளியாகிய இதயமே.

சீ:—ஆனால், ஞானிக்கு மனத்தின் மூன்று அவஸ்தைகளின் பாகுபாடு இல்லையா?

ம:—சைதன்ய ஒளியில் மனமே கரைந்து இழக்கப்பட்டதென்றால், எப்படி வித்தியாஸ மிருக்கமுடியும்? ஞானிக்கு அவஸ்தைகள் மூன்றும் முற்றும் பொய்யே. ஆனால் அஞ்ஞானி இதை அறியமுடிவ தில்லை. ஏனெனில் அவனுக்கு விழிப்பு பிரமாணம். ஞானிக்கோ ஸத்யம் பிரமாணம். சுத்தசைதன்யமாகிய இந்த சத்யம் ஸ்வதஸ்ஸித்தமாய், நித்தியமாய், கனவுநனவுதுயிலென்னும் மூன்றவஸ்தைகளுக்கும் ஆதாரமாய் இருக்கிறது. இந்த ஸத்யத்தில் ஒன்றிய ஒருவனுக்கு மனமுமில்லை; மூன்றவஸ்தைகளுமில்லை. ஆகையால் உள்முகம் வெளிமுகமு மில்லை.

அவன் நிலை என்றும் விழித்த நிலை. ஏனெனில் நித்யமாகிய ஆத்மாவில் அவன் விழித்தவனாக இருக்கிறான். அவன் நிலை நித்ய சொப்பனநிலை. ஏனெனில் அவனுக்கு இந்த உலகமென்பது தோன்றிமறையும் கனவே. அவன் நிலை என்றும் உறங்கும் நிலை. ஏனெனில் அவன் எப்போதும், உடல்நான் எனும் உணர்வற்றவனாக இருக்கிறான்.

சீ:—அப்படியானால் பகவான் நனவு, கனவு, துயில் ஒன்றிய ஓர் நிலையில் என்னுடன் பேசுகிறாரென்று நான் கருதவா?

ம :—உன்னறி விப்போது மனம் வெளிமுகப்பட்ட அளவிற்பட்டிருப்பதால் இக்கணத்தை நீ விழிப்பென்கிருய். ஆனுல் உன் மனமோ ஆத்மாவில் உறக்கங்கொண்டிருக்கிறதாகையால் உண்மையில் இப்போது நீ உறங்குபவனுகவே இருக்கிருய்.

சீ :—எனக்கு நித்திரை என்பது வெறும் சூனியமே.

ம :—அதற்குக் காரணம், உன் விழிப்புநிலை சலன மனத்தின் வெறுங் கொந்தளிப்பேயாதல்.

சீ :—சூனியமென்பதால் எனக்கு உறக்கத்தில் எவ்வித உணர்வு மில்லை என்கிறேன். அது எனக்கு எதுவும் இல்லாதது போன்றதே.

ம :—ஆனுல் உறக்கத்தில் நீ இல்லையா ?

சீ :—நான் இருப்பதை உணர்கிறதில்லையே !

ம :—உன் உறக்கத்தில் நீ இருப்பதில்லை என்பது உன் நிஜமான வாதமா ? (சிரிப்பு). நீ ராமனுக உறங்கப் போய் கிருஷ்ணனுக அதினின்று விழித்தனையா ?

சீ :—நான் ராமனென்று என் ஸ்மிருதி பலத்தால் அறியலாம்.

ம :—எனினும் தொடர்ந்த உணர்வு இருந்தாலொழிய அந்த ஸ்மிருதி எப்படி ஸாத்யமாகும்.

சீ :—ஆனுல் அவ்வுணர்வை யான் உணரவில்லையே !

ம :—இல்லை. உறக்கத்தில் உனக்கு உணர்வில்லை யென்று சொல்வது யார் ? உன் மனந்தானே ! ஆனுல் உறக்கத்தில் உன் மனம் இருந்ததில்லையே ! உறங்கிய பொழுது உன் நிலை யனுபவத்தைப்பற்றி உன் மனம் சொல்லும் சாக்ஷியத்திற் பிரமாணம் என்ன? உறங்கும்

போது உன் இருப்பு அறிவுகளை மறுக்க உன் மனத்தின் ஸாக்ஷ்யத்தைக் கோருவது, உன் பிறப்பைப் பொய் யெனக் கூற உன் மகனின் ஸாக்ஷ்யத்தை அபேக்ஷிப் பது போலாம்.

முன்பொருதரம் இருப்பும் உணர்வும் வெவ்வேறல்ல என்று கூறியது நினைவுளதா? எம் முகாந்தரத்தினலா வது உறக்கத்தில் உன்னிருப்பை நீ மறுக்க முடியாத பக்ஷத்தில் நீ உன்னிருப்பை உணர்ந்தவனுமாம் என்ப துறுதி.

உன் உறக்கத்தில் நீ அறியாதது உன் உடலிருப்பை. இவ் வுடலுணர்வே நித்யமான உன்னறிவெனப் பிரமிக்கி ருய். இவ் வகம்பாவத்துக்கு மூலமான பிரஜ்ஞானம், மனத்தின் மாறுமவஸ்தைகள் மூன்றிலும் தான் மாரு மல், அவற்றினதாரமாய், உன்னெருமையுணர்வுக்கொரு குறையுமின்றி என்றுமுள்ளது.

பிரஜ்ஞானம் மூன்றவஸ்தைகளுக்கும் அப்பாற்பட் டது. அவைகளிருந்தும், இல்லாமலிருந்தும், அது தனித்திருக்கக்கூடியது.

உன் விழிப்புநிலையில் அகம்விருத்தியின் மூலத்தை நாடி, நீ அடையவேண்டியது அவ்வுண்மையைத்தான். இவ் விசாரத்தின் தீவிரசாதனையே, மனமும் அதன் மூன் றவஸ்தைகளும் இருப்பற்றனவென்றும், நீ அந்த நித்திய அகண்ட சைதன்யமாம் ஸித்து ஆத்மா (அல்லது) இத யமே என்றும் வெளிப்படும்.

கோவிலூர்
KOVILOOR
MADALAYAM
மடாலயம்

பிழைதிருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
7	26	இப்படிப்மட்ட	இப்படிப்பட்ட
70	16	பெய்யாகவே	மெய்யாகவே
72	28	மட்டும் என்	என்
,,	,,	இப்பொழுது	இப்பொழுதுமட்டும்
74	5	உண்மைமில்	உண்மையில்
76	12	அனுபவப்படி.	அனுபவப்படி,
77	5	யற்றது ?	யற்றது ;
80	7	நப்பி	நம்பி

கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்-630 307

4983
R65 (3600)

திருவண்ணாமலை

ஸ்ரீ ரமணாச்ரம புஸ்தகாலயம்

பகவான் ஸ்ரீ ரமணமஹர்ஷிகள் அருளியவை.

		ரூ.	அ.	பை
ஸ்ரீ அருணாசல ஸ்துதி பஞ்சகம்	...	0	3	0
உபதேசநூன்மாலை (உபதேசவுந்தியார். உள்ளது நாற்பது, அநுபந்தம், ஏகான்ம பஞ்சகம், அப்பளப் பாட்டு, ஆன்ம வித்தை அடங்கியது)	...	0	3	0
அநுவாதநூன்மாலை [செய்யுள்] (ஞானசாரவிசார படலம், ஆத்மசாக்ஷாத்காரப்பிரகரணம், பகவத் கீதாசாரம், தக்ஷிணாமூர்த்தி தோத்தரம், ஆன்ம போதம், குரு ஸ்துதி, அத்தாமலகம் சேர்ந்தது)	...	0	4	0
அநுவாதநூன்மாலை [வசனம்] (விவேகசூடாமணி. திருக்கு திருசிய விவேகம், சேர்ந்தது)	...	0	8	0
அருண்மொழித்தொகுப்பு (நானார், விசாரசங்கிரகம், உபதேசமஞ்சரி அடங்கியது)	...	0	8	0
ஸ்ரீ ரமண நூற்றிரட்டு (ஷை எல்லாம் அடங்கியது)	...	2	0	0
உபதேச வுந்தியாரும் கலிவெண்பாவும்	...	0	2	0
உபதேசஸாரம் (நாகரச்லோகமும் பாஷ்யத்தமிழும்)	...	0	2	0
நான் யார் !	...	0	2	0
விசாரமணி மாலை	...	0	2	0
ஆன்மபோதம்	...	0	3	0

மஹர்ஷிகளது பக்தர்கள் செய்தவை.

		ரு. அ. பை
ஸ்ரீ ரமண விஜயம் (ஜீவிய சரித்திரமும் உபதேச மொழிகளும்)	...	(அச்சில்)
உள்ளது நாற்பது (அநுபந்தத்துடன்) விரிவுரை	...	1 0 0
ஸ்ரீ ரமண கீதை	...	0 8 0
ஸ்ரீ ரமண சரித அகவல்	...	0 6 0
பகவான் ஸ்ரீ ரமணமஹர்ஷிகளின் சரித்திரமும் உபதேச மொழிகளும்	...	(அச்சில்)
ஸ்ரீ ரமண ஸ்துதி பஞ்சகம்	...	0 2 0
ஸ்ரீ ரமணத் தியானம்	...	0 1 0
குரு ரமணவசன மாலை	...	0 12 0
ஸ்தோத்ர ரத்னவளி	...	0 6 0
ஸத்குரு மாலை	...	0 4 0
ஸ்ரீ ரமண நாற்பது (சுலோகமும் தமிழும்)	...	0 1 0
ஸ்ரீ ரமணமஹர்ஷி (112 படங்களுடன்)	...	1 4 0
திருச்சுழி மாகாத்மியம் (அட்டை)	...	0 10 0
ஷை (சாதா)	...	0 8 0
ஸ்ரீ ரமண தோத்திரம்	...	0 2 0
ஸ்ரீ மஹர்ஷி	...	0 1 0

ஸ்ரீ நிரஞ்ஜனனந்த ஸ்வாமி, ஸர்வாதிகாரி,

ஸ்ரீ ரமணாச்ரமம், திருவண்ணமலை